www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර් ஆக.02—08,1998 ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 268

## தயாராக இருந்த கரும்புலி அணி

## திட்டத்தில் ஒரு கசிவு



## வாஜ்பேயியின் கனவு

## கண் எதிரே தோன்றினாள்

## கட்டை விரலும் காதல் குணங்களும்!



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## மறைமுக அச்சுறுத்தலா?

**அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.**

தமிழ்ப் பத்திரிகையாளர்
இருவர் கைதான விடயத்தில்
சகோதர இன
பத்திரிகையாளர்கள்
காண்பித்த அக்கறை
போதுமானதல்ல!

சிங்களப் பத்திரிகையாளர்
ஒருவர் இவ்வாறு
கைதாகி இருந்தால்,
எப்படிக் கொதித்திருப்பர்?

பத்திரிகையாளர் என்பதால்
கைதாகவில்லை:
புலிகளோடு தொடர்பு
என்ற சந்தேகத்தில்
கைதானதாகக் கூறப்பட்ட
விளக்கம் திருப்தியானதல்ல!

அந்த விளக்கத்தை
வைத்துக்கொண்டு
பத்திரிகையாளர்கள் என்ற
ஒற்றுமையோடு
குரல் கொடுக்காமல் நழுவியது
மன ரீதியானதல்ல;
இன ரீதியானதே!

குறிப்பாக
திரு. மாணிக்கவாசகத்தின்
பெயர், முகவரி-
கைதான சந்தேக நபர்கள்
சிலரது நாட்குறிப்பில்
இருந்தமையால்தான்
அவர் கைதானதாக
அறிய முடிகிறது!

பத்திரிகையாளர்கள்
புலிகள் உட்பட
சகல அமைப்புக்களுடனும்
தொழில் ரீதியாகத்
தொடர்பு கொள்ள உரித்துடையவர்கள்!

அவ்வாறு இருக்கும்போது
மாணிக்கவாசகத்தின்
பெயர், முகவரி-
கைதானவர்களிடம் இருந்தாலும்
அது எப்படிக் குற்றமாகும்?

நீண்டகால- பிரபலமான
செய்தியாளர் என்றரீதியில்
புலிகளிடம் மட்டுமன்றி
சகல கட்சிகளிடமும்
அவரது தொடர்பு முகவரி
இருக்கத்தான் செய்யும்!

பொதுவான சிலவிதிகள்,
தமிழர்கள் என்ற காரணத்தால்
பொருந்தாமல் போகின்றனவா?

தமிழருக்குச் சொந்தமான
வீட்டில்
சந்தேகமானவர்கள் இருந்தால்
அந்த வீட்டையே
தரைமட்டமாக்க முனைவர்!

பெரும்பான்மை இனத்தாரின்
வீட்டில் இருந்து கைதானால்,
அந்த வீட்டை இடிக்க
முனைவதைக் கண்டதில்லை!

அதுபோல, பொதுவாக
பத்திரிகையாளர்களுக்கு
உள்ள தொடர்புகள், உறவுகள்
சிங்களப் பத்திரிகையாளர்கள்
என்றால் வேறுவிதமாகவும்
தமிழ்ப் பத்திரிகையாளர்கள்
என்றால் வேறு விதமாகவும்
நோக்கப்படுகிறதா?

ஒரு சந்தேக நபரின்
நாட்குறிப்பில்-
பெயர் இருந்தால்
எந்தப் பத்திரிகையாளரையும்
புலனாய்வாளர்கள்
பயங்கரவாதத் தடைச்சட்டப்படி
கைது செய்வார்களா?

அல்லது, தமிழ்ப் பத்திரிகையாளர்கள்
என்றால் மட்டும்தான்
முடிச்சுப் போட்டுப் பார்க்கும்-
இனரீதியான
புலனாய்வுச் சந்தேகம்
இங்கே தொடரப்போகிறதா?

இவ்வாறு கைதாக்கிவிட்டு
பத்திரிகையாளர் என்பதால்
கைதாகவில்லை என்று
கூறுவது ஏற்புடையதல்ல!

'பத்திரிகையாளர்கள்மீதான
கைவைப்பல்ல' என்று
காண்பிக்கும்
எத்தனமே இதுவாகும்!

இதனை நம்பிக்கொண்டு,
சில பத்திரிகையாளர்கள்
தங்கள் நழுவல் போக்கை
நியாயப்படுத்த முனைகிறார்கள்!

சகல கண்ணோட்டங்களும்
இனரீதியாக மாறிவருவதால்,
தமிழ் பேசும் பத்திரிகையாளர்கள்
தமக்குள் ஒற்றுமையைப்
பலப்படுத்திக் கொள்ளவேண்டும்!

'மறைமுகமான ரூபத்தில்
தமிழ் பேசும் பத்திரிகையாளர்கள்
அச்சுறுத்தப்படும் படலம்
ஆரம்பமோ?' என்ற
சந்தேகமும் எழுந்துள்ளது!

எதிர்காலத்தில் இவ்வாறான
அத்துமீறல், அச்சுறுத்தல்களை-
எப்படி எதிர்கொள்வது
என்பதை ஆராயவேண்டும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## நித்திய ஆனந்தம்!



உலகில் வாழும் சகல மக்களும் எப்போதும் ஆனந்தமாக வாழ வேண்டும் என்றே விரும்புகின்றனர். அவர்கள் ஆனந்தமாக வாழ்வதற்கு இந்த உலகத்தில் எத்தனையோ மார்க்கங்களைத் தேடுகின்றனர்.

சிலர் தம் மனைவி மக்களோடு வாழ்வதில் ஆனந்தம் காண்கின்றனர். வேறு சிலர் தம் சினேகிதர்களுடன் சேர்ந்து மது அருந்தி, புகைத்து, அளவளாவி, ஆடிப்பாடுவதன் மூலம் ஆனந்தமடைகின்றனர். பணத்தை எண்ணி எண்ணி அதனை இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிப் பாதுகாப்பதில் ஆனந்தம் காண்கின்றனர் சிலர். இவ்வாறு ஒருவர் பெறும் ஆனந்தம் எவ்வளவு காலம் நீடிக்கும்?

ஒரு சில நாட்களில்- ஏன் ஒரு சில நிமிடங்களில் அந்த ஆனந்தம் இருந்த இடமே தெரியாமல் மறைந்தோடிவிடும். ஆனால் நித்திய ஆனந்தத்தில் மனிதனைத் திளைக்க வைப்பதில் ஒரேயொரு மார்க்கமே தலைசிறந்து விளங்குகிறது.

அதுதான் பக்தி மார்க்கம்.

முன்னாட்களில் வாழ்ந்த ஞானிகள், யோகிகள், தவசிரேட்டர்கள், முனிவர்கள் கண்ட பேருண்மை இதுவாகும்.

இறைவன்மீது தூய்மையான பக்தி செலுத்துபவன் எக்காலத்திலும் துன்பப்படமாட்டான். எத்தகைய துயரமும் அவனுடைய சித்தத்தைத் தடுமாற வைக்கப்போவதில்லை. 'எல்லாம் அவன் செயல்!' என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் ஆனந்தமாகவே வாழ்வான்.

ஞானேந்திரன்

## சிரம்பணிந்து வணங்குங்கள்!

உலகில் எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு இருப்பதைப்போல் இந்தப் பூமிக்கும் ஒரு முடிவு இருக்கிறது. மனிதனுக்கு மரணம் ஒரு முடிவைத் தருவதுபோல், இந்தப் பூமிக்கும் முடிவுண்டு. இந்த உலக முடிவைப் பற்றி, அழிவைப்பற்றி எல்லா வேதங்களும் கூறத்தான் செய்கிறது. இப்பொழுதுள்ள விஞ்ஞானிகளும் கூறத்தான் செய்கிறார்கள்.

மரணத்திற்குப் பின்னால் நடக்கப்போகும் பயங்கரங்களைப் பற்றியோ அதன் பின் மரணமே இல்லாத, மூப்பே இல்லாத, முடிவே இல்லாத வாழ்வு உண்டென்பதைப் பற்றியோ மனிதர்கள் அறிந்திருந்தும் அறியாதவர்களைப் போன்று அலட்சியம் செய்து விடுகின்றார்கள். இந்த உலக முடிவைப் பற்றி இறைவன் என்ன கூறுகிறான்:

"இந்த உலகிலுள்ள கோடான கோடிகளான அனைத்து உயிரினங்களும் அண்ட சராசரங்களும் அழிந்து மண்ணோடு மண்ணாகக் கூடிய யுக முடிவு காலம் நெருங்கி விட்டது. அல்லாஹ்வைத் தவிர மற்றெவராலும் அதனைத்தடுக்க முடியாது. இச் செய்தியைப் பற்றி நீங்கள் ஆச்சரியப் படுகிறீர்களே...! அழவேண்டாமா? அல்லாஹ்விற்கு சிரம்பணிந்து (அவனையே) வணங்குங்கள்! நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் அறிந்தவனாக இருக்கிறான்."

(அல்குர் ஆன் 53: 57)

வை.எம். தாஹிர் கரீம், கல்முனை-06

## கவிதைப் போட்டி இல.265

### பரிசுக்குரிய கவிதை



### நாளைய சந்ததிக்கு....

**தோண்டப்பட்ட
சூரியக்கந்தையையும்
தோண்டப்படாத
செம்மணியையும்
செதுக்கி வை!**

பி.சி. அன்ரன்-
மட்/ கூழாவடி.

**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### கற்காலம்

இது
கம்பியூட்டர்
யுகம்! -ஆனால்
எங்களுக்கு
இப்போதும்
கற்காலம்!

மு. அலெக்சாண்டர்-
கந்தப்பொல.

### குறி

குறி தப்பவே தப்பாது
குழியில் புதைந்த
குடும்பத்தில் தப்பிய
கருவண்டு!

மயில்வாகனம் பிரேமாங்கதன்-
மட்டக்களப்பு.

### 'கல்'மனம்!

'கல்'வி பெற
'கல்'லூரி அனுப்பாது
'கல்'உடைக்க விட்ட
'கல்'மனம் படைத்தவன்
யாரோ?

க. ஜெயதுரைராஜ்-தலவாக்கலை.

### வாழ்வே மாயம்!

அப்பாவின் தொழில் கற்று,
அதன் மூலம் நானுழைத்து,
இப்புவியில் உயர்வதற்குள்
எத்தனையோ நடந்துவிடும்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்- பசறை.

### பதிவு

தானும் அகதி
என்று கல்லில்
பதிக்கின்றானோ?

ஜெ. அப்துல் அஸீஸ்-
பத்தாம் பள்ளி.

### அகதி வாழ்வில்

படிக்கத்தான்
வழியில்லை;
படிக்கட்டாவது
செய்து பார்ப்போம்!

க. நாகராசா-சாவகச்சேரி.

### கற்றோண்டும் காலம்!

கல்தோன்றி
மண்தோன்றி
ஷெல் தோன்றிய
இக் காலத்தில்,
செல்வங்கள்
கல்தோண்டும்
காட்சிகளில் ஒன்று இது!

இ. சந்திரபாலன்- இரத்தினபுரி.

### செம்மணி புதைகுழி

அம்மணி வந்ததும்
செம்மணி வந்ததா?
செம்மணி வந்ததும்
அம்மணி வந்தாரா?
கல்லிலே வினா எழுப்பு!

அ. ராஜேந்திரன்- கந்தப்பளை.

### சிற்பி

தமையன் விதைகுழிக்கு
விதையானான்!
தம்பி நடுகல் செய்கின்றான்!

பூண்டுலோயா வில்லியம்.

### தா(சே)ய்

ஐயசிக்குறுய் தாய்
ஈன்றெடுத்த
சேய்!

ரா. இரமேஷ்குமாரி-
டெஸ்போட்,
நானுஓயா.

### எழுத்து எங்கே?

இளமையிற் கல்வி
சிலையி லெழுத்து!
மழலையில் தொழில்
தலையி லெழுத்தோ?

ச. மகாலிங்கம்-
வெலிமடை குரூப்,
வெலிமடை.

### மீதி

ஷெல்லடியில்
தப்பியது
நானும் இந்த
கல்லுந்தான்!


அ. சுஜிகலா- ஆரையம்பதி-03.

### துயில் கொடுத்தார் நெஞ்சம்

செம்மணியில்
துயில்கிறது-உன்
சுற்றம்.....;
கண்மணியே!
கல் நெஞ்சம்
நெகிழுமோ?


உரும்பராய் சிவன்சுதன்.

## கவிதைப் போட்டி இல.268



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- **08.08.1998**

**முகவரி:** கவிதைப் போட்டி இல.268,
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.



## காற்றுள்ளபோது தூற்றிக்கொள்!

இந்திய அமைதிப் படை காலத்தில் ஈ.பீ.ஆர்.எல்.எஃப். இயக்கத்தில் மனித உரிமை மீறல் கொடிகட்டிப் பறந்தது. அதில் முன்னணி வகித்தவர்களில் ஒருத்தர் கிருபாகரன். வடக்கு-கிழக்கு மாகாண சபை நிதியமைச்சராக இருந்தவர். அவரது அந்தரங்கச் செயலாளர் எனக் கூறும் அளவுக்கு அவருடன் நல்லுறவு கொண்டிருந்தவரே மகேஸ்வரி என்பவர். அவர் தற்போது மனித உரிமை என்ற பெயரில் தம்பட்டம் அடிப்பது சிரிப்புக்குரியதுதான். இவர்போல பலர் காற்றுள்ளபோதே பல கட்சிகளில் இருந்து தூற்றிக் கொண்டவர்களே. நக்கீரன் சுட்டிக்காட்டியதுபோல மனித உரிமை என்ற பெயரில் தொழில் நடத்துவோரும் உள்ளனர். உதவி வழங்கும் நிறுவனங்கள் உஷாராக இருக்க வேண்டும்!

இ. ரவீந்திரன், கனடா, (முன்னாள் ஈ.பி. உறுப்பினர்.)

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## அரசியல் வேலை

முரசே!

அன்றாடப் பிரச்சனைகளை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தும் தமிழ்க் கட்சிகளின் வண்டவாளங்களை இராஜதந்திரியார் அம்பலப்படுத்தியிருந்தார். இனப்பிரச்சனையும் அதன் எதிரொலியான யுத்தமும்தான் அன்றாடப் பிரச்சனைகளுக்குக் காரணம். இவற்றுக்கெல்லாம் முழுமுதல் காரணம் தீர்வை நாடாத அரசாங்கமே என்பதை மக்களிடம் எடுத்துக்கூறுவதும், விளக்கிக் கூறுவதுமே உண்மையான அரசியல் வேலையாகும். அந்த வகையில் இராஜதந்திரியார் கூறியது நூற்றுக்கு நூறு சரியே.

மு. அந்தனிசில், குருநகர்- யாழ்.



'அன்ன பூரணி' எங்கள் இதயத்தில் நங்கூரம் போட்டு நிற்கிறது. மனதில் பதிந்த உண்மைக் கதை. பெருமைக்குரிய கதையும்தான். பயணம் முடிவடையப் போகிறது போலத் தெரிகிறதே? ராஜகோபால் அவர்களுக்கு என் குடும்பம் சார்பாக வாழ்த்துக்கள் கூறுகிறேன்.

திருமதி கே. வசுமதி, வவுனியா.

## நேர்நின்று

'எக்ஸ்ரே ரிப்போர்ட்' சூடு தணியாமல் செல்கிறது. தரவேண்டியதை தடை இன்றி தரும் முறையில் தருகிறார் நாரதர். களுத்துறை சிறை விவகாரத்தில்- ஈ.பி.டி.பி. தலைவர் தாக்கப்பட்ட விவகாரத்தில் நேர்நின்று உண்மை உரைத்தது முரசு. மேலோட்டமான விசாரணையால் அப்பாவிக் கைதிகள் பாதிக்கப்படும் சாத்தியத்தை வெளிப்படுத்தியது முரசு. பாராட்டுக்கள்!

சோ. சோமஸ்கந்தன், கொழும்பு-06.

முரசு தரும் தொடர்கள் அனைத்துமே அருமை. கவியரசுவின் சுயசரிதையும், 'இடி அமீனி'ன் வரலாறும் சூப்பர். முரசு வந்ததும் நான் முதலில் புரட்டுவது இடி அமீனை.

என். நவாஸ், கிண்ணியா.

'இடி அமீன்' மிரட்டிக் கொண்டிருக்கிறான். டயானா கலங்க வைக்கிறார். ரசிகனும், புவனாவும் இரு கோணங்களில் விருந்து படைக்கின்றனர்.

எஸ். கீதா, கல்கிசை.

இறுதியில் 'முள் நிலவு' எங்கள் இதயத்தை வலிக்கச் செய்யுமா? இனிக்கச் செய்யுமா? இப்போது அடுத்த வாரத்தை எதிர்பார்க்கச் செய்கிறது. ராஜேஸ்குமாரின் ரசிகனான எனக்கு முரசுமேல் பிரியத்தை பெருக்கிவிட்டது 'முள் நிலவு'.

து. டிலக்ஷன், மாத்தளை.

'மேற்கே ஒரு குற்றம்', அபாரமான சுஜாதா. முன்னர் 'முரசு' தந்த சுஜாதாவின் கதைகளையும் மிஞ்சிக்கொண்டிருக்கிறது. ஜொள் வசந்த் இனிமை.

கவிதா ராசையா, நுவரெலியா.

## செயலற்ற கட்சிகள்

அன்பு முரசே!

மீனுக்கு வாலும், பாம்புக்குத் தலையும் காட்டும் அரசியல் கட்சிகள் செம்மணி அநியாயத்தைக்கூட தட்டிக்கேட்க இயலாத நிலையில் நின்ற கோலத்தைப் பார்த்தீர்களா? புலிகளை வீழ்த்திவிட்டு ஜனநாயகம் காட்டப்போவதாக இவர்களில் சிலர் கொக்கரிக்கிறார்கள்!

அதை நாம் நம்பவேண்டுமானால் குறைந்த பட்சம் குழிகளையாவது உடனே தோண்டிக்காட்டியிருக்கலாம் இக் கட்சிகள்! இன்றே இந்த நிலை என்றால், நாளை இக் கட்சிகள் கண் முன்னால் இனமானம் துகிலுரியப் பட்டால்கூட, இவர்களால் வாய் திறக்க முடியுமா? ஜனநாயகம் பேசுகிறார்களாம்- ஜனநாயகம்!

அ. ஈசன், கோப்பாய்.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# விடுதலைப் புலிகள் நிராகரித்த பொதி!

# சிங்களத் தீவிரவாதமும் தோற்கடித்துவிட்டது

## 'விடுதலைப் புலிகள்' கருத்து தெரிவிப்பு!

"தமிழரின் தேசிய இனப் பிரச்சனைக்கு சந்திரிக்கா அரசாங்கம் தயாரித்துள்ள மூலோபாயத் திட்டம்-போர்மூலம் சமாதானம் காணுவது என்பதாகும்!" இவ்வாறு விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "தமிழரின் தேசிய இன அபிலாசைகளைக் கொன்று புதைக்கக்கூடிய ஒரு திட்டத்தை அரசியல் தீர்வுப் பொதி எனப் பெயர் சூட்டி தமிழ் மக்களின் தலையில் கட்டியடிக்க அம்மையார் முயற்சிக்கிறார்.

இனப்பிரச்சனை தீர்விற்காக இதுவரை தயாரிக்கப்பட்ட திட்டங்களில் இது முற்போக்கானது, சிறந்தது என்றும், சமஷ்டி அமைப்பின் சாரங்கள் திட்ட வரைவில் உண்டென்றும் சந்திரிக்கா அரசாங்கம் சர்வதேசத்திற்கு விளம்பரம் செய்தது.

### பிரிப்புத் திட்டம்

தமிழரின் தாய் நிலத்தைப் பிரித்து, தமிழரின் தேசிய தனித்துவங்களைச் சிதைக்கும் நாசகார நோக்கங்களைக் கொண்டிருந்த இந்த அரசியல் பொதியை புலிகள் இயக்கம் நிராகரித்திருந்தது.

எனினும் தமிழ் மக்களுக்கு அதிகளவு உரிமை வழங்கும் தீர்வு யோசனை இது என்று, இந்த நாசகாரத் திட்டத்தையே வர்ணித்துவரும் சிங்கள தீவிரவாத சக்திகளும் தீர்வுப்பொதிக்கு எதிராக சன்னதம் கொண்டன.

தமிழ் இனத்தைக் குழப்பவும், சர்வதேச சமூகத்தை மயக்கவும் சந்திரிக்கா அரசால் வரையப்பட்ட இந்த சாணக்கிய திட்டத்தை இறுதியில் சிங்கள தீவிரவாத சக்திகளே முறியடித்தன.

சிங்கள தீவிரவாத சக்திகள் அஞ்சுவது போல தீர்வுப் பொதியில் ஒன்றுமே இல்லை என்று திருவாளர் பீரிஸ் போன்றோர் உண்மை உரைத்தபோதும் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது.

இதனால் தமிழர் தேசியத்தை நுட்பமான முறையில் சிதைக்கும் யோசனைகளைக் கொண்ட தீர்வுப்பொதி செத்து வீழ்ந்தது.

சந்திரிக்கா அரசாங்கத்தின் நவ பேரினவாதத்தை மரபுவழிப் பேரினவாதம் தோற்கடித்து விட்டது.

### கனவு பலித்ததா?

இதே சமயம் சந்திரிக்கா அரசின் போர் முயற்சியும் ஸ்தம்பித நிலைக்கு வந்துள்ளது.

புலிகளை ஒழிப்பதற்கான இறுதிப் படை நடவடிக்கை என்று வர்ணிக்கப்பட்ட நடவடிக்கை இழுபறி நிலையில் நிற்கிறது.

இதனால் யுத்தத்தில் வென்று இனப் பிரச்சனையைத் தீர்த்தல் என்ற பேரினவாதக் கனவு கலைந்து வருகிறது.

தனது இராணுவ, அரசியல் திட்டங்களின் உண்மையான நோக்கங்களை உலக சமூகம் இனம் காணாதவாறு தடுப்பதற்காக தீர்வு யோசனைகள், மனித உரிமைக் குழுக்கள், சிவில் நிருவாகம் என்ற தந்திரோபாயங்களை உபயோகித்து, இவற்றின் மூலம் தமிழ் மக்களை மயக்கலாம் என்ற எண்ணமும் பலிக்காமல் போய்விட்டது!" என்று விடுதலைப் புலிகள் ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது. ■

## குருநகரில் புலிகள் தாக்குதல்

### வீடியோ படப்பிடிப்பாளர் பலி

யாழ்ப்பாணம் குருநகரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள இராணுவ நிலைகள் மற்றும் சிறைச்சாலைகள்மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். 25.07.98 சனிக்கிழமை இத் தாக்குதல் இடம்பெற்றது.

முன்கூட்டியே ஒரு அணி வந்து உள்ளே காத்திருக்க, மேலும் சில அணிகள் படகுகள் மூலம் குருநகரில் வந்து இறங்கின. பெண்கள் அணியும் அதில் இருந்தது.

கைக்குண்டுத் தாக்குதல் சத்தத்துடன் ஆரம்பமான தாக்குதல் ஒரே நேரத்தில் பல நிலைகள்மீது நடத்தப்பட்டன. படையினரும் பதிற் தாக்குதல் நடத்தினார்கள். அதிகாலை வரை மோதல்கள் தொடர்ந்தன.

இம் மோதலில் புலிகள் தரப்பில் நான்கு பேர் பலியானார்கள். அதில் ஒருவர் மேஜர், மூன்று பேர் கப்டன்கள். கப்டன் சான்றோன் என்பவர் வீடியோப் படப்பிடிப்பாளர். 'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கை களம் உட்பட பல தாக்குதல்களை சிறப்பாகப் படம்பிடித்து பிரபாகரனது பாராட்டைப் பெற்றவர்.

தாக்குதல் முடிந்தபின் அம்புலன்ஸ் வண்டிகள் ஓடித்திரிந்ததை அவதானிக்க முடிந்தது. ஆனால் தமது தரப்பில் இருவர் மட்டுமே பலியானதாக படையினர் கூறியுள்ளனர். ■

## கடலின் மடியில் கவிழ்ந்த படகு

## நெஞ்சை உருக்கும் தகவல்கள்!

### கட்டியணைத்தபடி மூழ்கினர்

வன்னியில் இருந்து தமிழ்நாட்டுக்கு சென்ற தமிழ் அகதிகள் 44 பேர் கடலில் பலியானார்கள். இதற்குக் காரணமான படகு விபத்து பற்றி நெஞ்சை உலுக்கும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குண்டுவீச்சுக்கள், ஷெல்கள், பட்டினிக் கொடுமைகள் என்பவற்றில் இருந்து தப்புவதற்காக வன்னியில் இருந்து தமிழகம் நோக்கி அகதிகளாகச் செல்வோர் தொகை அதிகமாகி வருகிறது.

தலா 8 ஆயிரம் ரூபா கட்டணமாகக் கொடுத்து 52 பேர் சென்ற படகே விபத்துக்கு உள்ளானது.

25.07.98 அன்று மாலை 5.30 அளவில் 52 தமிழர்களை ஏற்றிக்கொண்டு தனுஷ்கோடி நோக்கி படகு புறப்பட்டது. 52 பேரில் 15 பெண்களும் எட்டுக் குழந்தைகளும் இருந்தனர்.

பண ஆசை காரணமாக அளவுக்கு மீறிய எண்ணிக்கையில் ஆட்கள் ஏற்றப்பட்டனர். அன்று கடலில் அலை அதிகமாக இருந்தது. அதனால் மெதுவாகவே படகு சென்றது. இரவு 11.30 அளவில் நடுக்கடலில் படகு சென்றபோது, படகு பாரம் தாங்காமல் லோசாக உடைந்துவிட்டது. அந்த உடைப்பு வழியாக கடல் தண்ணீர் உள்ளே புகத் தொடங்கியது.

படகில் இருந்தவர்கள் தண்ணீரை அள்ளி வெளியே ஊற்றிக்கொண்டிருந்தனர். அப்படி இருந்தும் தண்ணீர் குபுகுபு வென்று உள்ளே புகுந்தது. தனுஷ்கோடிக்கு 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கையில் தண்ணீர் அதிகமாகப் புகுந்து படகு தடுமாறியது.

பெண்களும் குழந்தைகளும், மரண ஓலம் எழுப்பியபடி ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்தபடி படகின் ஒரு ஓரமாக ஒதுங்க, ஒருபுறம் பாரம் அதிகமாகி அப்புக்கமாகப் படகு கடலில் கவிழ்ந்தது.

தங்கள் குழந்தைகளை இறுகக் கட்டியணைத்தபடி பெண்கள் படகுடன் மூழ்கினார்கள். படகு கவிழ்ந்த பகுதி ஆழமான பகுதி என்பதால் படகு முற்றாக மூழ்கி விட்டது. பலருக்கு நீச்சலும் தெரியாது.

நீச்சல் தெரிந்த எட்டுப்பேர் மட்டும் உயிர் தப்பினர். இவர்களில் சிலரை இந்திய மீனவர்களது படகுகள் காப்பாற்றி கரைசேர்த்தன.

காப்பாற்றப்பட்டவர்களின் பெயர் விபரம்: மகேஸ்வரன் (21), ஸ்ரீரவிச் சந்திரன் (19), லட்சுமணதாஸ் (22), சென்ட்டர் (19), வேலாயுதம் (21), வசந்தன் (13), காண்டிபன் (11), புஸ்பராஜ் (16) ஆகியோரே உயிர் தப்பியோராவர். ■

## "யாழ்ப்பாணத்தவர் வெளியேறுக!"

### புளொட் விடுத்த எச்சரிக்கை

வவுனியா எம்.பி. சண்முகநாதன் புலிகளின் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார். இச் சம்பவத்தின் பின்னர் வவுனியாவில் இளைஞர்கள் சிலர் புளொட் அமைப்பினரால் பிடிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

வவுனியாவில் 1990ம் ஆண்டுக்குப் பின்னர் குடியேறிய யாழ் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள் அங்கிருந்து வெளியேறவேண்டும் எனவும் புளொட் உறுப்பினர்கள் சிலர் எச்சரிக்கை செய்தனராம்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் வெளியேறத் தேவையில்லை, ஆனால் அவர்களுடையபிள்ளைகள் புலிகளாக இருந்தால் விளைவுகளைப் பொறுப்பு ஏற்க வேண்டி இருக்கும் என்று தற்போது எச்சரிக்கப் பட்டுள்ளனராம்.

வீதிகளிலும், வீதியோர வேலிகளிலும் உள்ள கிளைமோர் பொருத்தக்கூடிய மரங்களை வெட்டிச் சாய்க்கும் வேலைகளிலும் புளொட் இயக்கத்தினர் ஈடுபட்டனர். ■

## புதைகுழி விவகாரமும் தமிழ்க் கட்சிகளும்

செம்மணி புதைகுழிகள் பற்றிய விவகாரம் சார்க் மாநாடு முடிவடையும்வரை முடிவைக்கப்படும் என்று சென்றவாரம் 'முரசு' செய்தி வெளியிட்டிருந்தது.

அதேசமயம் செம்மணி புதைகுழி தொடர்பாக சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாராளுமன்றத்திலும் அறிவிக்கப்பட்டது. இவை சார்க் முடியும்வரை தமிழ்க் கட்சிகள், மற்றும் மனித உரிமை அமைப்புக்களது வாயைமூடும் அறிவிப்புக்கள் போலாகி விட்டன.

இன்றுவரை செம்மணிப் பகுதியில் எவ்வித பாதுகாப்பு ஏற்பாடும் செய்யப்படவில்லை. விசாரணைகளும் ஆரம்பமாகவில்லை.

இதேவேளை, இவ்விவகாரத்தில் சி.ஐ.டி. விசாரணையைவிட, சர்வதேச பார்வையாளர் ஒருவர் முன்பாக குழிகளை தோண்டிப் பார்க்கும் நிர்ப்பந்தத்தை தமிழ்க் கட்சிகள் அரசுக்கு ஏற்படுத்தி இருக்க வேண்டும். ஆனால் இக் கட்சிகள் தாம் கேட்டு விசாரணை நடப்பதாக மக்களை நம்பவைத்தால் போதும் என்ற மனோநிலையிலேயே உள்ளன. அதனால் உரிய முறையில் நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்த தயங்குகின்றன. நாம் என்ன செய்ய முடியும்? என்று மனித உரிமை அமைப்பை சேர்ந்த ஒருவர் விசனம் தெரிவித்தார். ■

## வழுக்கைத் தலை அதிகாரிகள்—இது கெட்ட நேரம்!

இராணுவத்தில் பணிபுரியும் வழுக்கைத் தலையுடைய சில அதிகாரிகளுக்கு காலம் இப்போது நல்லதல்ல என்று கூறப்படுகிறது.

இராணுவ உயரதிகாரிகள் பற்றிய சில அந்தரங்கமான தகவல்கள் சிங்கள வாரப் பத்திரிகை ஒன்றில் அடிக்கடி பிரசுரமாகி வருகின்றன.

இவ்வாறு தகவல் தெரிவிப்பவர் யார் என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இதன் சூத்திரதாரி வழுக்கைத் தலையுடையவர் ஒருவரே என்று ஒருவர் ஆருடம் கூறினாராம். இதன்படி இருவர் மீது சந்தேகம் ஏற்பட்டது.

இருவரில் ஒருவர் முழுமையாக முடி எதுவுமற்றவராம். அடுத்தவர் பாதிமுடியை இழந்தவர். இப்பொழுது முழுமையாக முடி இழந்தவருக்கு, வழமைக்கு மேலாக 'மார்ச் சிங்' செய்யும் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாம்! ■

## தற்கொலையா? கொலையா?

### ரெலோ பிரமுகர் மரணத்தில் சந்தேகம்

தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த தில்லைநாதன் என்றழைக்கப்படும் ஜோசப் துரைராஜ் கிறிஸ்டி என்பவர் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) முன்னாள் நிர்வாகச் செயலாளரான தில்லைநாதன் நீண்டகால உறுப்பினராவார். சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தகர்ப்பு உட்பட முக்கிய நடவடிக்கைகளில் அக்காலத்தில் பங்கெடுத்தவர்.

கொழும்பில் உள்ள ரெலோ தலைமையகத்தில் 25.07.98 அன்று இவர் தற்கொலை செய்துகொண்டதாக ரெலோ கூறியுள்ளது.

ஆனாலும் இவரது மரணம் தற்கொலையா? கொலையா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தினமும் காலையில் எழுந்தவுடன் ஒரு கிளாஸ் தண்ணீர் அருந்துவார் தில்லைநாதன். இரவு படுக்கச் செல்ல முன்னர் தண்ணீர் எடுத்து படுக்கைக்கு அருகே வைத்திருப்பார்.

சம்பவ நாள் காலையில் எழுந்ததும் வழக்கம்போல் தண்ணீர் அருந்தியுள்ளார். அத் தண்ணீரில் விஷம் கலக்கப்பட்டு இருந்திருக்கிறது. அதனால்தான் மரணமானார் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. தில்லைநாதன் மட்டுநகரைச் சேர்ந்தவர்.

## மீனவர்கள் கடத்தல்

### மூவாயிரம் அறவீடு

திருமலை மாவட்டம் மூதூர் இறால்க்குழி நாவலடி என்னும் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த முஸ்லிம் மீனவர்கள் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டனர்.

பல படகுகளில் வந்த புலிகள் அங்கு மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களை வள்ளங்களுடன் அழைத்துச் சென்றனர். வள்ளங்களில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்ததால் ஏனையோரை இறக்கிவிட்டு ஒருவரை மட்டுமே வள்ளத்துடன் கொண்டு சென்றனர். 30 வள்ளங்கள் இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டன.

கடத்திச் செல்லப்பட்ட ஒவ்வொருவரிடமும் தலா மூவாயிரம் ரூபா அறவிடப்பட்டதாம். அத்தனைபேரும் பணத்தைச் செலுத்தி விட்டு விடுதலையாகிவிட்டனர் என்று தெரிகிறது.

## ஒரு புலி உறுப்பினர் பலி!

மட்டக்களப்பு வந்தாறுமூலை உப்போடையில் தகவலொன்றையடுத்து மறைந்திருந்த துணைப் படையினரான ராசிக்குழுவினர் புலி இயக்க உறுப்பினர் ஒருவரைச் சுட்டுக்கொன்றனர். இச்சம்பவம் 23.07.98 அன்று பகல் நடந்தது.

ஏறாவூர்ப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சடலம் பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகப் புலிகளிடம் கையளிக்கப்பட்டது. பலியான புலி உறுப்பினர் அந்த இயக்கத்தின் சாரதியாக இருந்தார் என்று அறியப்படுகிறது. ந. சுஜீவரன் எனும் அவர் இரு பிள்ளைகளின் தந்தையாவார். இவரிடமிருந்த கைத்துப்பாக்கி, கிரனேட் என்பன மீட்கப்பட்டன.

இதே சம்பவத்தின்போது மேலும் மூன்று புலிகளைத் தாங்கள் கொன்று விட்டதாகவும் வாகன வசதியில்லாததால் அவர்களின் சடலங்களை எடுத்து வரவில்லையென்றும் ராசிக் குழுவினர் பத்திரிகைக்குத் தெரிவித்திருந்தனர். ஆனால் அவ்விடத்தில் ஒரு புலி உறுப்பினரே கொல்லப்பட்டார். மறைந்திருந்த மேலும் நான்கு புலி உறுப்பினர்கள் எதுவித பாதிப்புமின்றித் தப்பிச்சென்று விட்டனர். ■

## துட்டகைமுனு என புகழாரம்

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையின் பிறந்தநாள் தானம் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பௌத்த மதகுருமார்கள் அவரை பெரிதும் புகழ்ந்தனராம். இவர்கள் பலர் அரசாங்கத்தை விமர்சனம் செய்பவர்களாம்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட வணசோபித தேரர், 'இனத்தை மீட்டெடுக்கத் தோன்றிய துட்டகைமுனு' என்று பிரதி பாதுகாப்பு அமைச்சரை புகழ்ந்தாராம்.

இத்தகவல்களை கொழும்பு 'ராவய' பத்திரிகை வெளியிட்டுள்ளது. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பின்னர் பிரதமர் பதவி அமைச்சர் ரத்வத்தைக்கே வழங்கப்பட வேண்டும் என்று பிரதானமான பௌத்த குருமார்கள் சிலர் விருப்பம் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. ■

## கொடிகள் அகற்றப்பட்டன!

படையினருடன் இணைந்து செயற்படும் சில தமிழ் இயக்கங்கள்-83 ஜூலை வெலிக்கடைப் படுகொலைகளைக் குறிக்குமுகமாக "கறுப்பு ஜூலை 83" என்ற சுவரொட்டிகளை கிழக்குப் பகுதிகளில் ஒட்டியிருந்தனர். அத்தோடு வாகனங்களிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டிருந்தனர்.

எனினும் அந்த இயக்கத்தவர்களால் வாகனங்களில் கட்டிவிடப்பட்ட கறுப்புக் கொடிகள் அனைத்தையும் ஆங்காங்கே நின்றிருந்த பாதுகாப்புத் தரப்பினர் ஆவேசத்துடன் அகற்றிக்கொண்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. இச்சம்பவம் ஜூலை 27ம் நாளன்று இடம்பெற்றது. ■

## காணாமல் போன தமிழ் அதிகாரிகள் பெயருக்கும் இடமில்லை!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபையின் கீழ் இயங்கும் மத்திய மாகாண கண்டி கல்வித் திணைக்களத்தில் சிங்கள அதிகாரிகள் மாத்திரம் தானா கடமை புரிகிறார்கள்? இப்படி கேள்வி எழுப்பப்படுகின்றது.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்-கண்டி, மாத்தளை, நுவரெலியா, ஆகிய மூன்று மாவட்டங்களில் இயங்கும் சுமார் 1525 தமிழ், சிங்கள மொழி மூல பாடசாலைகளை நிருவகிக்கின்றது. இவற்றில் தமிழ்ப் பாடசாலைகளின் எண்ணிக்கை 535 ஆகும்.

கண்டியில் இயங்கும் பிரதான கல்விப் பணிமனையில் 'தமிழ் யுனிட்' எனப்படும் அலகு ஒன்றும் மத்திய கல்வி அமைச்சினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கல்விச் சேவையில் முதலாம் வகுப்பைக் கொண்ட கல்விப்பணிப்பாளர் ஒருவரும் கல்வி அபிவிருத்தி தொடர்பாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஒருவரும், தமிழ்-முஸ்லிம் பாடசாலைகளைக் கவனிக்க, இரண்டு உதவிச் செயலாளர்களும் தமிழ்ப் பிரிவுக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

கண்டியில் இயங்கும் இந்தக் கல்விப்பணிமனைக்குச் சென்றால், தனிச் சிங்களத்தில் போடப்பட்டுள்ள அதிகாரிகளின் பெயர்ப் பலகையில் மருந்துக்காவது தமிழ் பேசும் அதிகாரி ஒருவரினது பெயர் கூட அங்கு காணப்படவில்லை. இந்தப் பணிமனைமூலம் நிருவகிக்கப்படும் தமிழ்ப் பிரிவில் சீடா அபிவிருத்தித் திட்டம், உள்ளக ஆசிரியர் கருத்தரங்குகள், ஆசிரியர் நியமனம்- இடமாற்றம் போன்ற சகல கருமங்களும் இங்குதான் நடைபெறுகின்றன.

சிங்கள உயர் அதிகாரிகளின் பெயர்களை மாத்திரம் பெயர்ப்பலகையில் குறிப்பிட்டு உள்ளே 'இருக்கிறார்/இல்லை' என சுமார் பத்துப்பேரின் பெயர்கள் கடந்த பல வருடங்களாக அங்கே காணப்படுகின்றன. இதே பெயர்ப்பலகையில் தமிழ்-முஸ்லிம் அதிகாரிகளின் பெயர்கள் ஏன் இடம்பெறவில்லை? என்று தமிழ்-முஸ்லிம் ஆசிரியர்கள், பெற்றோர்கள் அங்கலாய்க்கின்றனர். ●

## துஷ்பிரயோகமும் அறிவுரையும்!

மட்டக்களப்பு-வாழைச்சேனை துறைமுகத்திலுள்ள சீருடையினரிற் சிலர் சற்றுத் தூரத்திலுள்ள தமது சகபாடிகளுக்கு, எட்டு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவனிடம், கைக்குண்டொன்றைக் கொண்டு சென்று கொடுக்குமாறு கேட்டனராம்.

சிறுவன் பயத்தினால் மறுக்கவே அவனது காற்சட்டைப் பைக்குள் குண்டை வைத்து விட்டு கொண்டு செல்லுமாறு கூறினராம். சிறுவன் அவ்வாறே தொலைவிலுள்ள கூறப்பட்ட, சீருடையினரிடம் சென்று "இதனுள் உள்ளதை எடுத்துக் கொள்ளுங்கள், அதோ நிற்கும் சீருடையினர் கொடுத்து விடுமாறு தந்தனர்," என்றபொழுது அதை எடுத்துக் கொண்ட சீருடையினரில் ஒருவர் "இனிமேல் இப்படி யார் தந்தாலும் வாங்கிக் கொள்ளக் கூடாது!" என்று அறிவுரை கூறி கவனமாகச் சிறுவனை அனுப்பி வைத்தாராம். ■

## இரவில் செல்லத் தடை

வன்னிப் போர்முனையில் முன்னணியில் போரிடும் அதிகாரிகளும் படையினரும் தங்கள் அணிக்கான பகுதித்தலைமை நிலையத்துக்கு இரவில் செல்லக்கூடாதெனத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் மற்றொரு புறத்திலுள்ள தமது உறவினர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவே அவர்கள் இரவு வேளையில் செல்கின்றனர்.

கடந்தவார ஆரம்பத்தில் இரு படையினருடன் ஒரு கவச வாகனத்தில் தலைமை நிலையத்துக்குச் சென்ற ஓர் அதிகாரி- ஏனைய இருவருடன் கொல்லப்பட்டுள்ளாராம். இதனாலேயே தொலைபேசித் தொடர்புக்காக இரவு வேளைகளில் செல்லாமல் பகல் வேளைகளில் செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது. ■

## கடை எரிப்பு!

நீண்ட நாட்களுக்குப் பின்னர் கடந்த 20.07.98 அன்று மட்டக்களப்பு-பதுளை வீதியில் தம்பானம் வெளிவரை படையினருடன் சென்ற ரெலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ராசிக் குழுவினர் அங்கிருந்த ஒரு கடையை எரித்து விட்டுத் திரும்பினர். அந்தக் கடையிலிருந்துதான் புலி இயக்கத்தினர் போக்குவரத்திலீடுபடும் வாகனங்களுக்கான நிதி வசூலிப்பைச் செய்வது வழக்கமாகும் என்று காரணம் கூறியுள்ளனர். ■

## தேடுதல் பணி

இந்தியக் கடலில் படகுவிபத்தில் மூழ்கியவர்களது உடல்களை கண்டுபிடிக்க இந்தியக் கடற்படை கப்பல்கள் தேடுதல் நடத்தின. ஆறு கப்பல்களில் சுமார் 200 பேர் தேடுதல் பணியில் ஈடுபட்டனர். இதேசமயம் தமிழ்நாடு செல்லும் அகதிகளை புலிகள் என்று சில தமிழகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. படகு விபத்தின் பின்னர்தான் இலங்கையில் இருந்து வருபவர்கள் அகதிகளே என்று அப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

www.padippakam.com

# பிரதேச செயலகங்கள் தோறும் சிறுவர் சாசனக் குழுக்கள்!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் தோறும் சிறுவர் சாசனக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்தந்தப் பிரிவுகளிலுள்ள சிறுவர்கள்மீது பிரயோகிக்கப்படும் துஷ்பிரயோகங்களையும் வேலைவாங்கப்படும் சிறுவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதையும் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இக்குழுக்கள் செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களைப் பற்றிய விவரங்களைப் பெறுவதற்கும் சிறுவர் நலன்காப்பு நடவடிக்கைகளிலும் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் காரியங்களிலும் சுபீட்சத் திட்ட (சமுர்த்தி) ஊக்குவிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள்.

சிறுவர் சாசனக் குழுக்களின் தலைவராக பதவி வழியில் அந்தந்தப் பிரதேச செயலாளரும், சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் அதன் செயலாளராகவும் இருப்பார். அத்துடன் வைத்திய அதிகாரிகள் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள், தொழிற் திணைக்கள உத்தியோகத்தர், சுபீட்சத் திட்ட முகாமையாளர்களும் சிறுவர் சாசனக் குழுக்களின் அங்கத்தவர்களாக இருப்பர்.

"மட்டக்களப்பில் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் அதிகளவில் இடம்பெறவில்லையென்றாலும் தொடர்ந்து செல்லும் யுத்தத்தினால் ஏராளமானோர் அநாதரவாக்கப்பட்ட நிலையில் உள்ளபோது அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் போர்வையில் மதமாற்றத்திற்கு உட்படுத்தப்படுகிறார்கள். இந்து அநாதை இல்லங்களைப் பராமரிக்கப் போதிய வசதிகளில்லை. போர் அபாயங்களும் கெடுபிடிகளும் சிறார்களின் மனநிலையைப் பாதித்துள்ளன." இவ்வாறு செங்கலடிப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் என். ஸ்ரீசங்கர் தலைமையில் நடந்த சிறுவர் சாசன அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. கூட்டம் ஜூலை 20ஆம் திகதி இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் சிறுவர் நன் நடத்தை உத்தியோகத்தர். எஸ். சிவகுமார், தொழிற் திணைக்கள அலுவலர் ரீ.லெட்சுமணன், வைத்திய அதிகாரி ரி.ஆர். ரவிச்சந்திரன், கிழக்கிலங்கை ஐக்கிய சமூக நல அபிவிருத்தி அமைப்பின் செயலாளர் ஏ.எச்.ஏ. ஹுஸைன் மற்றும் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள், சுபீட்ச அதிகாரிகள் ஊக்குவிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை சிறுவர் பாதுகாப்பு உறுதிப்படுத்தும் வகையில் இலங்கையில் முதற் தடவையாக பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு அமைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சீர்கேடான சேவை

(திருமலை நிருபர்)

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மூதூர்-தோப்பூர் பஸ்சேவை சீர்கேடடைந்த நிலையில் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் முரசுக்குத் தெரிவிக்கின்றனர்.

பயணிகளிடமும் தரக்குறைவாக நடந்து கொள்வது, எதிர்த்துக் கதைக்கும் பயணிகளைக் கிண்டலடிப்பது போன்ற வித்தைகளில் சாரதியும், நடத்துனரும் கைதேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

பொதுமக்களும் வேறு வழியின்றி அவர்களுக்கு அடங்கிப் போகவேண்டி இருக்கிறதாம். நியாயங்களை எடுத்துச் சொன்ன பயணிகளைக் கண்டால் அந்தத் தரிப்பில் பஸ் நிற்காமலேயே சென்று விடுகிறது. இதனால் ஏனைய பயணிகளும் பாதிக்கப்படுவதாக மக்கள் தெரிவிக்கிறார்கள்.

தோப்பூர் மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள மூதூருக்கோ, திருக்கோணமலைக்கோ வந்து போக வேண்டியவர்களாக இருக்கிறார்கள். போக்குவரத்துக் கஷ்டம் நிறைந்த இந்தப் பகுதிகளில் குறிப்பிட்ட ஒரேயொரு பஸ்தான் வேலை செய்கிறது. இதைச் சாதகமாக வைத்துக் கொண்டே இந்தச் சாரதியும், நடத்துனரும் குதிப்பதாக மக்கள் குறிப்பிடுகிறார்கள். மூதூர் பஸ்டிப்போ அதிகாரிகள் கவனிப்பார்களா?

# கிராமிய வங்கி திறக்கப்பட்டுள்ளது!

ஏறாவூர் தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அப்பகுதியிலுள்ள கிராமிய மக்களின் நன்மை கருதி கிராமிய வங்கியொன்றைத் திறந்து வைத்துள்ளது. ஜூலை 16ம் திகதி நடந்த இந்த வைபவத்தில் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ். சீவரெத்தினம், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்க அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டார்கள்.

"இப்பகுதி மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி காணச் செய்யும் நோக்குடனே இவ்வங்கி திறக்கப்பட்டுள்ளது. மக்களின் நன்மை கருதி சிறு கடன்கள் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். மக்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், கூட்டுறவுக் கிளைகள் மூலம் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது." என்று கூட்டுறவுச் சங்கத்தின் அதிகாரி யூ.ஏ. கிருபைரெட்ணம் தெரிவித்தார்.

# ஆதாரமற்ற புகார்

ஜூலை 05ம் திகதி வெளியான தினமுரசு பத்திரிகையில் 04ம் பக்கம் பிரசுரிக்கப்பட்ட 'சொந்த தேவைகள்' என்னும் தலைப்பு வெளியீட்டுக்கான உண்மையான மறுப்பு அறிக்கை:

மட்டக்களப்பு மாவட்டத்தில் கஞவாஞ்சிக்குடி நீர்ப்பாசனச் செயற்பாட்டையும் அதன் பொறுப்பு வாய்ந்த அதிகாரியையும் விமர்சித்து பாஸ்கரலிங்கம் என்பவர் அனுப்பிய செய்தியை அறிந்து ஊழியர்கள், விவசாயிகள், பொதுமக்கள் ஆகிய நாங்கள் அதிர்ச்சியும், கவலையும், வேதனையும் அடைந்ததுடன் இச் செய்தியை நாங்கள் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இது உழைக்கும் நோக்கம் உடையவர்களுக்கும், சுய இலாபம் தேட நினைப்பவர்களுக்கும் இவ்வதிகாரி தடையாக இருக்கிறார் என்பதே உண்மை; தனி நபரின் அபிலாசைகளை நிறைவேற்றுவதில்லை. கஞவாஞ்சிக்குடி நீர்ப்பாசனத் திணைக்களம் விவசாயிகளின் சேவையே அதன் முக்கியத்துவம்.

இவ்விளம் அதிகாரி முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவரும், நேர்மையானவரும் துடிப்பாக கடமையில் கண்ணியமாக நடப்பவரும் இத் திணைக்களத்தில் எந்தவிதமான ஊழல் குற்றச்சாட்டுக்களிலும் சம்பந்தப்படாதவரும் ஆவார். இவரின் நிர்வாகத்தின் கீழ் நடக்கும் அபிவிருத்திப் பணிகள் எந்தவிதமான ஊழல் குற்றச்சாட்டுக்களும் இல்லாமல் நடைபெறுவதால் விவசாயிகள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளார். தற்போது நடைபெறும் சிறுபோக நீர் விநியோகத்திலும் இவரின் நிர்வாகத் திறமையை விவசாயிகள் பாராட்டியுள்ளனர்.

இவ்வாறு துடிப்பான- வேலையில் ஆர்வமுள்ள கண்ணியமான நிர்வாகியை குறை கூறுவது முறையற்றதும், நாகரிகமுமற்ற செயலாகும். இதை மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மக்களின் மத்தியில் நன்மதிப்பையும் நல்ல செய்திகளையும் தரும் முரசு, பாஸ்கரலிங்கம் போன்றோரின் ஆதாரமற்ற புகார்களை போடுவதன் மூலம் தரத்தை குறைத்துவிடக்கூடாது. எனவே, இந்த மறுப்பு அறிக்கையை கண்ணியமிக்க பத்திரிகையில் வெளியிடுமாறு வேண்டுகிறோம்.

விபுலானந்த கம நல அமைப்பு,பழுகாமம்.

# தமிழ்ச் சேவையில் குளறுபடி!

## பட்டம் வாங்கத் திட்டமா?

இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் காலையில் 6.00 மணிக்கு ஒலிபரப்பாகிவந்த செய்திகள் 6.30 க்கு ஒலிபரப்பாகி வருகிறது. இம்மாற்றம் ஏற்படுத்தப்பட்ட நாளிலிருந்து தமிழ்ச் சேவையில் காலை 6.00 மணி முதல் 6.20 வரை துதிப்பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. கடந்த இரு மாதங்களுக்கு மேலாக இந்த 20 நிமிடங்களும் சீர்காழி சிவசிதம்பரம் அவர்கள் பாடிய துதிப்பாடல்கள் மட்டுமே ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே பலதடவைகள் ஒலிபரப்பப்பட்ட அதே பாடல்களே திரும்பத் திரும்ப ஒலிபரப்பாகி வருவதன் மர்மம் என்னவென்று தெரியவில்லை.

தமிழகத்தின் பல நூற்றுக்கணக்கான இசைமேதைகள் பாடிய துதிப்பாடல்கள் பல்லாயிரக் கணக்கில் உள்ளன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஒலிபரப்புக்களில் இப்பாடல்கள் முன்பெல்லாம் ஒலிபரப்பப்பட்டு வந்துள்ளன.

இவைதவிர, தமிழ் நாட்டில் தினமும் பல நூற்றுக்கணக்கான துதிப் பாடல் இசைத்தட்டுக்களும் ஒலிநாடாக்களும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

மறைந்த இசைப் பேரறிஞர் சீர்காழி கோவிந்தராஜனின் புதல்வரான டாக்டர் சிவசிதம்பரம் தரமான இசைக்கலைஞர்-தந்தையின் இடத்தை நிரப்புவதற்கேற்ற தகுதியுடையவர். இதற்காக, அவருடைய பாடல்களை மட்டும்தான் நேயர்களாகிய நாம் கேட்கவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுவானேன்?

வர்த்தக சேவை, எஃப்.எம்.99 மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சூரியன் எஃப்.எம். ஆகிய அலை வரிசைகளில் புதுப்புதுப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. தேசிய சேவையில் எம் போன்றோர் தரமான இசை நிகழ்ச்சிகளை- சினிமா இசையல்லாத கர்னாடக இசைப்பாடல்களையும், பக்திச் சுவை கலந்த பாடல்களையும் கேட்க விரும்புகிறோம். ஆனால் எம்போன்றோரின் இரசிகத் தன்மைக்கே சவால் விடுவது போல் இந்தத் துதிப்பாடல் நிகழ்ச்சி அமைந்துள்ளது.

சீர்காழி சிவசிதம்பரம் தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு இசைச்சங்கங் களுடன் நெருங்கிய தொடர்புடையவர்.

இந்நாட்டில் பல பட்டங்களைத் தேடிப்பிடித்து வாங்கி வைத்துக்கொண்டுள்ள ஓர் அம்மணி, தமிழ் நாட்டிலும் அத்தகைய ஏதாவது பட்டங்களை வாங்குவதற்காக- செல்வாக்குள்ள திரு. சிவசிதம்பரத்தின் பாடல்களுக்கே முதலிடம் கொடுத்து, அவரை வளைத்துப்பிடிக்க முயலுகிறாரோ தெரியவில்லை!

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகமும் ஒரு தமிழர். ஆலோசனை சபையிலும் தமிழர்கள் இருக்கின்றனர். இவர்களாவது இத்தகைய ஒழுங்கற்ற ஒலிபரப்புக்கு முற்றுப்புள்ளி வைப்பார்களா?

-அபேதானந்தன்.





**மலையாள மாந்திரிகம்**

மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாத செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி**

**P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



**பிரித்தானிய சான்றிதழுக்கான 1000 புலமைப்பரிசில்கள்**

A/L பரீட்சை எழுதும் மாணவர்களே!

இருபத்தோராம் நூற்றாண்டின் சவால்களை எதிர்நோக்குவதற்கு நீங்கள் தயாரா? சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தும் கணனி அறிவுடன் சவால்களை எதிர்நோக்குவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

- A- DIPLOMA IN COMPUTER SOFTWARE ENGINEERING
- B- DIPLOMA IN APPLICATION SOFTWARE
- C- DIPLOMA IN HARDWARE ENGINEERING
- D- DILOMA IN PROGRAMMING TECHNIQUES

இப்புலமைப்பரிசிலைப் பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது கீழ்க்கண்ட கூப்பனை நிரப்பி ரூபா 100 இனை காசாக அல்லது காசுக்கட்டளையாக இணைத்து கீழ்க்கண்ட முகவரிக்கு 31.08.1998 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பப்படல் வேண்டும். (காசுக் கட்டளை வெள்ளவத்தை தபாற்கந்தோருக்கு எடுக்கப்பட வேண்டும்.) பரீட்சைக்கான நேரம், திகதி, இடம் பரீட்சார்த்திகளுக்கு பின்னர் தபால் மூலம் அறிவிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி..

**Metro Computer World**
No 17, Charlemont Road,Colombo - 06.
T.P: 074-511164

*Branches :*

***K.T.P.M Computer Centre***
*No 29, Kovil Road, Kurumankaddu, Vavuniya*
*No 36, Viravar Kovil Road, Viravar Puliamkulam, Vavuniya. T.P : 024 - 22521,Email : KTPM @ SLT.LK*

***Eastern Business College.***
*No 111, Vidyalayam Road, Trincomalee.*
*T.P : 026 - 22466*

*Specimen form*

Full Name :........................................
Address :........................................
........................................
Phone :........................................
School :........................................
Class :............ Sex :............ Age :............

*Cousre prefernce (eg 1 - A, 2 - C, 3 - D, 4 - B)*

Course 01 ☐ 02 ☐ 03 ☐ 04 ☐

*Please state the course and the examination centre:*

*Examination centre*

Trinco ☐ Colombo ☐ Vanuniya ☐

*Course centre*

Trinco ☐ Colombo ☐ Vanuniya ☐



கனடாவிலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி இலங்கையில் வாழும் தமிழ்-முஸ்லிம் எழுத்தாளர்களுக்காக நடாத்தப்படும்

**சிறுகதைப் போட்டி**

**போட்டி விதிகள்:**

- இலங்கையில் தற்போது வசித்து வரும் தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்கள் அனைவரும் வயதுக்கட்டுப்பாடின்றி இப் போட்டியில் பங்குபற்றலாம்.
- போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகளின் தளம், கரு, காலம் ஆகியவை தொடர்பாக எதுவித கட்டுப்பாடுகளும் இல்லை.
- சிறுகதைகளை தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதியோ அன்றி தட்டச்சு செய்தோ அனுப்பிவைக்கலாம்.

முதலாம் பரிசு : ரூபா 5000.00
இரண்டாம் பரிசு : ரூபா 3000.00
மூன்றாம் பரிசு : ரூபா 1000.00

தலா ரூபா 500.00 கொண்ட பத்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும். அத்துடன் பரிசு பெறும் அனைவருக்கும் சான்றிதழ்களும் அனுப்பப்படும்.

**போட்டிச் சிறுகதைகளை அனுப்பவேண்டிய முகவரி**

R.N. LOGENDRALINGAM
C/O. UTHAYAN
75, Blackwell Ave,
Unit#37
Scarborough, Ontario,
Canada, M1B 1K5

இப்போட்டியை நடாத்த ஆதரவு நல்கும் கனடிய தமிழ் நிறுவனங்கள்:

| | |
|---|---|
| 1. சபேசன்ஸ், ஸ்காபுரோ | (416)605-1990 |
| 2. சிறி திருநாவுக்கரசு, ஸ்காபுரோ | (416)299-3353 |
| 3. N.K.S. Draperies, கேதா. ஸ்காபுரோ | (416)492-4410 |
| 4. போட்டல்லோ குளிர்பான நிறுவனம், ஸ்காபுரோ | (416)293-6558 |
| 5. தமிழன் வழிகாட்டி, செந்தி ஸ்காபுரோ | (416)438-9797 |
| 6. நல்லூர் குமரன் புடவை மாளிகை, ஸ்காபுரோ | (416)285-6797 |
| 7. ரெலி கனடா ஸ்தாபனம், ஸ்காபுரோ | (416)615-2533 |
| 8. Four Seas Travel, குமார், ஸ்காபுரோ | (416)299-8444 |

விண்ணப்ப முடிவுத் திகதி: 28.08.1998



**DCS COLLEGE OF COMPUTER TECHNOLOGY**
**(British ACP Recognized Institute )**

DCS

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

**Australian Computer Society (ACS)**

நவம்பர் மாதப் பரீட்சைக்குத் தயாராகுங்கள்!

*Modules:*

(1) Fundamentals of IT I (FIT I)

(2) Fundamentals of IT II (FIT II)

எதிர்வரும் ஆகஸ்ட் 2ல் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. வார இறுதி (Week End), வாரநாள் (Week Days) வகுப்புக்கள்

**எமது பயிற்சி நிலையங்கள்**

| | |
|---|---|
| (1) கொழும்பு | 399 1/1, காலி வீதி, கொழும்பு-04 |
| (2) மட்டக்களப்பு | 171, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு |
| (3) வவுனியா | 24, 2ம் குறுக்குத் தெரு, வவுனியா |
| (4) திருகோணமலை | 156, கிறீன் வீதி, திருகோணமலை |
| (5) யாழ்ப்பாணம் | 124/2, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் |

Individual & Group Classes

ACS
DIPLOMA IN COMPUTER APPLICATIONS
DIPLOMA IN MS OFFICE '97
MULTIMEDIA OFFICE PACKAGE
OFFICE POWER FOR PACKAGE
INTERNET BASIC
C++

ஆரம்பம் : 2-08-98, 8-8-98

www.padippakam.com

எக்ஸ்க்ளூசிவ் ரிப்போர்ட்

# தாக்குதல் திட்டமும் முடிச்சுப் போடல்களும்

சார்க் மாநாட்டுக்கு முன்பாக தலைநகரில் பாரிய கரும் புலித் தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் போட்டிருந்த திட்டம் பிசகிவிட்டது.

சார்க் நாட்டு தலைவர்களையோ முக் கியஸ்தர்களையோ புலிகள் குறி வைக்கக் கூடும் என்பதுபோல பாதுகாப்பு ஏற்பாடு கள் செய்யப்பட்டிருந்தன.

சார்க் நாட்டு தலைவர்களுக்கு குறி வைப்பதோ, அவர்களை சிரமப்படுத்தக் கூடிய தாக்குதல்களை நடத்துவதோ புலி களின் நோக்கமாக இருக்கவில்லை.

சார்க் மாநாடு ஆரம்பமாக முன்னர், சார்க் தலைவர்கள் கொழும்புக்கு விஜயம் செய்யும் நாளுக்கு சமீபமாக பாரிய தாக் குதல் ஒன்றை நடத்துவதுதான் புலிகளின் திட்டம்.

சுதந்திரப் பொன்விழாவுக்கு முன்னர் தலதாமாளிகைத் தாக்குதல் நடத்தப் பட்டது. பொன்விழாவுக்கு மிகச் சமீபமான நாளாகப் பார்த்து தாக்கியதால், மாற்று ஏற்பாடுகள் செய்ய முடியாமல், பொன்விழா சோபை இழந்தது. கண்டியில் இருந்து கொழும்புக்கு விழா இடம் பெயர்ந்தது.

அதுபோல, சார்க் மாநாட்டுக்கு முன்னதாக கொழும்பில் பாரிய தாக்குதல் ஒன்று நடக்குமானால், சார்க் தலைவர்கள் வருகை தடைப்படும். மாநாடு ஒத்திவைக் கப்படும் என்பது புலிகளின் கணிப்பு.

புலிகள் குறிவைத்த இலக்குகள் இரண்டு. ஒரு இலக்கு ஜனாதிபதி சந்திரிக்கா. இன்னொன்று தலைநகரில் உள்ள பொருளாதார வர்த்தக இலக்கு.

இத்தாக்குதல்களுக்காக கரும்புலிகள் அணி ஒன்று ஜூன் மாத ஆரம்பத்திலேயே கொழும்புக்குள் வந்து சேர்ந்துவிட்டது.

இதற்கிடையே புலிகளின் உளவுப் பிரி வுக்கு முக்கியமான தகவல் ஒன்று கிடைத் தது.

ஜூலை 22ம் திகதி கலாசாரம் சம் பந்தப்பட்ட விழா ஒன்றில் ஜனாதிபதி கலந்துகொள்ளப் போகிறார் என்பதுதான் அந்தத் தகவல்.

இவ்விழாவில் கரும்புலி ஒருவரை கலந்து கொள்ள வைக்க ஏதாவது ஒரு வழி கிடைக்குமா? என்று புலிகளின் உளவுப் பிரிவினர் தேடத் தொடங்கினார்கள்.

ஜனாதிபதியை தீர்த்துக்கட்டும் இலக்கு தவறுமானால், அடுத்ததாக குறிப் பிட்ட பொருளாதார இலக்கை தாக்கு வதற்கும் தயாரிப்புக்கள் செய்யப்பட்டன.

இக் கட்டத்தில்தான் புலிகளின் உளவுப் பிரிவைச் சேர்ந்த பெண்புலி ஒருவர் தற் செயலாக கைதானார். அவரது தடுமாற்ற மான நடவடிக்கைளால் அவர் அறிந்த தொடர்பு வட்டம் மாட்டிக்கொண்டது.

இவர் முன்னரே கைதுசெய்யப்பட்டு விட்டபோதும், சமீபத்தில் மேற்கொண்ட கடிதப் போக்குவரத்து ஒன்றினால்தான் இரகசியங்களை வெளியிடும் இக்கட்டான நிலைக்கு உள்ளானார்.

அதனையடுத்து கொழும்பில் கடை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தற் கொலை அங்கிகள் கைப்பற்றப்பட்டன. புலி களின் உளவு பிரிவு நடவடிக்கையோடு தொடர்புடைய பெண்கள் சிலரும் கைதா னார்கள்.

முதலில் கைதான உளவுப்பிரிவு பெண் புலியின் பெயர்: தனராணி. இவரை கரும் புலி என்று பொலிஸார் கூறுகின்றனர். ஆனால் இவர் கடந்த நான்கு வருடகால மாக கொழும்பில் உளவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், தாக்குதல் களுக்கு உரிய ஏற்பாடுகளை செய்து கொடுக்கும் பணிகளையும் செய்து வந்ததா கத் தெரிகிறது. அதனால்தான் தற்கொலை அங்கிகளை மறைத்து வைத்திருந்த மறை விடம் இவருக்கு தெரிந்திருக்கிறது.

கொழும்பில் புலிகளின் செயற்பாடுகள் பல பிரிவுகளாக இருக்கும்.

__தளப் பொறுப்பாளர்:__ குறிப்பிட்ட நட வடிக்கைக்கு பொறுப்பானவர். குறிப்பிட்ட நட வடிக்கைக்கு உரிய ஒழுங்குகளை மேற்கொள் வதும் வழிநடத்துவதும் இவரது பொறுப்பு.

__உளவுப்பிரிவு:__ தாக்குதலுக்குரிய தகவல் களை திரட்டுவது. ஆயுதங்கள், உபகரணங் கள் போன்றவற்றை பத்திரமாக மறைத்து வைக்கக்கூடிய இடங்களை தெரிவு செய்வது போன்றவை இவர்களது வேலை.

__தாக்குதல் அணி (கரும்புலிகள் உட்பட):__ இவர்கள் திட்டம் தயாரானதும் தளத்திற்கு வருவர். ஆயுதங்களை மறைத்து வைப்பது, மறைவிடங்களை உருவாக்குவது போன்றவை இவர்களது வேலையல்ல. திட்டப்படி தாக்கு தலை நடத்தி முடிப்பதே இவர்களது வேலை. எங்கு தங்குகிறார்கள் என்பது ஒருவருக்கொரு வர் தெரியாதவகையில் இவர்களை தங்க வைப்பதும், உரிய நேரத்தில் ஒரே இடத்தில் ஒன்று சேர்ப்பதும் தளப் பொறுப்பாளரின் வேலை.

இவ்வாறான வேலை முறை காரணமாகவே ஒரு புலி கைதானால்கூட தொடர்ச்சி யாக ஏனையோரும் மாட்டிக் கொள்வதில்லை.



தளப் பொறுப்பாளரே ஒரு வேளை மாட்டிக் கொண்டால் கூட ஏனையோர் தப்பிச் செல் லக் கூடிய சில ஒழுங்குகள்கூட முன்கூட்டியே செய்யப்படுவ தும் உண்டு.

ஆனால், விதி விலக்கான சில நடவடிக் கைகளும் இருக் கின்றன.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவை தீர்த்துக்கட் டிய கரும்புலி பாபு, தனது இலக்கு தொடர்பான உளவுத் தகவல்களை தானே திரட்டினார். உளவுப்புலி யாகவும், கரும்புலியாகவும் இரண்டு வேலை களையும் செவ்வனே செய்து முடித்தார்.

ஆனால் தற்போது கைதாகியுள்ள தன ராணி உளவுப்புலி மட்டும்தான் என்றே தெரி கிறது. ஏற்கனவே உளவுப்பிரிவு புலிகள் சிலர் கைது செய்யப்பட்டபோது அவர்களையும் கரும் புலிகள் என்றே விசாரணையாளர்கள் கூறிக் கொண்டனர்.

தனராணி பல தடவைகள் கைதாகி விடு தலையானவர். நான்கு வருடம் கொழும்பில் தங்கியிருப்பவர். இவ்வாறான ஒருவரை உளவு நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுத்து வார்களே தவிர, கரும்புலி தாக்குதல் மூலம் இழக்க முன்வரமாட்டார்கள்.

கொழும்பில் நன்கு பரிச்சயமாகி சந்தேகம் இல்லாதளவுக்கு வசிக்கக்கூடியவர்களே உளவு நடவடிக்கைகளுக்கு தோதானவர்கள். கரும் புலித் தாக்குதலில் ஈடுபட வேண்டியவர்களுக்கு மேற்கண்ட அம்சங்கள் தேவையில்லை. வந்த தும் காரியத்தில் இறங்கிவிட வேண்டியது. அல்லது குறிப்பிட்ட நாள்வரை காத்திருப்பது என்பதுதான் கரும்புலிகள் உட்பட தாக்குதல் அணியினரின் வேலை.

தனராணி கரும்புலியாக இருந்திருந்தால் அவர் கைதானதால் இரகசியங்கள் பெரிதாக அம்பலமாகியிருக்காது. தாக்குதல் திட்டமும் அம்பலமாகியிருக்காது.

கரும்புலிகள் கைது என்றும் குறிப்பிட்ட பிரமுகரை குறிவைத்து தாக்கவந்த கரும்புலி என்றும் சில சந்தர்ப்பங்களில் செய்திகள் கூறப்படுவதுண்டு.

ஆனால், தாக்குதலில் ஈடுபடும் கரும் புலிகளுக்கு கடைசி நேரத்தில்தான் இலக்கு யார் என்பது தெரியவரும். அதனால் கரும புலிகள் கைதானால்கூட யாரை குறிவைத்து வந்தனர் என்பதை ஊகங்களாகத்தான் கூறமுடி யும். உண்மையை கண்டுபிடிப்பது சிரமம்.

அதுமட்டுமல்ல ஒரு குறிப்பிட்ட நடவடிக் கைக்காக அனுப்பப்படுகிறவர்களுக்கு, அதே பகுதியில் திட்டமிடப்பட்டுள்ள ஏனைய நட வடிக்கைகள் பற்றி அறிந்திருக்க வாய்ப்பில்லை.

விசாரணையில் சித்திரவதை தாங்காமல், விசாரணையாளர்கள் ஊகமாக கேட்கும் கேள் விக்கெல்லாம் சிலர் தலையாட்டிவிடுவர்.

எதையாவது சொல்லாவிட்டால் தப்ப முடியாது என்பதால், கற்பனையாக கதை சொல்லி சமாளிப்பவர்களும் இருக்கின்றனர்.

அதனால்தான் ஒருவரை பிடித்து வைத் துக்கொண்டு பல தாக்குதல் இரகசியங்கள் அம்பலமானதுபோல செய்திகள் கூறப்படு வதும் உண்டு.

கைதான தனராணிக்கும் கொழும்பில் புலிகளின் நட வடிக்கைள்பற்றி விலாவாரியாக தெரியவாய்ப்பில்லை. அப்படித் தெரிந்திருந் தால் இதுவரை பலர் கைதாகியிருக்க வேண்டும்.

கொழும்பில் சார்க் மாநாட்டை குழப்பக் கூடியதாக புலிகள் திட்டமிட்ட இரண்டு நட வடிக்கைகள் தொடர்பாக தனராணிக்கு முக்கிய தகவல்கள் சில தெரிந்திருக்கின்றன. அந்த நடவடிக்கைகளுக்கான தகவல்கள் திரட்டல், ஆயுத உபகரணங்கள் சிலவற்றை மறைத்துவைத்தல் போன்றவற்றில் ஈடுபட்டி ருக்கலாம்.

ஆகவே தனராணி கைதுசெய்யப்பட்ட தும் அவருடன் தொடர்பாக இருந்த ஏனைய புலிகள் கொழும்பை விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டிருக்கிறது.

கொழும்பில் அரசாங்க நிறுவனத்தில் பணி யாற்றிய பெண் ஒருவரும் தனராணியின் தகவலால் கைதாகியுள்ளார். இவர் உளவுப் பிரிவு வேலைகளுக்கு உதவியவர் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் தாக்குதலைவிட குறிப்பிட்ட தாக்குதல்களில் ஈடுபடவிருந்த தமது ஆட் களையும் மறைவிடங்களையும் பாதுகாப்பதே கொழும்பில் புலிகளுக்கு முக்கிய வேலையா கியது.

தனராணிக்கு தெரிந்த இடங்களில் தங்கியிருந்த பெண் கரும்புலிகள் கொழும்புக்கு வெளியே கொண்டு செல்லப்பட்டனர். தாக்கு தல் அணியும் மாட்டிக்கொள்ளாமல் இடம்மாறி விட்டது.

இதனால்தான் சார்க் மாநாட்டுக்கு முன் பாக கொழும்பில் நடத்த புலிகள் திட்டமிட்ட தாக்குதல்கள் இரண்டில் ஒன்றையேனும் மேற் கொள்ள முடியாமல் போனதாக தெரிகிறது.

இன்னொரு விடயம்: ஜூலை 22ல் கலா சார விழாவில் கலந்துகொள்ள சந்திரிக்கா கடைசிநேரத்தில் மறுத்திருந்தார். பாதுகாப்பு காரணங்களுக்காக இம் மறுப்பு வெளியானது.

அதனால் பொருளாதார வர்த்தக இலக்கு மீது தாக்குதல் நடத்த புலிகள் திட்டமிட்டிருந் தனர் என்றும், அதற்காகவே தற்கொலை அங்கிகள் பாவிக்கப்பட இருந்தன என்றும் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை தனராணி கைது கொழும் பில் புலிகளின் தாக்குதல் திட்டம் என்பவற் றோடு தமிழ்ப் பத்திரிகையாளர்கள் சிலரையும், இந்துசமய கலாச்சார உதவிப் பணிப்பாளரை யும் இணைத்து முடிச்சுப்போடும் வேலைகளும் நடக்கின்றன.

இவைபற்றி வெளியாகும் தகவல்கள் முன்னுக்குப் பின் முரணாக உள்ளன.

பொலிஸ் காவலில் இருந்த தனராணி அங்கிருந்த பெண்காவலர் ஒருவரை பழக்கம் பிடித்துக் கொண்டார். அவரிடம் கடிதம் ஒன்றை தபாலில் போட கொடுத்தார். அந்தக் காவலருக்கு சந்தேகம் வந்ததால், கடிதத்தை தபாலில் போடாமல், தனது மேலதிகாரியின் கவனத்திற்கு போட்டிருக்கிறார்.

கடிதத்தை உடைத்து படித்தபோது, இரகசியமும் உடைந்தது. குறிப்பிட்ட முக்கிய மான பொருட்களை வேறு இடத்திற்கு மாற்று மாறு கடிதத்தில் எழுதியிருந்தாராம் தனராணி.

அந்தக் கடிதம் யாருக்கு எழுதப்பட்டது என்பதுதான் மர்மமாக உள்ளது? அதுபற்றிய தகவல்களும் முன்னுக்குப் பின் முரணாக உள் ளன. அதனை ஆராயாது சில கொழும்பு ஆங்கில பத்திரிகைகள் விசாரணையாளர்கள் கூறுவதை அப்படியே வெளியிட்டுள்ளன.

தனராணி எழுதிய கடிதம் வீரகேசரி செய்தியாளர் ஸ்ரீகஜனுக்கு முகவரி இடப்பட்டு இருந் தது என்றும், அதனால்தான் ஸ்ரீகஜன் கைதானார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனால் ஸ்ரீகஜன் கைதாகி பல வாரங்களாகியும் இதுவரை குறிப்பிட்ட கடித விவகாரம் தொடர்பாக விசாரிக்கப்பட்ட தாகத் தெரியவில்லை.

இதேவேளை வீரகேசரி மற்றும் பி.பி.சி. போன்றவற்றின் செய்தியாளர் மாணிக்கவாசகரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாணிக்கவாசகரின் பெயர் முகவரி கைதான பெண் புலியின் நாட் குறிப்பில் இருந்ததாக முதலில் காரணம் கூறப்பட்டது. அது என்ன பெரிய குற்றம்? என்று தெரியவில்லை.

புலிகளின் தலைவர் பிரபா கரனின் நாட் குறிப்பில் ஜனாதிபதி சந்திரிக்கா போன்றோரின் முகவரிகள்கூட இருக்கக்கூடும்.

புலிகளது நாட்குறிப்புக்களில் ஒருவரது பெயர் இருந்தால் அவர் புலி என்று அர்த்தமா? தவிர பத்திரிகையாளர்களுக்கு புலிகளுடன் தொழில் ரீதியாக தொடர்பு கொள்ள எவ்வித தடையும் கிடையாது. அப்படியிருக்க குறிப் பிட்ட பத்திரிகையாளர்களை சந்தித்த புலிகள் தங்கள் நாட்குறிப்பில் அவர்களது பெயர், முகவரிகளை எழுதிவைக்கக்கூடும்.

ஸ்ரீகஜனை அவரது தந்தையாரும், மாணிக்கவாசகரை அவரது மனைவியும் சென்று பார்த்துள்ளனர். உடல்ரீதியான தொந்தரவுகளுக்கு அவர்கள் உள்ளாகவில்லை என்று தெரிகிறது. அதேசமயம் ஸ்ரீகஜனி டமோ, மாணிக்கவாசகரிடமோ வெளியே பர பரப்பாக கூறப்படும்அளவுக்கு எந்த விசாரணை யும் நடக்கவில்லையாம்.

கைதான பெண்களில் இரண்டுபேர் ஸ்ரீ கஜனின் சிறிய தாய்முறையானவர்கள். ஸ்ரீகஜனிடம் பெண்புலி பற்றி கேட்டனராம். தனக்கு அவரைத் தெரியாது என்றாராம் ஸ்ரீகஜன். சிறிய தாய் பற்றிக் கேட்டதற்கு 'அவரைத் தெரியும்' என்றாராம். அத்தோடு மேற்கொண்டு விசாரிக்கவில்லையாம்.

மாணிக்கவாசகரையும் மேலோட்டமாக சில கேள்விகள் கேட்டுவிட்டு வைத்திருக்கின்றனர்.

உண்மையில் இவர்களுக்கும் புலிகளுக்கும் தொடர்பு என்று ஆதாரம் இருந்திருந்தால் துருவித் துருவி விரைவாக விசாரிக்கப்பட்டி ருக்க வேண்டும். இத்தனை நிதானமாகவோ விசாரிப்பார்கள்?

ஸ்ரீகஜனின் சிறிய தாயாரில் ஒருவர் கொழும்பில் பல வருடங்கள் தங்கியிருந்து கல்வி கற்பித்து வருகிறார். இன்னொரு சிறிய தாய் சில மாதங்களுக்கு முன்னர் வன்னியில் இருந்து இடமாற்றம் பெற்று கொழும்பு வந்து அரசாங்க உத்தியோகம் பார்க்கிறார்.

அவரைத்தான் கைதான பெண்புலிக்கு தெரிந்திருக்கவேண்டும். கடிதமும் அவ ருக்கே எழுதப்பட்டிருக்க வேண்டும். அந்த கடிதத்தை வைத்துக்கொண்டு சிறியதாய் இருவரையும் கைதுசெய்து விட்டு, பின்னர் ஸ்ரீகஜனையும் பிடித்திருக்கிறார்கள்.

உண்மையில் கடிதம் ஸ்ரீகஜனுக்கு முகவரி இடப்பட்டிருந்தால், நேராக சென்று ஸ்ரீகஜனைத்தான் கைது செய்தி ருப்பர். ஆனால் சிறிய தாய்மாரை கைது பண்ணிவிட்டு பின்னர்தான் ஸ்ரீகஜனை கைதுசெய்துள்ளனர். எனவே சிறிய தாயா ரிடம் உறவினர்கள் பற்றி விசாரித்தபோது, ஸ்ரீகஜன் வீரகேசரியில் பணிபுரிகிறார் என்று கூறியிருக்கலாம். நிருபராக இருந்து கொண்டு புலியாக இயங்குவாரோ? என்று சந்தேகம் வந்திருக்கக் கூடும். உடனே ஓடிப்போய் பிடித்திருக்கிறார்கள்.

ஸ்ரீகஜன் கைதான விடயம் உள்நாட்டி லும், வெளிநாட்டிலும் பிரபலமானதால் வேறு வழியின்றி அவரையும் சம்பந்தப் படுத்தி கொண்டிருப்பதுடன், மாணிக்க வாசகரையும் கைது செய்தனர். ஒரு தப்பை நியாயப்படுத்த பல தப்புக்கள்.

நடைபெறும் சம்பவங்களை பார்க்கும் போது மேற்கண்ட முடிவுக்குத்தான் வர முடி கிறது. எமது முடிவு தவறு என்றால் ஆதா ரம் காட்டவேண்டியது விசாரணையாளர் களது பொறுப்பாகும்.

இந்து கலாச்சார உதவிப் பணிப்பாளர் தெய்வநாயகம் பிள்ளையும் ஓர் பத்திரிகை யாளர்தான். ஜோசியம் எழுதுபவர்.

ஜூலை 22ல் கலாசார விழாவில் ஜனாதி பதி கலந்துகொண்டு விருதுகள் வழங்கப் போகிறார் என்ற தகவல் இந்து கலாசார உதவிப்பணிப்பாளர் ஊடாகவே புலிகளுக்கு சென்றிருக்கலாம் என்பதுதான் சந்தேகமாம்.

தற்கொலை அங்கிகளை மட்டக்களப்பு ஏறாவூரில் இருந்து கொண்டுவந்ததோடும் இவரை சம்பந்தப்படுத்தியும் முதலில் தக வல்கள் வெளியாகின.

இதில் எந்தக் காரணத்துக்காக கைது செய்துள்ளனர் என்பதை இதுவரை உத்தி யோகபூர்வமாக விசாரணையாளர்கள் கூறவில்லை.

இந்து மத குருமாரை அவமதித்தது, இந்து ஆலயங்களுக்குள் சோதனை நடத் தியது போன்றவற்றை நியாயப்படுத்த, இந்து மதம் சம்பந்தமானவர்கள் புலிகளுடன் தொடர்பு வைத்திருக்கிறார்கள். ஆகவே சந்தேகப்பட்டது தவறில்லை என்று நிரூபிக் கும் எத்தனமா? என்ற கேள்வியும் எட்டிப் பார்க்கிறது.

கலாச்சார விழாவில் ஜனாதி பதியை தீர்த்துக்கட்டும் திட்டம் புலிகளுக்கு இருந் தது என்பதால், கலாசார அமைச்சில் முக் கிய பொறுப்பில் உள்ளவர்மீது சந்தேகிப்பது சரிதானா?

குறிப்பிட்ட கலாச்சார விழாவில் ஜனாதிபதி கலந்து கொண்டிருந்தால், மேடையில் அவர் அருகே நிற்க வேண்டிய வர்களில் உதவிப் பணிப்பாளர் தெய்வ நாயகம் பிள்ளையும் ஒருவர்.

இன்னொரு முக்கிய விடயம் யாதெ னில், இந்து சமய கலாசார விழாவில் வைத்து ஜனாதிபதியை கொல்லத்திட்ட மிடப்பட்டதாகவும், அந்த விழாவே அதற் கான திட்டத்தோடு ஏற்பாடு செய்யப் பட்டது போலவும் அப்பட்டமான பொய் ஒன்றை அவிழ்த்து விட்டுள்ளனர்.

ஜூலை 22ல் நடைபெற்றது இந்துசமய கலாசார விழா அல்ல. பொதுவான கலாசார விழா. அங்கு வைத்து 74 சிங்களக் கலைஞர்களுக்கும், 20 தமிழ்க் கலைஞர்கள், 14 முஸ்லிம் கலைஞர்கள் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

கரும்புலித் தாக்குதல் நடத்தப்படு மானால் அவரும் சேர்ந்தே கொல்லப்படு வார். எனவே அவ்வாறான ஒருவர்மூலம் புலிகள் ஏற்பாடு செய்திருக்க முடியாது.

கொழும்பில் புலிகளது தாக்குதல் திட்டம் பற்றிய தகவல்கள் தனராணி மூலம் பெறப்பட்டிருக்கிறது என்பது சரி. ஆனால் தனராணிக்கும் ஒரு வரையறைக்குமேல் விபரம் தெரியாது. அவ்வாறு தெரியாத வற்றை விசாரணையாளர்கள் தங்கள் கற்பனை மற்றும் முடிச்சுப்போடல்கள் மூலம் நிரப்பப் பார்க்கிறார்களா? என்ற சந்தேகம் தோன்றியிருக்கிறது.

நாரதர்

## அதிரடி அப்பாத்துரை



**வெகுஜன சபையில்** பிரதி நிதிகள் முழங்க முன்னரே செம்மணி விவகாரத்தில் சி.ஐ.டி. விசாரணைக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவு போட்டி ருந்தது. அந்த உத்தரவுக்கு பின்னர்தான் விவாதமே நடந்திருக்கு. ஆனால் கூட்டான கட்சித் தலைவர் இலங்கை வானொலி நிகழ்ச்சி ஒன்றில் கதறக் கதற உண்மையை கொன்று போட்டார். சம்பந்தமானவரும், நீலமானவரும் சபையில் பேசித்தான் விசாரணை வந்ததாம். ஹி.ஹி.ஹி. பவள விழா கண்டவர் திருவாய் இப்படிப் பொய் உரைத்தல் தகுமோ? உருப்படியில் லாத விசாரணையை உரிமை கோரவும் இப்படி முண்டியடிக்கத்தான் வேண்டுமோ?! சிவ....சிவா.... சிவா!

**யாழில் காணாமல் போனோர்** பற்றிக்கேள்வி கேட்பதற்கு, "தெற்கில் பலியாவோர் பற்றி யோசித்துப் பார்த்தனீங்களோ?" என்று தடாலடியாக பதில் கேள்வி கேட்டவர் அந்தக் கட்சித் தலைவர். ரூபவாஹினிப் பேட்டியில்தான் அப்படிக் கேட்டவர். வடக்கு-கிழக்கு முன்னாள் அதிகாரக் கட்சியினராகிய அக் கட்சியினர் கடந்த வாரம் இலங்கை வானொலி நிகழ்ச்சியில், யாழில் காணாமல் போனோர் பற்றிப் பேசப்பட்டபோது, பொதுமகன்போல குறுக்கிட்டு, "இப்போது காணாமல் போனோர் பற்றி பேசும் ஆட்கள், முன்னர் காணாமல் போனோர் பற்றி ஏன் பேசவில்லை?" என்று கேள்வி கேட்டவை. இவை என்ன சொல்லுகினம்? யாழில் காணா மல் போனது பெரிய அநியாயம் இல்லை என்று சொல்ல வருகினமோ? அதுசரி, இவர்கள் கையால் காணாமல் போனோர் கதை ஏராளமல்லோ?

**ரெண்டு எழுத்தாரின்** கட்டுப்பாட்டுப் பகுதிகள் சிலவற்றில் பாடசாலைகளில் கண்டிப்பாக ஒரு சில மணிநேரங்கள் போர்க்காலப் பயிற்சிகள் வழங்கப்படுகிறதாம். "எங்களுடன் இணையவேண்டும் என்பதற் காக பயிற்சி தரவில்லை. இணையுமாறு கட்டாயப்படுத்தவும் மாட்டோம். இது போர்க்காலம். எனவே ஒவ்வொருவருக்கும் கருவிகளைக் கையாளத் தெரிந்திருக்க வேண்டும்!" என்று கூறப்படுகிறதாம்.

**தலைநகரில் கடும் சோதனை** என்பது யாருக்குத்தான் தெரியாது. மலையகத் தமிழரான நடைபாதை வியாபாரி ஒருவர் கொம்பனிவீதி சோதனை அரணில் மறிக்கப்பட்டார். அவர் கையில் ஒரு பொதி. வயிற்றுப் பசிக்கு தீர்வுப் பொதி. அதுதானுங்கோ சாப்பாட்டுப் பொதி. அந்தப் பொதி மீது சந்தேகம். பொலிசில் ஒப்படைக்கப்பட்டார். சோற்றுப் பொதி எனத் தெரிந்தும் மறுநாள் விடுவிக்கப்பட்டார். அதுமட்டுமல்லவாம். தினமும் கொம்பனிவீதி பொலிசில் கையெழுத்துப்போட்டுக் கொண்டிருக்கிறார். எல்லாம் பொதியால் வந்த வினை.

**நகைக்கடை ஊழியர்** ஒருவர் பஸ்ஸில் இருந்து இறங்கும்போது சீருடையினரால் விசாரிக்கப்பட்டார். அவரிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு அவர் சொன்ன பதிலால் கைதானார். அது என்ன கேள்வி: "முன்னர் நீர் விசாரிக்கப்பட்டுள்ளீரா?" "இல்லை!" என்றாராம். "சரி நடவும்" என்றனராம். முன்பெல்லாம் பொலிஸ் ஸ்ரேசன், கோடு, கச்சேரி போன்றவற்றின் படிக் கட்டுக்களை மிதிக்காத ஆட்கள் கொலரைத்தூக்கிவிட்டுக் கொள்ளுறவை. இந்தக் காலத்தில் அப்படி மிதிக்காமல் இருந்தால்தான் குற்றம் போல கிடக்கு!

**யாழ்ப்பாணத்திற்கு** செல்ல விமானச்சீட்டு பெறச் சென்றார் ஒருத்தர். இடையே மறித்து செக்கிங் என்று துருவினார்களாம். தங்களை சி.ஐ.டி. என்றும் கூறினார்களாம். துருவி முடிய அவரது பதினைந்தாயிரம் ரூபாவும் உருவப்பட்டுவிட்டது. உருவியோர் நழுவிவிட்டனர். எதற்கும் தலை நகரில் உஷாராக இருக்கக்கடவீர்.

**சர்வதேச விமான** நிலைய பாதுகாப்பை விமானப் படையினர் பொறுப்பேற்றுள்ளனர். அவைக்கும் விமான நிலைய அதிகாரிகளுக்கும் இடையே கடும் வாய்த்தர்க்கமாம். செஞ்சிங்கள வார்த்தைகளும் பரிமாறப் பட்டதாம். விமான நிலைய அதிகாரிகள் போய்வரும் விசேட வாசல் ஒன்றை பாதுகாப்புக் கருதி மூடிவிட்டனராம். அதனால் அதிகாரிகள் பொடி நடையாக கால் கிலோமீட்டர் சுற்றவேண்டியிருக்குதாம். உதுக்கே உப்பிடி பிரச்சனை என்றால், பாதுகாப்பு என்று சனத்தை எத்தனை கிலோமீட்டர் சுற்ற வைக்கினம்? அதுக்கு யார் சண்டை போடுறது?

**மாநாடு நடத்தி முடிக்க** முன்னரே பல அதிகாரிகளுக்கு இரத்தக் கொதிப்பு, இரத்த அழுத்தம், தலைசுற்றல், இதயத் துடிப்பு எகிறுதல் போன்ற பல நோய்கள் எட்டிப் பார்த்துவிட்டதாம். அலுத்துப்போன ஒரு அதிகாரி சொன்னார்: "இதைவிட நடத்தாமலேயே இருந்திருக்கலாம். எங்கள் உயிரையல்லோ வாங்குகினம்!" சனமும் அதே அபிப்பிராயம் தானுங்கோ!

**அயலகப் பிரதமரை** சந்திப்பதால் ஒன்றும் இப்போதைக்கு பலன் இல்லை என்று தெரிந்தும், சந்திப்பு நடத்தி அதைச் சொல்லி தங்கள் கடைகளை கலகலப்பாக நடத்தலாம் என்று சில தமிழ்க் கட்சிக்காரர்களுக்கு ஆசை. இன்றையச்சூழ்நிலை தெரியாமல், இந்தியப் பிரதமர் ஏதோ தங்களிடம் சிதம்பர இரகசியம் கூறப்போகிறார் என்பதுமாதிரி சனத்துக்கு கதையளக்கப் பார்த்தவையை நினைச்சால்....

**பருப்புவடை கேட்டவராம்** சக்தியானவர். இந்துமத குருமார் சிலர் குளிர்ந்து போச்சினம். "பாதுகாப்பு பிரச்சனையால் வர முடியாமல் இருக்கிறது. பருப்பு வடையை அனுப்புக" என்றும் கேட்கப்பட்ட தாம். பென்ஸ் கொடுக்க மற்ற மத ஆலயம் செல்ல மட்டும் பாதுகாப்பு பிரச்சனை இல்லையோ?! என்று ஒரு குருவானவர் மட்டும் முணுமுணுத் தாராம். நல்லா அல்வா கொடுத்துப்போட்டார்.

**இவ்வாரப் பழமொழி.** இத்தாலிய இறக்குமதி. பழமொழிக் கான காரணத்தை நீங்களே புரிந்துகொள்க!

**"பெண் குழந்தை இல்லாதவர்களால் அன்பைப் பற்றி அறிய முடியாது!"**

www.padippakam.com



# யாழ் கோட்டை முற்றுகையும், தாக்குதலும்

பிரேமதாசா அரசுடன் புலிகள் பேச்சை முறித்துக்கொள்ள முன்னரே, பிரபாகரன் போட்ட திட்டம் யாழ் கோட்டையை கைப்பற்றுவது.

வரலாற்று முக்கியத்துவம் மிக்க யாழ் கோட்டையில் படையினர் தங்கி இருப்பதை இல்லாமல் செய்ய வேண்டும் என்பது புலிகளின் நோக்கம்.

புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பிரிவு பொறுப்பாளரான திலீபன் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உரையாற்றியபோது, "யாழ் கோட்டையில் புலிக் கொடி பறக்கும் நாள்தான், தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைப்பதற்கான அறிகுறி!" என்று கூறியிருந்தார்.

இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கினால் யாழ் கோட்டையை கைப்பற்றியாக வேண்டும் என்ற திட்டத்துடன் உளவுத் தகவல்களும் பெறப்பட்டு வந்தன.

பிரேமதாசா அரசுடன் பேச்சு முறிந்து போர் தொடங்கிய பின்னர் யாழ் கோட்டையை தாக்கிக் கைப்பற்ற நாள் குறிக்கப்பட்டு திட்டமும் தீட்டப்பட்டது.

18.06.1990 அன்று நள்ளிரவு 12 மணிக்கு புலிகளின் தாக்குதல் அணிகள் புறப்பட்டன.

அதற்கு அறிகுறியாக பெரும் வெடியோசை ஒன்று இடியோசை போலக் கேட்டது.

யாழ் கோட்டை தாக்குதலை விபரிக்க முன்னர், யாழ் கோட்டையைப் பற்றியும், அதன் அமைப்புப் பற்றியும் ஒரு சுருக்கமான விளக்கம்.

## டச்சுக் கோட்டை

1621ம் ஆண்டு போர்த்துக்கீய ஆக்கிரமிப்பாளர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை கைப்பற்றினார்கள். ஒரு தமிழனால் கடைசித் தமிழ் மன்னனான சங்கிலியன் காட்டிக்கொடுக்கப்பட்டான்.

யாழ் இராச்சியத்தை கட்டியாள்வதற்காக போர்த்துக்கீயரால் யாழ் கோட்டை கட்டப்பட்டது. பின்னர் ஒல்லாந்து ஆக்கிரமிப்பாளர்களால் இடிக்கப்பட்டு பலமான கோட்டையாக புதுப்பிக்கப்பட்டது.

அதன்பின்னர் ஒல்லாந்தர் போய் ஆங்கிலேயரும் இந்தக் கோட்டையை தமது கூடாரமாக வைத்திருந்தனர்.

இந்தியப் படையினரும் இந்தக் கோட்டையை பயன்படுத்தினர். உள்ளே தங்கியிருந்தனர்.

மூன்று புறமும் சுரி நிறைந்த அகழிகள். ஒரு புறம் ஆழமற்ற கடல் ஏரி. நான்கு புறமும் பாரிய அகன்ற மதிற்சுவர்கள். வளைந்து, நெளிந்தபடி, உட்செல்லும் ஒடுங்கிய பிரதான வாசல். இதுதான் யாழ் கோட்டை.

யாழ் குடாநாட்டில் மோதல் மூண்ட பின்னர் யாழ் கோட்டையில் இருந்து யாழ் நகர் நோக்கி படையினரால் ஷெல்கள் ஏவப்பட்டன.

கோட்டைக்குள் மிகப் பாதுகாப்பாக இருந்தபடி படையினர் ஷெல்களை ஏவிக்கொண்டிருப்பர்.

யாழ் கோட்டையில் இருந்து படையினர் யாழ் நகர்நோக்கி முன்னேறி செல்வதை தடுக்க புலிகளின் காவலரண்கள் இருந்தன.

கோட்டை மதிற் சுவரின் மேல் மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டிருக்கும். அவற்றின் பின்னால் உள்ள படையினரையோ, மதிற் சுவர்களுக்கு உள்ளே இருக்கும் படையினரையோ வெளியே இருந்து பார்க்க முடியாது.

## ஐந்து கொத்தளம்

யாழ் கோட்டை ஐங்கோண அமைப்பைக் கொண்டது. ஐந்து கொத்தளப் பகுதிகளையும் கொண்டது.

பீரங்கி போன்ற பெரும் படைக் கலங்களை நிறுத்தி வைத்திருக்கக் கூடியவாறு அமைந்துள்ள கோட்டை மதில்மேல் உள்ள விசாலமான பகுதியே கொத்தளம் என அழைக்கப்படுகிறது.

1. பொலிஸ் நிலையப் பக்கம் இருந்த பிரதான வாசலோடும் (தென்பகுதி)
2. விளையாட்டரங்கை நோக்கியபடியும் (தென்கிழக்கு பகுதி)
3. வீரசிங்கம் மண்டபப் பகுதியை நோக்கியும் (வடகிழக்கு)
4. தொலைத் தொடர்பு நிலையத்தை நோக்கியும் (வடமேற்கு)
5. பண்ணைச் சந்திக்கு அருகில் மண்டைதீவை நோக்கியும் (தென்மேற்கு)

இக் கொத்தளங்கள் அமைந்திருந்தன.

முதலாவது, ஐந்தாவது கொத்தளங்கள் கடலை எதிர்கொள்ளக்கூடிய வகையிலும், மிகுதி மூன்றும் தரையில் இருந்து வரும் எதிர்ப்புக்களை எதிர்கொள்ளக்கூடிய வகையிலும் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தன.

இக்கோட்டையைச் சுற்றி மூன்று புறமும் உள்ள சுரி நிறைந்த அகழியின் அகலம் 30 அடி. கால் வைத்தால் புதையுண்டு போகுமளவுக்கு சுரி.

மண்டைத்தீவை நோக்கி இருந்த கடற்கரைப்பக்கமாக பொலிஸ் நிலையத்தையும், பண்ணைச் சந்தியையும் இணைத்தபடி ஒருவீதி செல்கிறது. இது கடற்கரைவீதி என்றழைக்கப்படும். இது கடற்கரைப்பக்கம் இருந்து கோட்டை மதிலுடன் ஒட்டியபடி செல்கிறது.

இப்பாதையுடன் ஒட்டியிருக்கும் இரு கொத்தளங்களையும் (பண்ணைச் சந்திக்கு அருகில் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக) அடைவதற்கு அகழிகளைத் தாண்டத் தேவையில்லை. ஆனால் ஏனைய மூன்று கொத்தளங்களையும் அடைய அகழியைத் தாண்டுவதுடன், 30 அடி உயர மதிலையும் ஏறிவெற்றிகாண வேண்டும்.

கோட்டையின் கிழக்குப் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும் அகழிக்கு வெளியே மறைவானதும், பாதுகாப்பானதுமான காவல் அரண்களும், காவற் கோபுரங்களும் இருந்தன. அவை சின்னக் கோட்டை என அழைக்கப்படும்.

அகழியை அடைய முற்படுகிறவர்களை சின்னக் கோட்டையில் இருந்து தாக்கி தடுக்க, அழிக்க முடியும்.

## புலிகளின் நிலைகள்

யாழ் கோட்டையைச் சுற்றி மூன்று புறத்தில் உள்ள தரைப் பகுதியிலும் புலிகளின் காவல் அரண்கள் அமைக்கப்பட்டிருந்தன.

கோட்டைக்கு தென்கிழக்கே அமைந்திருந்த பொலிஸ் நிலையக் கட்டடங்களிலும், விளையாட்டரங்கிலும் அமைக்கப்பட்டிருந்த அரண்களும், கோட்டைக்கு தென்மேற்கு திசையில் தொலைத் தொடர்பு நிலையம் முன்பாக பண்ணைச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த காவல் அரணும் படையினரின் இரண்டு கண்களுக்கும் நடுவே நெற்றியில் கூடாரமடித்து அமர்ந்திருப்பது போன்று இருந்தன.

இவைகள்தவிர தபால் நிலையம், வீரசிங்கம் மண்டபம், நூல் நிலையக் கட்டடம் உட்பட கோட்டையைச் சுற்றியிருந்த கட்டடங்களிலும், மரங்களுக்கு கீழேயும், மதிலோரங்களிலும் புலிகளின் பாதுகாப்பு நிலைகள் இருந்தன.

கோட்டை முற்றுகையை பலப்படுத்துவதற்காக மண்டைத்தீவிலும் புலிகளின் அணி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

18.06.90 அன்று நள்ளிரவு யாழ் மாவட்ட புலிகளின் தளபதி பானு தலைமையில் தாக்குதல் ஆரம்பமானது.

மண்மூட்டைகள் நிரப்பப்பட்ட வாகனங்களின் துணையுடன் கோட்டை மதில் ஒன்றை கைப்பற்ற முயற்சித்தனர்.

கோட்டைக்குள் இருந்து படையினர் தற்காப்பு தாக்குதலில் ஈடுபட்டனர். புலிகளின் முதல் முயற்சி தோல்வி கண்டது. அம் முயற்சியில் இரண்டு கப்டன்கள் உட்பட ஐந்து புலிகள் பலியானார்கள்.

கோட்டையின் பிரதான வாயிலைக் கைப்பற்ற உக்கிரத் தாக்குதல் ஒன்றை தொடுக்க ஆண் போராளிகளையும், பெண்போராளிகளையும் களத்தில் இறக்குவது என்று முடிவானது.

ஆனால் பெண்கள் அணி அதற்கு உடன்படவில்லை. வாயில் பகுதியைக் கைப்பற்றும் பொறுப்பை மகளிர் படையணியிடம் மட்டுமே ஒப்படைக்க வேண்டும் என்று கோரினார்கள்.

அவர்களது கோரிக்கைப்படி வாயிலை கைப்பற்றும் தாக்குதலுக்கான பொறுப்பு மகளிர் படையணியிடமே ஒப்படைக்கப்பட்டது.

இதற்கிடையே கோட்டை முற்றுகையை உடைப்பதற்காக கடற்படை, வான்படை இரண்டையும் உசுப்பிவிட்டது அரசாங்கம்.

"இன்னமும் சில தினங்களில் கோட்டை முற்றுகையை முறியடித்துக் காட்டுவோம்" என்று கூறினார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன.

விமானப்படை விமானங்கள் யாழ் கோட்டையை சுற்றியுள்ள பகுதிகளில் தாக்குதல்களை நடத்தின.

கோட்டைக்குள் இருந்த படையினருக்கு உதவ கோட்டைக்குள் இறங்க முற்பட்ட ஹெலிகளை புலிகள் குறிவைத்து சுடத் தொடங்கினர்.

அப்போது புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் கிடையாது. கலிபர் ரக துப்பாக்கிகள் எல்.எம்.ஜி. போன்றவற்றால் விமானங்களை நோக்கிச் சுட்டனர்.

புலிகளின் தாக்குதலை மீறி யாழ் கோட்டைக்குள் ஹெலிகள் இறங்க முடியவில்லை.

முற்றுகை நீடித்தால் கோட்டைக்குள் இருக்கும் படைவீரர்களுக்கு உணவுப்பிரச்சனை ஏற்படும் என்று படைத்தலைமை கவலையடைந்தது.

## திசை திருப்பல்

பிரதான வாயிலை புலிகள் தாக்குவர் எனக் கருதி அப்பகுதியில் கோட்டைக்குள் இருந்த படையினரும் கூடிய கவனம் செலுத்தி இருந்தனர்.

அகழிகளைக் கடக்காமல் உள்ளே செல்லக்கூடிய பண்ணைச் சந்திக்கு அருகில் இருந்த கொத்தளப் பகுதி மீதும், பிரதான வாயில் மீதும் புலிகள் கண்வைத்திருப்பர் என்று படையினரும் எதிர்பார்த்தனர்.

விமானப்படை விமானங்களும் பிரதான வாயிலுக்கு புலிகள் செல்ல முடியாதவாறு அப்பகுதியை அண்டியே குண்டுகளைப் பொழிந்தன.

கோட்டையின் பிரதான வாசல் பக்கம் இருந்து படையினர் கைக்குண்டுகளை வீசிக்கொண்டிருந்தனர். புலிகளின் தரை நகர்வை சீர்குலைக்கவே அந்த ஏற்பாடு.

ஆனால் புலிகள் அதற்கும் ஒரு மாற்றுத் திட்டம் தயாரித்தனர்.

கோட்டை வாசலை நோக்கிய பாதை தண்ணீர் ஓடும் வாய்க்காலைப் போன்றது. வாய்க்காலின் புருவப்பகுதியை காப்பரண்போல பாவித்தபடி பெண்கள் அணி கோட்டை வாயிலை நோக்கி முன்னேறியது. அந்த அணிக்கு சங்கீதா தலைமை தாங்கினார்.

சாதுரியமாக முன்னேறிய பெண்கள் அணி படையினரின் நிலையை அடைய மேலும் ஐந்து ஆறு யார் தூரமே மீதியிருந்தது.

ஒரு பெண்புலி துணிச்சலுடன் நகர்ந்து படையினரின் நிலைக்குள் கைக்குண்டு ஒன்றை வீசியெறிந்தார்.

ஆனாலும் படையினரின் நிலை தாக்குதலுக்கு மிக வசதியாக இருந்தது.

பெண்கள் அணியை நோக்கி சரமாரியாக சுட்டனர். முன்னால் சென்ற சங்கீதாவை படையினரின் துப்பாக்கி ரவைகள் வீழ்த்தின. அதனைத் தொடர்ந்து பெண் புலிகளான அநுரா, மாதுரி ஆகியோரும் அடுத்தடுத்து கொல்லப்பட்டனர்.

அதேசமயம் பிரதான வாயில்மீதான தாக்குதலுக்கு உதவும் பொருட்டு, படையினரின் கவனத்தை பிரதான வாயில் பக்கம் இருந்து திசை திருப்ப தென்பகுதி கொத்தளம் மீது ஆண்கள் அணி தாக்குதல் நடத்தியது.

அத்தாக்குதலையும் படையினர் முறியடித்தனர். ஆண்போராளிகள் சிலர் பலியாகினர்.

## புல்டோசர்

இந்தச் சந்தர்ப்பத்தில் டாங்கி போன்று புலிகளால் தயாரிக்கப்பட்ட புல்டோசர் ஒன்று பழைய பொலிஸ் நிலைய பின்பகுதியில் இருந்து கடற்கரைவீதி வழியாக தென்பகுதி கொத்தளம் நோக்கி விரைந்தது.

அந்தப் புல்டோசர் மட்டும் நேராக தனது குறியை எட்டியிருக்குமானால் கோட்டை கிட்டத்தட்ட வீழ்ந்திருக்கும்.

ஆனால், அந்த நேரம் பார்த்து விமானப்படை விமானங்கள் வெளிச்ச குண்டுகளை வீசிக்கொண்டு வட்டமிட்டன.

வெளிச்ச குண்டுகளை வீசி புலிகளின் நகர்வைக்கண்டுபிடித்த பின்னர் தாக்குதல் நடத்துவதே விமானப்படையினரின் உத்தி.

வெளிச்சக் குண்டுகள் புல்டோசரைக் காட்டிக் கொடுத்துவிட்டன.

புல்டோசரை நோக்கி விமானத்தில் இருந்து குண்டொன்று ஏவப்பட்டது. குறி பிசகாமல் புல்டோசரின் முன்பகுதியில் தாக்கியது.

முன்பகுதியில் விழுந்ததால் புலிடோசர் சிதறாமல் தப்பித்தது. ஆனால் புல்டோசரை செலுத்தியவர் அதிர்வின் காரணமாக மயங்கிவிட்டார்.

புல்டோசருக்குள் இருந்த ஏனைய புலிகள் சாரதிக்கு மயக்கம் தெளிய தண்ணீர் தெளித்தனர். சாரதி எழுந்தார். மறுபடி புல்டோசர் கொத்தளம் நோக்கி செல்லத் தொடங்கியது.

ஆனாலும் கொத்தளப் பகுதியில் இருந்தும், பிரதான வாயில் பக்கம் இருந்தும் படையினர் பலத்த எதிர்ப்பைக் காட்டினார்கள்.

புலிகளிடம் சிக்கினாலும் உயிர் போகும். அதைவிட சண்டையிட்டு உயிரை பாதுகாக்கலாம் என்ற எண்ணமும், வான் படையினரின் குண்டுகளை வீசிக்கொண்டிருந்ததும், படைத்தலைமை கொழும்பில் இருந்து தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் கொடுத்த நம்பிக்கைகளும் படையினருக்கு தெம்பாக இருந்தன.

"விரைவில் உதவிவரும். அதுவரை தாக்குப்பிடியுங்கள்!" என்று கொழும்பில் இருந்து படைத்தலைமை கூறிக்கொண்டிருந்தது.

கொழும்பிலும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும், படை உயரதிகாரிகளும் அடிக்கடி கூடி ஆராய்ந்தனர்.

"எப்படியாவது முற்றுகையை முறியடித்தாக வேண்டும். இது கௌரவப் பிரச்சனை!" என்றுவிட்டார் ரஞ்சன்.

## 'ஒப்பரேசன் போட்'

யாழ் கோட்டை முற்றுகையை உடைக்க வேண்டுமானால் தரைப்பகுதியாலும் படையினர் நகர்ந்தாக வேண்டும். யாழ் கோட்டையுடன் தரைத் தொடர்பு ஒன்று ஏற்படுத்தியாக வேண்டும் என்று படைத்தலைமை திட்டமிட்டது.

இதற்கிடையே யாழ் கோட்டையில் இருந்த படையினருக்கு உணவுப் பொருட்களை விநியோகம் செய்யக்கூட முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

வானத்தில் உயரப்பறந்தபடி உணவுப் பொதிகளை யாழ்கோட்டைக்குள் வீசினார்கள்.

இப்படியே போனால் தலைக்குமேல் வெள்ளம் வந்துவிடும். யாழ் கோட்டையை புலிகள் கைப்பற்றினால் தென்னிலங்கையில் தலை காட்டவே முடியாது என்று பிரேமதாசா கவலைப்பட்டார்.


இதற்கெல்லாம் துரிதமாக காணப்பட்ட தீர்வுதான் 'ஒப்பரேசன் போட்'.

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறையில் இருந்து சுமார் 12 மைல் நீளமுள்ள மண்டைதீவை கைப்பற்றி, அங்கிருந்து கோட்டைக்கு செல்வது. அப்படியே யாழ் நகரையும் கைப்பற்றுவது என்பதுதான் 'ஒப்பரேசன் போட்' திட்டத்தின் இலக்கு.

கிட்டத்தட்ட நாலாயிரம் படையினர், மூன்று அவ்ரோ விமானங்கள், ஆறு ஹெலிக்கொப்டர்கள், இரண்டு கடற்படை பீரங்கி கப்பற் பிரிவுகள் ஆகியவை 'ஒப்பரேசன் போட்' நடவடிக்கைக்கு ஆயத்தமாகின.

நடவடிக்கையும் ஆரம்பமானது. அதனை புலிகள் எவ்வாறு எதிர் கொண்டனர்?

(தொடர்ந்து வரும்)









படிப்பகம்

www.padippakam.com

# 'சார்க்' காலப் பொய்கள்

அலசுவது– இராஜதந்திரி

இன்றைய ஆட்சியாளரின் பெயரால் வெளியாகும் தகவல்கள் நம்பகத் தன்மை அற்றவையாக விளங்குகின்றன.

வாயைத் திறந்தாலே பொய் என்று கருதக்கூடியளவுக்கு முழுப் பூசணிக்காயை ஒரு கோப்பை சோற்றில் மறைக்கக் கூடியவிதமான தகவல்கள் அரசாங்கத்தின் பெயரில் கூறப்பட்டு வருகின்றன.

வட பகுதிக்கு வழங்கப்படும் நிவாரணத்தில் ஜூலை மாதம் முதல் வெட்டு விழுந்து கொண்டிருக்கிறது.

இந்த நிவாரண வெட்டை எதிர்த்து தமிழ்க் கட்சிகள் யாழ் குடாநாட்டில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தன. தமிழ பா.உக்கள் வெளிநாட்டுத் தூதரகங்களிடம் முறையிட்டிருந்தனர்.

இத்தனையும் நடந்து கொண்டிருந்தபோதும் அரசாங்கம் எவ்வித கருத்தும் வெளியிடாமல், நிவாரண வெட்டில் உறுதியாக இருந்தது.

அதுமட்டுமன்றி, வேடிக்கையான விளக்கம் ஒன்றும் அரசசார்பாக கூறப்பட்டிருந்தது.

வடபகுதி மக்கள் நிவாரணத்தை மட்டும் நம்பியிருக்கும் நிலையில் இருந்து அவர்களை மீட்கவே, நிவாரண குறைப்பு மேற்கொள்ளப்படுவதாக அந்த விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்கில் மேலும் இராணுவ நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் விரிவுபடுத்தியே வருகின்றனர்.

இராணுவத்தீர்வு முனைப்புக் காரணமாக தினமும் வடக்கு-கிழக்கில் அவலங்கள் பெருகுவதுடன், இடம்பெயர்ந்து அகதிகளாவோர் தொகையும், தங்கள் தொழில்களை இழந்து நிவாரணத்தை நம்பி வாழ்வோர் தொகையும் பெருகிக்கொண்டே செல்லுகின்றன.

வடக்கே வன்னியில் முன்னோக்கி நகர படையினர் மேற்கொள்ளும் முயற்சிகள் ஒவ்வொன்றும் இடம்பெயர்வுகளையே ஏற்படுத்தி வருகின்றன. கிளிநொச்சி, மாங்குளம் போன்ற நகர்களும், பல கிராமங்களும் வெறிச்சோடி குடியிருப்புக்கள் காலியாகிக் கிடக்கின்றன.

எனவே, நிவாரணத்தை சார்ந்து இருக்க வேண்டும் என்பது வடக்கு-கிழக்கு மக்கள் தாமாக விரும்பும் ஒன்றல்ல. ஆட்சியாளர்கள் தமது இராணுவத்தீர்வு முனைப்பால் ஏற்படுத்தியுள்ள விளைவுகளில் ஒன்றேயாகும்.

படையினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள யாழ்குடாநாட்டிலும் நிவாரணத்தை நம்பியே மக்கள் வாழவேண்டிய நிலையில் உள்ளனர்.

அங்கு வலிகாமத்தில் பெரும்பாலான பகுதியில் படையினர் நிலைகொண்டு தமது பிரதான முகாம்களின் பாதுகாப்பு வலயப் பகுதிகளாக மாற்றி வைத்துள்ளனர்.

அங்கு மீளக்குடியேற அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் தம் சொந்த நிலங்களில் குடியேறமுடியாமல் இரவல் வீடுகளில் ஒட்டியிருக்கின்றனர். சொந்தப் பகுதிகளில் தொழில் செய்து பிழைத்துக் கொண்டிருந்தவர்கள் இன்று வேலை வாய்ப்பின்றி இருந்து வருகின்றனர்.

இது மட்டுமன்றி ஆயிரக்கணக்கான வடபகுதி மீனவர்கள் பாதுகாப்பு காரணங்களால் தொழில் இன்றி வாடிக் கொண்டிருக்கின்றனர். கிழக்கில் தமிழ் பேசும் மீனவர்களும் இவ்வாறே பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான அந்தரிப்புக்களை தமது இராணுவத் தீர்வு நாட்டத்தால் தோற்றுவித்துள்ள ஆட்சியாளர்கள், ஏதோ மக்கள்தான் சோம்பேறித்தனமாக நிவாரணத்தை நாடி நிற்பதுபோலவும், மக்களை திருத்த தாம் முற்படுவது போன்றும் விளக்கமளிக்க முற்படுவது தமிழ் மக்களை சிறுமைப்படுத்தும் விதமாகவே அமைகின்றன.

உழைக்க வழியிருந்தும் கைகட்டி நிற்பவர்களல்ல தமிழ் பேசும் மக்கள். சுதந்திரம் கிடைத்ததாகக் கூறப்படும் 50 வருட காலத்தில் தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதில் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் அக்கறை செலுத்தியதில்லை.

அவ்வாறு இருந்தும் தம் தன்னம்பிக்கை, கடின உழைப்பு, திட்டமிட்ட சேமிப்பு என்பவை மூலம் தம் பிரதேசங்களை வளபூமியாக்கி வாழ்ந்தவர்கள் தமிழ் பேசும் மக்களாவர்.

பிறரின் தயவை நாடி வாழ்வதோ, உழைக்காமல் இருப்பதோ அவர்களின் பண்பாக இருந்ததில்லை. இப்போதும் உழைத்து வாழ்வதற்கே அவர்கள் விரும்புகின்றனர். நீண்ட வரிசைகளில் நிவாரணத்திற்காக கையேந்தி வாழ்வதை அவர்கள் விரும்பி நிற்கவில்லை.

'சூரியக்கதிர்', 'ஜயசிக்குறுய்' போன்ற தொடர்ச்சியான பாரிய இராணுவ நகர்வுகள் வடக்கில் தமிழ் மக்களின் வாழ்க்கையை உருத் தெரியாமல் செய்து வருகின்றன. இத்தகைய பாரிய நடவடிக்கைகளின் காரணமாகவே பெரும் இடம்பெயர்வுகளும், தொழில் இழப்புக்களும் தோன்றி, நிவாரணத்தை மட்டும் நம்பி வாழும் சூழ்நிலை தோன்றியுள்ளது.

புனரமைப்பு, புனர்வாழ்வு, அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு என்று ஆரவாரமாக கூறப்பட்டும், விளம்பரப் படுத்தப்பட்டும் வந்தாலும்கூட, அவை எல்லாம் அரசும், தமிழ்க் கட்சிகளும் தங்கள் நலனுக்காக காண்பிக்கும் புஸ்வாணங்களேயாகும்.

ஒருபுறம் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, மறுபுறத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு என்பவை நன்கு நடைபெறலாம் என்று கருதுவது ஒட்டைப் பாத்திரத்தில் தண்ணீர் மொள்ளுவது போன்ற காரியமேயாகும்.

எனவே, இராணுவத்தீர்வு என்பதை ஆட்சியாளர் முன்னிறுத்தும்வரை வடக்கு-கிழக்கில் அவலங்கள் அதிகமாகிக் கொண்டிருக்கும். நிவாரணம் வழங்கப்பட வேண்டியோர் எண்ணிக்கை மேலும் மேலும் அதிகமாகுமே தவிர குறைவதற்கு வாய்ப்பில்லை.

ஆனால் ஆட்சியாளர்கள் அவலங்களைப் பற்றி கரிசனமே இன்றி போர் வெற்றியில் குறியாக இருப்பதுடன், நிவாரணத்தையும் குறைத்து தமிழ் மக்களின் மீதே போரின் சுமையை திணிக்கவும் முன்வந்துள்ளனர்.

அதனை மறைக்கவே, மக்களை நிவாரணத்தை சார்ந்திருக்காமல் பழக்குவதற்கே நிவாரணக் குறைப்பு என்றும் விளக்கமும் அளித்தனர்.

அந்த விளக்கம் எடுபடாத நிலையில்தான் சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு பத்திரிகைகள் சிலவற்றில், திடுக்கிடும் பொய் ஒன்று வெளியாகியிருந்தது.

வடக்குக்கு நிவாரணத்தை குறைப்பது என்று வெளியான செய்திகள் உண்மையல்ல என்றும், அவ்வாறு எந்தக் குறைப்பும் செய்யப்படவில்லை என்றும் அரசாங்கம் கூறியுள்ளதாக அச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



இச் செய்தியை வெளியிட்ட பத்திரிகைகள்கூட அதன் உண்மை, பொய்யை ஆராய்ந்து தனியாகத் தெரிவிக்கத் தவறியிருந்தன.

நிவாரணக் குறைப்புச் செய்யுமாறு வடபகுதி அரச அதிபர்களுக்கு அரசாங்கம் அறிவித்ததும் உண்மை. குறைப்பு செய்யப்படத் தொடங்கியதும் உண்மை.

அதனால்தான் அரசே முதலில் நிவாரணக் குறைப்புக்கு விளக்கம் ஒன்றையும் வெளியிட்டு இருந்தது.

நிவாரண வெட்டைப் பற்றி அரசாங்க உயர்மட்டத்துடன் பேச்சு நடத்த வடபகுதி அரசாங்க அதிபர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டும் இருந்தனர்.

இதற்கிடையே இந்த நிவாரண வெட்டின் பின்னணிபற்றியும் நோக்க வேண்டும்.

நிவாரண வெட்டு என்பது பாதுகாப்பு அமைச்சால் எடுக்கப்பட்ட முடிவே தவிர, புனர்வாழ்வு அமைச்சோ, வடபகுதிக்கான புனரமைப்பு குழுவோ கூட அம் முடிவுடன் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. கலந்து ஆலோசிக்கப்படவும் இல்லை என்றும் தகவல்கள் கூறுகின்றன.

பாதுகாப்பு அமைச்சுக்கு வடபகுதி மக்களின் நலனைவிட, போரில் வெற்றி பெற உணவு மற்றும் நிவாரண பொருட்களை எப்படி ஆயுதமாக பயன்படுத்துவது என்பதே முக்கியமானதாகும்.

வன்னிக்கு செல்லும் நிவாரணப் பொருட்களை மேலும் குறைத்தால், அங்குள்ள மக்கள் புலிகளை எதிர்ப்பர் எனவும், வன்னியைவிட்டு வெளியேற முனைவர் எனவும் பாதுகாப்பு அமைச்சு கருதக்கூடும்.

வன்னிக்கு மட்டும் நிவாரண வெட்டை செய்தால், நிவாரணப் பொருளைப் போரில் ஒரு ஆயுதமாக பாவிப்பதாக நிருபணமாகும் என்பதால், பொதுவாக வடபகுதி முழுவதற்குமாக நிவாரண வெட்டு அறிவிக்கப்பட்டது.

இதுதவிர, இலங்கை அரசுக்கு உதவி வழங்கும் உலக வங்கி போன்றவை நிவாரண உதவிகள் தொடர்ந்து வழங்கப்படுவதை விரும்புவதில்லை.

இலங்கை அரசு மட்டுமன்றி தம்மிடம் கடன்வாங்கும் மற்றும் உதவி பெறும் எந்தவொரு நாடும் நிவாரண உதவிகள் மூலம் உதவிப் பணத்தை விரயமாக்குவதை உலக வங்கி போன்றவை தடுக்க முற்படுவது வழக்கமானதேயாகும்.

ஊர் பணத்தில் தானம் செய்வதுபோல, உலக உதவியில் தானம் செய்யும் அரசுகளுக்கு உதவிகள் குறைக்கப்படுவதும் நடக்கும்.

உதாரணமாக, இந்தியாவில் இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதுகூட உலக வங்கியின் அதிருப்திக்கு உள்ளாகியிருந்தது. அதனால் இலவச மின்சாரத்தை நிறுத்த முற்பட்டது இந்திய அரசு. பின்னர் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டமையால் அம்முடிவு பின்போடப்பட்டது.

இவ்வாறான நிலையில் இலங்கை அரசுக்கு இருவழிகள்தான் உள்ளன. ஒன்றில் தன் சக்திக்கு மீறிய யுத்தத்தை நிறுத்தவேண்டும். அல்லது வடக்கு-கிழக்கில் நிவாரணத்தை வெட்டி அங்குள்ள மக்களின் வயிற்றில் இடிக்க வேண்டும்.

போர் வெற்றி என்பது இன்றைய அரசாங்கத்தின் எதிர்கால அரசியல் வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் மந்திரக்கோலாக மாறியிருப்பதால், போரை நிறுத்த அரசாங்கம் முன்வரப்போவதில்லை. அதற்குமாறாக போர்ச் சுமைகளை மக்கள்மேல் திணிக்கும் வழிமுறைகளையே நாடியுள்ளது.

அதிலும் நிவாரணக் குறைப்பு மற்றும் பொருளாதாரத் தடைகள் என்பவை தமிழ் மக்களின் முதுகில் மலைகளாக அழுத்துவதுடன், அப்படி அழுத்துவதன் மூலம் நிரந்தரமாக குனிந்து நிறக்கூடிய சூழலையும் ஏற்படுத்தும் நோக்கம் கொண்டவையாகவும் விளங்குகின்றன.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் போன்று, நிவாரண வெட்டு பொருளாதார முற்றுகைகள் மூலம் இரண்டுவிதமான பலாபலனை அறுவடை செய்ய ஆட்சியாளர்கள் நினைக்கின்றனர்.

போர்ச் செலவின் சுமையை தமிழ் மக்களிடம் திணிப்பது ஒருநோக்கமாகவும், பட்டினிக் கொடுமைகளால் தமிழ் மக்கள் விரக்தியாகி அரசியல் இலட்சியங்களையே கைவிட்டுவிடுவர், போராட்டங்கள்மீது வெறுப்புக் கொள்வர் என்பது இன்னொரு நோக்கமாகவும் விளங்குகின்றன.

ஆனாலும் சார்க் மாநாட்டு நேரத்தில் செம்மணி புதைகுழி விவகாரம், நிவாரண வெட்டு போன்ற பிரச்சனைகள் பெரும் பிரச்சனைகளாக இங்கு அலசப்பட்டுக் கொண்டிருப்பதை ஆட்சியாளர்கள் விரும்பவில்லை.

அதன் காரணமாகவே சார்க் முடியும்வரை குறிப்பிட்ட இரு பிரச்சனைகளையும் அடக்கிவைக்கக்கூடிய விதமான அறிக்கைகளும், முடிவுகளும் ஆட்சியாளர்களால் வெளியிடப்பட்டன.

செம்மணியில் மனிதப் புதைகுழிகள் பற்றி முதலில் கூறப்பட்ட போது, அரசாங்கத்தின் முக்கிய அமைச்சரான ஜெயராஜ் பெர்ணாண்டேபுள்ளே, "ஒருவர் தனது மேலதிகாரிகளை மாட்டிவிடக்கூறும் குற்றச்சாட்டை மட்டும் நம்பிக்கொண்டு அரசாங்கம் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்?" என்று கேட்டிருந்தார்.

அதே அமைச்சர்தான் பின்னர் "செம்மணி புதைகுழி விவகாரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பாராளுமன்றத்தில் அறிவித்தும் இருந்தார் என்பது, தாமாக அல்ல, சூழ்நிலை நிர்ப்பந்தம் காரணமாகவே 'நடவடிக்கை எடுக்கப்படும்' என்று கூறவாயினும் அரசு முன்வந்தது என்பதை எடுத்துக்காட்டியுள்ளன.

சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அறிவிப்புச் செய்தது மூலம் குறிப்பிட்ட விவகாரத்தில் நீதி நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டதுபோல அரசு காண்பித்தாகிவிட்டது.

ஆனால், செம்மணி பகுதியில் எவ்வித பாதுகாப்பு ஏற்பாடும் இதுவரை செய்யப்படவில்லை. தடயங்களை அழிக்கக்கூடும் என்ற முன்னெச்சரிக்கையே இல்லாத ஆட்சியாளரின் கீழ் நடைபெறும் விசாரணைகள் எந்தளவுக்கு உண்மைகளை வெளிக்கொண்டுவரும் என்பது கேள்விக்குரியதே.

அதேபோல சார்க் மாநாட்டு காலமாகையால், நிவாரண வெட்டு பிரச்சனையை பூசி மெழுகும் விதமாக, திடீரென்று அதிரடியாக, 'நிவாரணக் குறைப்பு என்பதே பொய்யான செய்தி' என்று அரசாங்கத்தால் தெரிவிக்கப்பட்டது.

அதுபோன்றே, பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட ஓர் அறிக்கையில், நாட்டில் எப்பாகத்திற்கும் உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டதில்லை என்று அவசர அவசரமாக கூறப்பட்டது.

வடக்கில் மட்டுமல்ல, கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் பலவற்றுக்கு உணவுப் பொருட்கள் குறிப்பிட்ட அளவுக்கு மேல் கொண்டுசெல்ல இப்போதும் தடை இருக்கிறது.

திருமலை மாவட்டத்தில் மூதூர் பகுதி போன்றவற்றில் நிவாரணப் பொருட்களைக்கூட ஒரே முறையில் பெற்றுச் செல்லக்கூட தடை இருந்தது.

ஆக, வடக்கு-கிழக்கு நிலவரத்தை உண்மைக்கு மாறாக வெள்ளையடித்து காண்பிக்கவே ஆட்சியாளர்கள் முனைகின்றனர்.

அரசியல் தீர்வு பற்றிய ஆட்சியாளரது இனிப்பான பேச்சுக்கள் போன்றே, அன்றாட பிரச்சனைகள் தொடர்பான ஆட்சியாளரது விளக்கங்கள், வியாக்கியானங்கள் என்பனவும் உண்மைக்கு மாறானவையாக திகழ்ந்து வருகின்றன.

கைதுகள் தொடர்பான உயர்மட்டக் குழு நியமனம், இந்துமத குருமாரை ஜனாதிபதி சந்தித்தது, மற்றும் செம்மணி புதைகுழி விடயத்தில் சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிட்டதாக கூறியது, நிவாரண வெட்டு இல்லை என்று வெளியான அறிக்கை போன்றவை 'சார்க்' கால வெள்ளையடிப்புக்களேயாகும். ●

- நிவாரண வெட்டு இல்லை என்ற அறிக்கை.
- செம்மணி விவகாரத்தில் சி.ஐ.டி. விசாரணை.
- நாட்டின் எப்பகுதிக்கும் உணவுப் பொருட்கள் கொண்டு செல்லலாம் என்ற அறிவிப்பு.
- உயர்மட்டக்குழு நியமனம்.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

# வாஜ்பேயியின் கனவில் தோன்றி...

எல்லாவற்றையும் துறந்துவிட்டனர். அவற்றுக்கு விலையாக நாற்காலி கனவுகளை அணிந்து கொண்டனர்.

கோயில்களில் பிரார்த்தனை செய்யுமாறு மக்களை அழைத்திருக்கிறது ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப்.

ஒரு காலத்தில் புரட்சிகர கொள்கை பேசியவர்கள். அதனால் சற்று நீளமானாலும் பரவாயில்லை, என்று தங்கள் இயக்கப் பெயரில் 'புரட்சிகர' என்பதையும் சேர்த்துக் கொண்டவர்கள்.

கால்மார்க்ஸ், லெனில், ஸ்டாலின் ஆகியோரின் படங்களைத் தவிர சுவாமி படங்களையே இவர்கள் அலுவலகங்களில் மருந்துக்கும் கண்டதில்லை.

மத நம்பிக்கைகள் என்பவை முடத்தனமானவை. ஆனால் படிப்படியாக அவற்றை களைந்து மனிதன் தன்னைத்தானே நம்பும் நிலையை ஏற்படுத்த வேண்டும். நமது விடுதலைக்கு நாம்தான் போராட வேண்டும். ஆண்டவனோ, அந்நிய சக்தியோ அல்ல... இப்படியெல்லாம் வகுப்பு நடத்திய செந்தோழர்கள் ஒருவர் இருவர் இப்போதும் ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப்பில் இருக்கின்றனர்.

அதே கட்சிதான் இன்று பிரார்த்தனை நடத்த கோயில்களுக்கு மக்களை அழைக்கிறது.

அதுவும் எதற்கு? அதுதான் சூப்பர் வேடிக்கை.

இலங்கை இனப்பிரச்சனையில் இந்தியா தலையிடவேண்டும் என்றுதான் பிரார்த்தனை.

அடக்கடவுளே... இப்படியான வழி இருக்க இவர்கள் ஏன் கடந்த காலத்தில் ஆயுதம் தூக்கினார்கள்? பல நூற்றுக் கணக்கான இளைஞர்களை ஏன் பலிகொடுத்தார்கள்? அப்போதே பிரார்த்தனையை ஆரம்பித்திருந்தால் எத்தனை நன்றாக இருந்திருக்கும்!

மக்களின் மத நம்பிக்கைகளை புரட்சிகரக் கட்சிகள் கட்டாயமாக தடுப்பதில்லை. குறுக்கே நிற்பதில்லை ஆனால் அந்த நம்பிக்கைகளை தூண்டிவிடுவதும் இல்லை.

அதுமட்டுமல்ல, கடவுளை நம்பும் மக்கள்கூட கடவுளிடம் மன்றாடினால் இந்தியா தலையிடும் என்று கருதுமளவுக்கு மூட நம்பிக்கை கொண்டதும் இல்லை. கொள்ளப் போவதும் இல்லை.

இந்தியா மட்டுமல்ல, வேறு எந்த மூன்றாம் தரப்பும் இங்கு தலையிடுவது இங்குள்ள அரசியல் சூழலைப் பொறுத்த விடயம்.



இலங்கை அரசில் எமக்கு நம்பிக்கை இல்லை என்றாவது தமிழ்க் கட்சிகள் முதலில் கூறியாக வேண்டும். அதற்கே ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். உட்பட தமிழ்க் கட்சிகள் எதுவும் தயாராக இல்லை.

இலங்கை அரசின் தீர்வு யோசனைகளை உரத்த குரலில் நிராகரிக்கக்கூட இக் கட்சிகளுக்கு துணிச்சல் இல்லை.

ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். ரெலோ, புளொட் விடுத்த கூட்டு அறிக்கை ஒன்றில், அரசின் தீர்வு யோசனையை செழுமைப்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளனர்.

பிரிப்பு என்பது உறுதி என்ற அடிப்படையில் உள்ள தீர்வு யோசனையில் இனி என்ன செழுமை செய்ய வேண்டிக் கிடக்கிறது?! சரி, செழுமைப்படுத்த இந்தியா ஏன் மூன்றாம் தரப்பு ஏன்? அம்மையாரோடு இவர்களே பேசி முடித்துக்கொள்ள வேண்டியதுதானே?

புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் இந்த அரசில் நம்பிக்கை வைத்துள்ளன என்று வெளியுலகம் நம்புகிறது. அப்படி நம்பவைக்க அரசும் ஆவலாக உள்ளது. அந்த எண்ணம் உள்ளவரை மூன்றாம் தரப்பாக தலையிட எந்த நாடும் முன்வராது.

இந்தியாவோ வேறு எந்த நாடோ இங்கு தன் மத்தியஸ்தத்தை மேற்கொள்ள வேண்டுமானால் அதற்கு முக்கியமான முதல் நிபந்தனை என்ன தெரியுமா? ஒட்டு மொத்தமான தமிழ் பேசும் தரப்பு இலங்கை அரசில் நம்பிக்கை இழந்துவிட்டது. அவர்களுக்குள் பேசி தீர்வு காணும் எல்லைகளை தாண்டி விட்டனர் என்ற உண்மை உலகுக்கு தெரிந்தாக வேண்டும்.

இவ்வாறான சூழலை உருவாக்க தமிழ்க் கட்சி ஒன்றாவது முன்வந்தால், அக் கட்சி மக்களை திரட்டி போராடி ஏனைய கட்சிகளுக்கும் நிர்ப்பந்தம் கொடுத்தால் அதனை வரவேற்கலாம்.

அதைவிடுத்து, கோயிலில் பிரார்த்தனை செய்தால், வாஜ்பேயின் கனவில் கடவுள் தோன்றி "அப்பனே! இலங்கைத் தமிழருக்காக உடனே தலையிடு!" என்று கூறுவார் என்பது போல, முடத்தனத்தை வளர்த்து விடுவது நல்லகூத்து.

இந்தக் கூத்தில் ரெலோ, புளொட் இயக்கங்களும் கலந்து கொண்டன.

"நீங்கள் போராடினால்தான் விடிவு ஏற்படும்!" என்று மக்களிடம் தன்னம்பிக்கை ஏற்படுத்தினால் தங்களையும் எதிர்த்து போராடித் தொலைத்து விடுவார்களோ என்று இக்கட்சிகளுக்கு பயம். அதுதான் பிரார்த்தனை.

இப்படியே போனால் கட்சிகளை கலைத்து விட்டு ஆசிரமம் ஆரம்பிக்கும் யோசனைகூட இவர்களுக்கு வரலாம். உண்மையில் இவர்கள் அதற்குத்தான் இலாய்க்கு. தெரியாத்தனமாக இயக்கங்கள் நடத்தி, ஒரு முகாம்கூட தாக்கத் தெரியாமல் இவர்கள்பட்ட கஷ்டங்களுக்கான காரணம் இப்போதுதான் புரிகிறது. காவி கட்ட வேண்டியவர்கள் கருவி ஏந்தியதால் வந்த வினை!

www.padippakam.com

# இடி அமீன்

உண்மைத் தொடர்

அதிர் இடி 20

கடந்தவாரம்

**முன்னாள் ஜனாதிபதி ஒபேடேயின் விசுவாசியும், வெளிநாடொன்றில் மறைந்திருந்து அமீனைப் பற்றி புகார்கள் கூறுபவனுமான உடுகா என்பவனுடன் சமரசம் செய்து உகண்டாவுக்கு அவனை அழைக்கிறான் இடி அமீன்.**

**இனி....**

"பொலிஸ் பாண்ட் வாத்தியக் குழு பொறுப்பதிகாரியே வருக. வருக!" என்று ஒரு குரல் ஒலித்தது.

அறைக்குள் போதிய வெளிச்சம் இன்மையால் எங்கிருந்து குரல் வருகிறது என்பதை உடுகாவால் உடனே அறிந்து கொள்ள முடியவில்லை.

தான் வந்து சேர்ந்திருப்பது இடி அமீன் ஆட்சியில் சித்திரவதைக்குப் பெயர் போன முகாம்களில் ஒன்றுக்குத்தான் என்பது உடுகாவுக்கு தெரியவில்லை.

எனினும், 'இடி அமீன் ஒழித்துக் கட்டத்தான் இந்த இடத்திற்கு அனுப்பியிருக்கிறான், நம்பி ஏமாந்து போனோம்' என்று அவன் உள்ளுணர்வு சொல்லிக் கொண்டது.

அந்த அறையில் மின்னிக்கொண்டிருந்த சிறு மின்விளக்கும் சட்டென்று அணைந்தது. கும்மிருட்டு.

உடுகா அந்த இருளுக்கு தன் கண்களை பழக்கப்படுத்த முயன்றான்.

இருளில் உருவங்கள் அசைவது போன்ற சலனம் தெரிந்தது.

சாவதற்கு முன்னர் தப்பிக்க முயற்சித்தால் என்ன? உடுகாவின் மூளை தூண்டியது.

கைகளையும், கால்களையும் நாற்புறமும் இருளில் வீசினான் உடுகா. யார்மீதும் படவில்லை.

அப்படியே வீசிக்கொண்டு பின்புறமாக நகரமுற்பட்டான். வந்தபாதை அவன் மூளையில் பதிவாகியிருந்தது.

ஓடு, ஓடு, தப்பு!

அவன் மூளையில் அலாரம் ஒலித்த வேளையில்,

அவனது பின்புறமிருந்து கனமான மரக்கட்டை ஒன்றால் தலையில் தாக்கப்பட்டான்.

அவனது திட்டங்களும், தலையும் சேர்ந்தே உடைந்தன. 'குருதி' கொப்பளிக்க தரையில் சரிந்தான்.

கீழே விழுந்தவனை தொடர்ந்தும் அதே கட்டையால் தாக்கியதில், தலை சிதறி, தரையில் இரத்தம் சிதற, உயிர்ப் பறவை அவன் உடலை விட்டு பறந்தது.

உடுகா செத்துப் போனான். சாகும் கடைசி நொடியில், 'வெளி நாட்டிலேயே இருந்திருக்கலாம்' என்று நினைத்துவிட்டு செத்துப் போனான்.

"உடுகாவுக்கு போதிய மரியாதை கொடுக்கப்பட்டுவிட்டது. வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டோம்!" என்று மலாய் முகாமிலிருந்து அமீனுக்கு தகவல் வந்தது.

தகவல் வந்தபோது இடி அமீன் கூட்டம் ஒன்றில் இருந்தான். பல பிரமுகர்கள் அவனைச் சுற்றி இருந்தனர்.

சட்டென்று தன் முகத்தில் சோகத்தை கொண்டுவந்த இடி அமீன், தொலைபேசியிலேயே **"அப்படியா, அடடே... செத்துவிட்டாரா? தன் மனைவி பிள்ளைகளைக்கூட அவர் சென்று பார்க்கவிடவில்லையா சண்டாளர்கள்! சரி, நான் நேரில் வருகிறேன்!"** என்று பேசிக்கொண்டிருக்க, பிரமுகர்கள் கலவரமானார்கள்.

ஃபோனை வைத்த அமீன்: **"பாண்ட் மாஸ்டர் உடுகாவை யாரோ கொன்றுவிட்டார்களாம்! ஒபேடேயின் ஆட்களாகத்தான் இருக்க வேண்டும்!"** என்றபடி அவன் எழ, கூட்டம் அத்துடன் முடிந்ததாய் கருதி, பிரமுகர்களும் எழுந்து கொண்டனர்.

உடுகாவுக்கு பொலிஸ் மரியாதையுடன் இறுதி அஞ்சலி நடத்தப்பட்டது.

உடுகாவின் குடும்பத்துக்கு அரசாங்கத்தின் சார்பாக நிதி வழங்குவதாக அறிவித்தான் இடி அமீன்.

**"சதிகாரர்களால் கொல்லப்பட்ட பாண்ட் மாஸ்டர் குடும்பத்திற்கு என் தனிப்பட்ட உதவியாக பத்தாயிரம் ரூபா வழங்குகிறேன்!"** என்றும் தனியாக அறிவித்தான்.

உடுகாவின் கொலைக்கு இடி அமீன் தான் உத்தரவிட்டிருக்க வேண்டும் என்பதில் ஒபேடேயின் ஆட்களுக்கு சந்தேகம் கிடையாது.

ஒபேடேயின் ஆட்கள்தான் சதி முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள் என்று மக்களை நம்பவைப்பதில் இடி அமீனுக்கு வெற்றி கிடைத்தது.

அதனால் ஒபேடேயின் ஆட்களது சந்தேகங்கள் எடுபடவில்லை.

இனம் காணப்பட்டவர்கள் தவிர கண்டுபிடிக்கப்படாமல் இருக்கும் ஒபேடேயின் விசுவாசிகளையும், தனது ஆட்சிக்கு எதிரான கருத்து உடையவர்களையும் பற்றிய தகவல்களை திரட்ட உத்தரவிட்டான் இடி அமீன்.

**"ஒரு வருடத்தில் இரண்டு முறையாவது சுத்திகரிப்பு நடத்த வேண்டும். சுத்தம் செய்ய வேண்டும். அப்போதுதான் ஆட்சிக்கு எதிரான சதிகாரர்கள் தலையெடுக்கமாட்டார்கள்!"** என்றான் அமீன். என்றது இரகசிய பிரிவு அதிகாரியிடம்.

உளவுப் பிரிவு சுறுசுறுப்பாக செயற்பட்டதில், கிட்டத்தட்ட 800பேர் கைதாகினர். அத்தனைபேரும் இடி அமீனுக்கு எதிரானவர்கள்.

அரசாங்க அலுவலகம் ஒன்றில் சிற்றூண்டி வேளையில் தன் சக ஊழியர்களிடம்



அமீனை குறைகூறிய ஊழியர் ஒருவர் கைதாகி, அந்த அலுவலக ஊழியர்கள் முன்பாகவைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

இடி அமீன் பெண்பித்தன் என்று சக ஆசிரியைகளிடம் தன் எண்ணத்தை பரிமாறிய ஆசிரியை அன்றே கைது செய்யப்பட்டு இடி அமீன் முன்னால் நிறுத்தப் பட்டார்.

**"வாருங்கள் மேடம்"** என்று அமீன் அழைத்த முறையிலேயே கேலி இருந்தது.



மனைவியரில் ஒருவரான சாராவுடன் அமீன்

## தருவது ரசிகன்

ஆசிரியை நடுங்கிக்கொண்டிருந்தார். சக ஆசிரியைகளில் யாரோதான் காட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இனித் தப்ப முடியாது என்பது தெரிந்துவிட்டது. தன்னை விருந்தாக்காமல் விடமாட்டான் என்பதும் சர்வ நிச்சயமாகத் தெரிந்தது.

**"நான் ஒரு ஐம்பது வயதில், தலை நரைத்த தோற்றத்தில் எதிர்பார்த்தேன். இப்படி தளதளவென்று, சூடான இளமையில் எதிர்பார்க்கவேயில்லை"** என்றான். கைகளை தலைக்குமேல் உயர்த்தி விரல்களைக் கோர்த்து முறிவு எடுத்தான்.

**"சரி, இன்று என்ன பாடம் சொல்லித் தரப் போகிறீர்கள்?"** என்றான். நெருங்கிக் கொண்டிருந்தான்.

ஆசிரியை எதுவும் பேசவில்லை. கைகூப்பினார். என்னை விட்டுவிடு என்று கண்களால் கெஞ்சினார்.

கெஞ்சலுக்கு எவ்வித பயனும் இல்லை. அவன் கண்கள் சிவந்திருந்தன. அவன் இராட்சதத்தனமான உடல் ஆசிரியையை சமீபிக்க, அடுத்த நொடியே, இரும்புப் பிடிக்குள் இருந்தார்.

சுவரோடு ஒட்டிக்கொண்ட ஆசிரியை மீது இடி அமீனின் உடல் முழுவதும் சரிந்து அழுத்தியது. முரட்டுத்தனமாக அவளது கழுத்தை பிடித்துக்கொண்டு, முரட்டுத்தனமாக அவள் உதடுகளை தன் உதடுகளால் அழுத்தினான்.

தன் உடல் பாரம் முழுவதையும் அவள் மீது அழுத்தி, அவள் பாரம் தாளாமல் திணறுவதை இரசித்துவிட்டு, சற்று விலகி, அவளை மேலிருந்து, கீழ்வரை விழுங்குவது போலப் பார்த்தான்.

**"முத்தம் கொடடி"** என்றான். அவள் பயத்தில் அவன் சொற்படி எல்லாம் செய்யத் தொடங்க, வக்கிரமான கட்டளைகள் இடத் தொடங்கினான்.

அவள் மூலமே தன் உடைகளை களையச் செய்தான். அவள் அழுதபோது அறைபட்டாள். கழுத்தில் கடிபட்டாள்.

**"இதுதானடி இடி அமீன் குத்து"** என்று அவள் வயிற்றில் குத்தி, அவள் அலறுவதை இரசித்தான்.

**"எனக்கு நீ வேண்டும். உன் இரத்தம் வேண்டும். உன் இறைச்சி வேண்டும். என் எதிரிகளை நான் மன்னிப்பதில்லை. என் எதிரிகளிடம் இரக்கம் காட்டுவதும் இல்லை!"** என்று அவன் போட்ட சத்தத்தில் அவளுக்கு பாதி உயிர் போய்விட்டது.

அந்த ஆசிரியை கடைசித் தடவையாக மன்றாடினாள். **"நானாக உன்னை தேடி வந்தேனா? நீதானடி என்னை சீண்டினாய். இப்போது நான் உன்னை சீண்டப்போகிறேன். தீண்டப் போகிறேன்!"** என்றான்.

அந்த ஆசிரியை அதன்பின்னர் வெளியே வரவேயில்லை. அவளது இரத்தத்தை ருசி பார்த்துவிட்டு உடலை மட்டும் தன் ஆட்களிடம் கொடுத்து கடலில் வீசச் சொல்லிவிட்டான்.

"நல்ல உடம்பு. மீன்களும் ருசி பார்க்கட்டும்" என்று சொல்லி, தன் ஜோக்குக்காக தான் மட்டுமே உரத்துச் சிரித்தும் கொண்டான்.

என்னதான் தந்திரமாக அமீன் தன் எதிரிகளை ஒழித்துக் கட்டினாலும், பழியை தன் எதிரிகள்மீது போட்டாலும் உண்மை படிப்படியாக கசியத் தொடங்கியது.

இடி அமீனின் சிறைகளில் பல நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதாக தகவல்கள் வெளியுலகுக்கு எட்டின.

**"எல்லாமே கட்டுக்கதை கலப்படமில்லாத வதந்தி"** என்றான் இடி அமீன்.

**"அப்படியானால் சிறைகளைப் பார்வையிட அனுமதி உண்டா?"** என்று கேட்டன மனித உரிமை அமைப்புக்கள்.

"நானே அழைப்புவிடலாம் என்றிருந்தேன். நீங்களாகவே கேட்டுவிட்டீர்கள். தாராளமாக வரலாம். பார்வை இடலாம்!" என்று அமீன் கொடுத்த பதிலை அறிந்து, சித்திரவதை முகாம்களுக்கு பொறுப்பான அதிகாரிகள் அரண்டு போனார்கள்.

லுஸிரா என்ற சிறையில் 800க்கு மேற்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அந்த சிறை அதிகாரிக்கு அமீனிடம் இருந்து அழைப்பு வந்தது.

**"மொத்தம் எத்தனை பேர் இருக்கிறார்கள்?"** என்றான் அமீன்.

"எண்ணூறு பேருக்கு மேலே!"

**"அத்தனை பேரும்?"**

"ஆட்சிக்கு விரோதிகள்!" என்றார் சிறை அதிகாரி.

**"உள்ளே கவனிப்பு எப்படி?"**

"தினமும் கவனிப்புத்தான்" என்றார் சிறை அதிகாரி.

அமீன் குரூரமாகப் புன்னகைத்தான்.

**"வீண் செலவு. தினமும் எத்தனை தடவை உணவு கொடுக்கிறீர்கள்?"**

"மதியமும், இரவும்!"

**"நாட்டின் தேசிய வருமானம் இப்படி தேய்ந்து போகலாமா?"** என்றான். பின்னர் குறுக்கும் நெடுக்குமாக அந்த அறையில் நடந்தான்.

தீவிரமான சிந்தனைக்குப் பிறகு அமீனின் குரல் ஒலித்தது:

**"அத்தனை பேரையும் விடுதலை செய்ய வேண்டும்!"**

அமீன் சுயநினைவுடன்தான் பேசுகிறானா? என்ற சந்தேகம் அதிகாரிக்கு ஏற்பட்டிருந்தால், அந்த விடுதலை பற்றிய அமீனின் விபரிப்பு சந்தேகத்தை சுத்தமாக துடைத்தெறிந்தது.

**(இடி தொடரும்)**

---

## கண் எதிரே தோன்றினாள்

## மணமகளும் ஆகினாள்



'**க**ண் எதிரே தோன்றினாள், கனி முகத்தை காட்டினாள்' இந்தப் பாடல் நடிகர் விஜய்க்குப் பொருந்தும். தோன்றியவர் சங்கீதா.

இலண்டனில் மணமகள் பிடித்திருக்கிறார் விஜய். இது பெற்றோர்கள் பார்த்து செய்து வைத்த ஏற்பாடு என்றும், இலண்டனில் சமீபத்தில் விஜய்யின் பிறந்தநாளில் தான் அந்தப் பெண்ணை முதன் முதலாகக் கண்டதாகவும் உடனே பிடித்துப்போய் விஜய்க்கு மணமகளாக்கியதாகவும் முதலில் கூறப்பட்டது. இதனை கூறியதே விஜய்யின் பெற்றோர்கள்தான்.

"காதலை மறைக்கிறார்கள். திடீரென்று நடந்த ஏற்பாடல்ல. நீண்டகாலமாக அப்பெண் விஜய்யின் ரசிகையாக இருந்தவரே" என்று முரசு சினிவிசிட்டில் அடித்துக் கூறியிருந்தோம் அல்லவா.

தமிழக பிரபல சஞ்சிகைக்கு விஜய் கொடுத்துள்ள பேட்டி 'சினிவிசிட்' தகவலை உறுதி செய்கிறது. இப்பேட்டியிலும் இது காதல் அல்ல என்று விஜய் சாதிக்கிறார். ஆனால் மணமகள் சங்கீதா தன் ரசிகை என்பதை விஜய் ஒப்புக்கொள்கிறார்.

**கே: என்ன திடீர் காதல்?**

**விஜய்:** கல்யாணங்கிறது கரெக்ட். காதலங்கிறது தப்பு. அப்பா அம்மா பார்த்து நடத்தி வைக்கிற அரேஞ்ச்டு மேரேஜ்தான். நான் விபரமாகவே கூறிவிடுகிறேன். பொண்ணு பேரு சங்கீதா. சிலோன் தமிழ்ப் பொண்ணு. இலண்டனில் வசிக்கிறாங்க.

இரண்டு வருஷம் முன்னாடி 'லவ் டுடே' ஷூட்டிங்கின்போது ஸ்ருடியோவிலே ஒரு ரசிகையாக வந்து என்னைப் பார்த்தாங்க.

'வீட்டுக்கெல்லாம் வந்தா உங்க அப்பா அம்மாவெல்லாம் பேசுவாங்களா?' கேட்டாங்க. 'தாராளமா' என்று கூறினேன். அவ்வளவுதான் அதே மாதிரி வந்தாங்க.

பொதுவாக ரசிகர்கள் வீட்டுக்கு வருவார்கள். படம் எடுத்துக்கொள்வார்கள். அவ்வளவுதான். ஆனால் சங்கீதா அப்படியில்லை. என்ன காரணம்னே தெரியல்லை. வீட்டுக்கு வந்தாங்க, லஞ்ச் சாப்பிட்டாங்க. அப்புறம் இலண்டன் போயிட்டு அடிக்கடி ஃபோன் பண்ணினாங்க. 'டச்'லயே இருந்தாங்க. அப்பவெல்லாம் நானும் சங்கீதாவும் நண்பர்களாகவே இருந்தோம்.

**கே: நீங்கள் திருமணம் செய்வதால் உங்க ரசிகைகள் மனமுடைந்து போவார்கள் அல்லவா?**

**விஜய்:** அப்பா, அம்மாவை எதிர்த்து திருட்டுத்தனமாக கல்யாணம் பண்ணிக்கொண்டால்தான் என் இமேஜ் பற்றி கவலைப்பட வேண்டும். இப்போ இது அரேஞ்ட் மேரேஜ். ரசிகைகளுக்கு ஏமாற்றம் இருக்கலாம். இல்லாமல் போகலாம். அதேமாதிரி ரசிகைகளில் ஒருவரைத்தானே நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்.

## அது ஒன்றும் குற்றமில்லை



**க**னடாவில் உள்ள விக்டோரியா பார்க்கில்தான் அந்தக் கண்கொள்ளாக் காட்சி நடந்திருக்கிறது.

இரண்டு பெண்கள் அங்கு சென்றனர். மளமளவென்று தங்கள் மேலாடைகளை கழற்றிப் போட்டுவிட்டு சூரியக் குளியல் செய்ய ஆரம்பித்துவிட்டனர்.

அங்கிருந்த பொதுமக்கள் அதிர்ச்சியுடன் பொலிசுக்கு தகவல் கூறினர். பொலிசார் வந்தனர். மேலாடைகளை அணிந்து கொள்ளுமாறு மன்றாட்டமாகக் கூட கேட்டுப் பார்த்தனர். அம்மணிகளின் செவிகளில் ஏறவேயில்லை.

பொது இடத்தில் அநாகரிகமாக நடந்து கொண்டதாக வழக்குத் தொடுக்கப்பட்டது. தீர்ப்பு என்ன தெரியுமா? "அரை நிர்வாணமாக சூரியக் குளியல் செய்வது தப்பே கிடையாது!"

அரை நிர்வாண உரிமைக்காக அடம் பிடித்த பெண்களுக்கு எத்தனை வயதிருக்கும் என்று நினைக்கிறீர்கள்? கேதலீன் ரைஸ் வயது 42. எவான்ஜலின் காட்ரன் வயது 64.

## சினிமாவே காரணம்



**வெ**ளிப்படையான 'செக்ஸ்' காட்சிகளும், வன்முறைகளும் கொண்ட சினிமாக்கள் வன்முறைக்கும், தவறுகளுக்கும் வழிவகுக்கின்றன. இதனை இந்தியாவிலோ, இலங்கையிலோ யாரும் கூறவில்லை. அமெரிக்காவின் நீதிமன்றம் ஒன்றில் கூறியுள்ளனர்.

'எமனேல் 2 சொசைட்டி' என்ற சினிமாவைப் பார்த்து அப் படப் பாணியில் ஒருவரை கொலை செய்ததாக குற்றவாளி ஒருவர் ஒப்புக்கொண்டாராம்.

அதேபோல பிஸ்லி என்ற பெருயடைய இளைஞரும் அவருடைய அருமைக் காதலியும் இணைந்து ஒரு கொள்ளையும் ஒரு கொலையும் செய்து மாட்டிக்கொண்டனர். 'நேச்சுரல் பார்ன் கில்லர்ஸ்' என்ற படத்தை 20 தடவை பார்த்தோம். அதில் ஆணும், பெண்ணுமாக இருவர் இணைந்து 52 பேரை சாய்க்கிறார்கள். நாங்கள் ஆக ஒரே ஒருகொலைதான் செய்து பார்த்தோம் என்று வாக்குமூலம் கொடுத்திருக்கின்றனர்.

இவற்றின் பின்னர்தான் அமெரிக்க நீதிமன்றம் சினிமாக்களை ஒரு பிடிபிடித்திருக்கிறது.

## கவுண்டமணிக்கு அறை

**சி**னிமாவில் சண்டைக் காட்சிகளில் ஒருவர்மீது ஒருவர் பட்டுக்கொள்ளாமல் தான் நடிகர்கள் சண்டை போடுவார்கள். ஆனால் உண்மையாகவே சண்டை போட்டுக் கொள்வதும் உண்டு.

சமீபத்தில் கவுண்டமணியும் சுந்தர்ராஜனும் கட்டிப்புரண்டு சண்டைபோட்டு படப்பிடிப்பு அரங்கையே கிடுகிடுக்க வைத்துவிட்டனர். 'லவ் பண்ணுங்க சார்' என்ற படத்தின் படப்பிடிப்பில்தான் இருவரும் உண்மையாகவே கட்டிப்புரட்டு மோதினார்கள்.

இயக்குநராக இருந்து நகைச்சுவை நடிகரானவர் சுந்தர்ராஜன். அவருடன் கவுண்டமணிக்கு ஏதோ மனக்கசப்பு. சுந்தர்ராஜன் வசனம் பேச கவுண்டமணி கேட்காத மாதிரி இருந்தாராம். "அவர் பேசுவது காதில் விழவில்லை" என்று இயக்குநரிடம் கூறினாராம் கவுண்டமணி.

அதனால் ஆத்திரம் அடைந்த சுந்தர்ராஜன் "என்னடா கேட்கவில்லை" என்று பாய்ந்து கவுண்டமணியின் கன்னத்தில் பளார் என்று அறைந்தார். கவுண்டமணியும் திருப்பி அடிக்க, இருவரும் கட்டிப்புரண்டனர். படப்பிடிப்பில் இருந்தவர்கள் தலையிட்டு இருவரையும் பிரித்துவிட்டனராம்.

## சுட்டால் ஆபத்தில்லை

**மூ**ட நம்பிக்கைகள் எங்குதான் இல்லை? லைபீரியா நாட்டில் நடந்த சம்பவம் இது.



மூலிகைகளை ஆராய்ச்சி செய்யும் டாக்டர் ஒருவன் இருந்திருக்கிறான். ஆராய்ச்சி, மந்திரம், தந்திரம் என்று மக்களை ஏமாற்றிக்கொண்டிருந்தானாம்.

அவன் சொல்வதை அப்படியே நம்ப பலர் இருந்தார்கள். சம்பத்தில் ஒருநாள் அந்த டாக்டர் விட்ட புரளிதான் விபரீதத்தின் உச்சக்கட்டம்.

"நான் மூலிகை கண்டு பிடித்திருக்கிறேன். இதை சாப்பிட்டவிட்டு நான் சொல்லும் மந்திரத்தை திரும்பக் கூறினால் துப்பாக்கியால் சுட்டால்கூட ஆபத்து நேராது" என்றானாம்.

அதனை நம்பி இரண்டு பேர் விழுந்தடித்து மூலிகையை குடித்தனர். அதன்பின்னர் அவர்களை அந்த கிறுக்கு டாக்டர் சுட்டான். இரண்டு பேரும் அந்த இடத்திலேயே துடி துடித்து செத்துப்போயினர்.

விஷயம் அறிந்து பொலிஸ் வந்து அமுக்கியது அந்த போலிடாக்டரை. அப்படியிருந்தும் அந்த கிறுக்கு டாக்டர்: "மந்திரத்தை சரியாக சொல்லியிருந்தால் செத்திருக்கமாட்டார்கள்" என்று கூறிக்கொண்டிருக்கிறானாம்.



படிப்பகம்

www.padippakam.com

## பந்துக்குள் சுவை



காலப்பந்து உற்பத்தி நடக்கிறது என்றா நினைக்கிறீர்கள். ஃபிரான்ஸில் கால்பந்து போட்டிகள் நடந்தபோது கால்பந்து காய்ச்சல் உலகெங்கும் பரவியிருந்தது. கால்பந்து போன்ற வடிவத்தில் பல பாவனைப் பொருட்கள் தயாராகி விற்பனையில் வெளுத்து வாங்கின.

படத்தில் இருப்பது கால்பந்து வடிவத்திலான பழரசக் கோப்பை. உள்ளே இருக்கும் பழரசத்தை உறிஞ்சி சாப்பிட்டுக் கொள்ளலாம். சுவைக்கச் சுகம்.

## கீழே நெருப்பு

தாழிச்சட்டியில் பொரிக்கலாம்-வறுக்கலாம் என்பது தெரிந்ததுதான். இப்படி ஆளைப் போட்டும் தகிக்க வைக்கலாம் என்பது இப்போதுதானே தெரியும்!

இங்கே பெரிய தாழிச்சட்டியில் இருப்பவர் புத்த சன்னியாசி (யுத்த சன்னியாசி அல்ல) ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர். புத்த சன்னியாசிகளின் பிரார்த்தனையின் சக்தியை நிரூபிக்க இந்த கடினமான பயிற்சி.

பெரிய தாழிச்சட்டியில் தண்ணீரை நிரப்பி சன்னியாசியை அதற்குள் அமரவைத்து, கீழ்ப் புறத்தில் நெருப்பு மூட்டி- தண்ணீரை கொதிக்க வைப்பார்கள். அந்த வெப்பத்தை பொறுத்துக் கொண்டு பிரார்த்தனை செய்து தன் சக்தியை நிரூபிப்பாராம் சன்னியாசி.



## நல்லிணக்க மாளிகை

அமெரிக்காவில் 94 சதவீதமானவர்கள் மதநம்பிக்கை உள்ளவர்கள். 79 வீதமானவர்கள் மறுபிறவியை நம்புகின்றனர். 78 சதவீதத்தினர் பேய் பிசாசுகளில் நம்பிக்கை உள்ளவர்கள்.

ஏதோ கீழை நாடுகளில்தான் மூடநம்பிக்கைகள் இருப்பது போல் சிலர் கருதிக்கொண்டு, மேலை நாடுகளை புகழ்வது அறியாமைதானே!

படத்தில் இருப்பது அமெரிக்காவில் உள்ள மதநல்லிணக்க மாளிகை. 1905இல் சுவாமி திரிகுணதிதா என்பவரால் மிகுந்த கலை நயத்தோடு உருவாக்கப்பட்டது. பல மதங்களை குறிக்கும் வகையில் அமைந்த இந்த நினைவுச் சின்னம் சகலரையும் கவர்கிறது. கலிஃபோர்னியாவில் சான்பிரான்ஸிஸ்கோவில் இது உள்ளது.


### தகவல் பெட்டி



## அசையா மலை

மலை அசைந்தாலும் இந்த மனித மலை அசையாது. இந்த ஜப்பானிய சுமோ மல்யுத்த மாமலை உலகின் பலநாடுகளுக்கு விஜயம் செய்து வருகிறது.

சுமோ கலையை பரப்பும் இந்த உலக வலத்தின் ஒரு கட்டமாக கனடா சென்றபோது, சிறுவர்கள் பலர்கூடி ஆசைதீர அசைத்துப் பார்க்கிறார்கள். ம்ஹூம் இம்மியும் அசையவில்லை.





லாபாய்......
.......லாபாய்....

## புழுத்துப்போன துப்பாக்கிகள்

கூடையிலே கருவாடு போல குவிந்து கிடப்பவை ஆயுதங்கள். எல்லாமே நவீன ரக ஆயுதங்கள். எம். 16 ரக துப்பாக்கி உட்பட அமெரிக்க தயாரிப்பு ஆயுதங்களே கூடையில் காணப்படுகின்றன. நம் நாட்டில் திருவிழாக் கடைகளில் விளையாட்டுத் துப்பாக்கிகள் குவித்துவைத்து விற்பதுபோல, அமெரிக்காவில் உண்மையான துப்பாக்கிகளை கடைகளில் குவித்து வைத்து விற்பனை செய்கிறார்கள். யார் வேண்டுமானாலும் வாங்கலாம். வைத்திருக்கலாம். அனுமதிப் பத்திரம்கூட தேவையில்லை.

குழந்தைகளும் விளையாட்டுத் துப்பாக்கிகளை நாடுவதில்லை. நிஜத் துப்பாக்கிகளுடன்தான் விளையாட்டு. வருடம்தோறும் பல்லாயிரம் துப்பாக்கிகள் விதம் விதமாக உற்பத்தியாகிக் குவிகின்றன. துப்பாக்கித் தயாரிப்பாளர்கள் பாடு கொண்டாட்டம்.

ஆனால் திண்டாட்டம் அமெரிக்க மக்களுக்குத்தான். வன்முறைகள் பெருகிவிட்டன. பள்ளிக்கூட மாணவர்கள் தங்கள் சண்டைகளுக்கும் துப்பாக்கிகளால் சுட்டுக் கொள்கிறார்கள்.

புழுத்துப்போன துப்பாக்கிகள் பெரும்பிரச்சனையாக அமெரிக்காவில் மாறியுள்ளன. உலகுக்கு உபதேசிக்கும் அமெரிக்க அரசு தன் நாட்டில் குழந்தைகளையும் துப்பாக்கிப் பிரியர்களாக மாற்றிக்கொண்டிருக்கிறது.

ஒரு எம்.16 துப்பாக்கி வாங்கினால் ஒரு பிஸ்டல் இனாம். அந்தளவுக்கு துப்பாக்கி வியாபாரிகள் போட்டி போட்டுக்கொண்டு விற்பனை செய்கிறார்கள்.

## புலிவால் அம்மையார்

இந்த அம்மையார் பிடித்திருப்பது புலியை அல்ல. புலி வாலை. புலி வாலைப் பிடிக்கவே எப்படி பயப்படுகிறார் பாருங்கள். எட்ட நின்று தொட்டுப் பார்க்கிறார். நல்லவேளை புலி கூண்டுக்குள் இருக்கிறது.





படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 65

# அஜித்குமார்—ஹீரா மோதல்

## "கைவிட்டால் தீக்குளிப்பேன்"

கத்தரிக்காய் முற்றினால் சந்தைக்கு வந்துதான் ஆகவேண்டும். காதலும் அப்படித்தான்.

சினிமா நடிகர், நடிகைகள் தங்கள் காதலை முதலில் மறுப்பதும் பின்னர் தாமே ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுப்பதும் பழகிப்போன ஒன்று.

சினிமா நடிகர் நடிகைகளில் காதலிப்பவர்களும் உள்ளனர். உடல் தேவைகளுக்காக மட்டும் நெருங்கிப் பழகுபவர்களும் உள்ளனர். பெரிய ஹீரோக்களின் கடைக் கண் பார்வைக்காக அவர்கள் விருப்பப்படி இசைந்து போகும் நடிகைகள் அவர்களை காதலிப்பதில்லை.

சினிமா உலக காதலர்கள் பட்டியலில் அஜித்குமார்-ஹீரா பெயர்களும் இடம்பிடித்துக் கொண்டன.



விநோதினி

இருவருமே தம் காதலை பத்திரிகைகள் வெளியிட்டபோது சீறிப் பாய்ந்தவர்கள். அஜித்குமார் மட்டும் ஹீரா நல்ல நண்பி. ஆனால் தமது உறவு கல்யாணத்தில் முடியுமா முடியாதா என்று கூற இயலாது என ஒரு தடவை பேட்டி கொடுத்திருந்தார்.

இடையில் ஒரு தடவை அஜித், ஹீரா உறவு முறிந்து போனது. தன்னுடன் இணைந்து நடிக்கும் நடிகைகளுடன் அஜித் சில இரவுகளை பகிர்ந்து கொள்ள, ஹீராவுக்கு கோபம் பற்றிக் கொண்டு வந்தது.

பிரபல நடிகை ஒருவருக்கு தங்கை முறையான 'வரி' நடிகையோடு அஜித்குமார் கொஞ்சம் அதிகமாகவே ஈடுபாடு கொண்டிருந்தார். இருவரும் பிறந்தநாளை 'பிறந்தநாள் உடை'யோடு தனி பங்களா ஒன்றில் கொண்டாடியதாக அறிந்த ஹீரா கோபத்தின் உச்சிக்கே போய்விட்டார். உறவைக் கத்தரித்தார்.

பின்னர் எப்படியோ மறுபடி ராசியானார்கள். இருவரும் வெளிநாட்டு பயணம் செய்து பிரிந்திருந்த நாட்களுக்குமாகச் சேர்த்து உல்லாசம் அனுபவித்தனர்.

ஹீரா கர்ப்பமானார். "இப்போது குழந்தை வேண்டாம்" என்று அஜித் கூறியதால் கலைக்கச் சம்மதித்தார்.

### 'இதயம்' நாயகி

ஹீரா முதன் முதலில் அறிமுகமான படம் 'இதயம்'. மிகப் பவ்வியமாக, கல்லூரி மாணவியாக போர்த்திக்கொண்டு நடித்து பெயர் தேடினார்.

பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக கவர்ச்சி காட்ட ஆரம்பித்தார். ஹீரோக்களுடனும் நெருங்க ஆரம்பித்தார். முதன்முதலில் ஹீராவை வலையில் வீழ்த்தியவர் சரத்குமார். பின்னர் அவர்கள் காதல் முறிந்தது. இந்திப் படவுலகு நோக்கிப் பறந்துபோனார் ஹீரா.

அங்கு ஏகப்பட்ட கிசுகிசுக்களில் அடிபட்டார். கிட்டத்தட்ட நிர்வாணமாக கவர்ச்சி போஸ் கொடுத்து முன்பாய் சினிமா பத்திரிகைகளை சூடாக்கினார்.

எதற்கும் தயாராக இந்திப் படவுலகில் புகுந்தவரை பிரபல ஹீரோக்கள் முதற்கொண்டு பிரபல இயக்குநர்கள்வரை தங்கள் உல்லாசங்களில் பங்குதாரர்களாக்கிக் கொண்டனர்.

ஒரு கட்டத்தில் ஹீராவுக்கே இந்திப்பட உலக சல்லாபங்கள் திகட்டி விட்டன. அலுத்துப்போயின. திரும்ப வந்தார் தமிழ் சினிமாவுக்கு.

'காதல் கோட்டை' படத்தில் அஜித்குமாருடன் ஒரு பாடல் காட்சியில் ஹீராவின் அதிரடி அசைவுகளால் அஜித்குமார் கவிழ்ந்து போனார். ஹீராவின் அரவணைப்பில் மெய்மறந்த அஜித் ஹீராவே கதி என்று மாறிப்போனார்.

இப்படியாக வளர்ந்த இவர்கள் காதல், ஏற்றம் தாழ்வு பலமுறை கண்டு இப்போது திருப்பக் கட்டத்தில் புகுந்திருக்கிறது.

எந்தப் பத்திரிகைகளுக்கு தங்கள் காதலை மூடிமறைத்தனரோ, அந்தப் பத்திரிகைகள் அறியும் விதமாக இருவரும் பகிரங்கமாகவே படிப்பிடிப்பில் தங்கள் கோபதாபங்களை கொட்டித்தீர்த்துள்ளனர்.

### ஹீரா கோபம்

சென்னை மந்தை வெளியில் பெரிய பங்களா ஒன்று கட்டி முடித்துள்ளார் அஜித்குமார். இதனை ஹீராவுக்காக அஜித் கட்டிய வசந்த மாளிகை என்று சினிமா உலகினர் கேலிசெய்வதும் வழக்கம்.

இம் மாளிகையில் அஜித் மட்டும் சென்று குடியேறியுள்ளார். இது ஹீராவுக்கு முதல் சந்தேகத்தை எழுப்பியது. தனியாக இருந்து உல்லாசம் காண்கிறாரோ என்று சந்தேகம்.

அடுத்தாக இடிபோன்ற ஒரு செய்தி ஹீராவை கலக்கிவிட்டது. அஜித்குமாரின் பெற்றோர் அவருக்கு மணமகள் தேடுகிறார்கள் என்பதை அறிந்தார் ஹீரா. பத்ரகாளியானார்.

கே.எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் அஜித்குமார் ஜோடியாக தேவயானி, ஹீரா நடிக்கும் படம் ஒன்றின் படப்பிடிப்பு நடந்து வருகிறது. இன்னமும் பெயர் சூட்டப்படாத இப்படப் பிடிப்பில் அஜித்குமார் மீது பலர் முன்பாகவே பாய்ந்து விழுந்தார் ஹீரா.

"என்னைக் கைவிட்டால் தீக்குளிப்பேன். என் பாவம் உன்னைச் சும்மா விடாது" என்று கத்தினார். அஜித்குமார் சமாதானப் படுத்த முயன்றும் பயனில்லை. படப்பிடிப்பில் பங்குகொள்ள முடியாமல் திரும்பச் சென்றுவிட்டார்.

### அஜித் பேட்டி

அஜித்குமாரை எல்லோரும் மொய்த்துக் கொண்டனர். "எனக்கு வீட்டில் பெண் பார்ப்பது உண்மைதான். அவர்கள் தங்கள் கடமையைச் செய்கிறார்கள். ஆனால் எனக்கு ஹீராவைத்தான் பிடிக்கும். எங்களுக்கு குறுக்கே யார் நின்றாலும் நான் அதை விரும்பமாட்டேன்" என்று கூறினார் அஜித்குமார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் படத்தின் கதையும் கிட்டத்தட்ட அஜித், ஹீரா காதல் கதை மாதிரித்தான் இருக்கிறதாம். படத்தில் இரண்டு ஜோடிகள் அஜித்குமாருக்கு. ஒருவர் தேவயானி. இன்னொருவர் ஹீரா. தேவயாணி மனைவியாகவும், ஹீரா காதலியாகவும் நடிக்கின்றனர்.

படக்கதையின் படியும் ஹீராவை ஏமாற்றியதால், ஹீரா மண்ணெண்ணெய் ஊற்றி தீமூட்டிக் கொள்ள முயல்வது போன்ற காட்சி இருக்கிறதாம். எல்லாமே பொருத்தமாக இருப்பது சில சமயங்களில் நடக்கும் விசித்திரம்தான்.

## மன்மத ராசா

சூர்யா-சிவகுமார் இருவரையும் வைத்து பழம்பெரும் தயாரிப்பாளர் ராஜ்கண்ணு எடுக்கும் படம் 'மன்மதராசா'.

பாரதிராஜாவை அறிமுகம் செய்த தயாரிப்பாளர் ராஜ்கண்ணு. பதினாறு வயதினிலே

சினிவி



மன்சூர் அலிகான்-ஜூலியா
படம்: வெட்டு ஒன்னு துண்டு ரெண்டு

* நடிகர் திலகம்-விஜய் இணைந்து நடித்த 'ஒன்
தயாரித்த பிரபல இயக்குநரான சி.வி. ராஜேந்தி
படத்தை இயக்கவுள்ளார். இதுவும் அவரது
ஆகும்.

* கன்னடத்தில் பிரபலமாக இருக்கும் சிவரா
நடிக்கும் படத்திற்கு 'ஏ.கே.ஃபோட்டி செவன்
பட்டுள்ளது. இப்படம் கன்னடம்-தெலுங்கு ஆகி
தயாராகிறது.

* மு.களஞ்சியம் இதுவரை இயக்கிய பட
கதாநாயகியாக நடித்தவர் தேவயாணி.
சியம் சொந்தமாகப் படமொன்றைத் தயா
படத்திலும் தேவயாணிதான் கதாநாயகி

* மலையாளத்தில் மோகன்லால்-மஞ்சு வ
நடித்த 'ஆரம் தம்புரான்' வெற்றி பெற்ற
'கண் மாடம்' என்ற படத்தில் இணை
ளர். இப்படத்தைத் தயாரிப்பவர்
மனைவி.

* தன் மகன் விஜய்யைக் கதாநாயக
இதுவரை 7 படங்களை இயக்கிய
சேகரன் விஜய்யை வைத்து மீ
படத்தை இயக்கவுள்ளார். 'ஜீன்ஸ்'
தயாரித்த அமிர்தராஜ் இப்படத்
கிறார்.

* 'சந்திரலேகா', 'மாணிக்கம்
படங்களுக்குப் பின் படவா
ளின்றி இருக்கும் வனிதா விஜ
தற்போது பி.வாசுவிடம் உதவி
நராகப் பயிற்சி பெற்று வரு

* பிரபு நடித்த 'சின்ன மாப
படத்திற்கு முதலில் வை
பட்ட பெயர் 'விஸ்வநாத
ராமமூர்த்தி'. இப்பெயர்
ஜெயராம்-விக்னேஷ் நடி
கும் படமொன்று தயார
கிறது. இப்படத்தை
சி.ரங்கநாதன் இயக்கு
கிறார்.

## இளமை வேகம்

தயாரிப்பாளர் குஞ்சுமோன் பணத்தைக் கொட்ட அவர் மகன் எபி நடிக்கும் 'கோடீஸ்வரன்' படத்தின் படப்பிடிப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

எபிக்கு ஜோடி கரிஷ்மா கபூர். சென்னை வந்த கரிஷ்மா கபூர் தன் ஜோடியாக நடிக்கும் எபியை கண்டதும் 'சின்னப்பையன்' மாதிரி இருக்கிறீர்கள். நான்தான் சொல்லித்தர வேண்டும்போல் இருக்கிறது" என்று ஜோக்கடிக்க, எபி வெட்கப்பட்டுப் போனார்.

வெட்கம் எல்லாம் முதலில்தான். பின்னர் பாடல் காட்சி ஒன்று எடுக்கப்பட்டபோது கரிஷ்மா கபூரே திணறும் அளவுக்கு இளமை வேகத்தை காட்டிவிட்டாராம் எபி.

## அது காலம் இது பூமி

அருண்குமார், குஷ்பு நடித்த படம் 'துள்ளித்திரிந்த காலம்' இந்த ஆண்டு தான் வெளிவந்தது.

தற்போது செல்வா, விலிதா நடிக்கும் படம் ஒன்றுக்கு 'துள்ளித்திரிந்த பூமி' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

படத்தை இயக்குபவர் புதுமுகம் பாரதிராமன். பல தெலுங்குப் படங்களில் உதவி இயக்குநராக அனுபவப்பட்டவராம். இசை: தேவா. பாடல்கள்: பழனிபாரதி, அறிவுமதி.



ரகுமான்-ரசிகா
படம்: உறவுக்கு மரியாதை

## காப்பாற்றிய படம்

முழுநீள நகைச்சுவை விருந்தான 'அரிச்சந்திரா' படத்திலும் மீனா ஜொள் விருந்து படைத்திருக்கிறார்.

'நாம் இருவர் நமக்கு இருவர்' படத்தில் மீனா மாய்ந்து மாய்ந்து கவர்ச்சி காட்டியும் படம் பப்படமானது. ஆனால் அரிச்சந்திரா முதலுக்கு மோசமில்லாமல் ஓடி கார்த்திக், மீனா இருவரையும் காப்பாற்றிவிட்டது.

## மன்சூர் படும் அவதி

மன்சூர் அலிகானுக்கு ஏகப்பட்ட பிரச்சனைகள். 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' படத்தில் மன்சூர் அலிகான் அறிமுகம் செய்த நடிகை ஜூலியா.

இந்த ஜூலியா மன்சூர் அலிகானை பிழிந்து எடுத்துவிட்டாராம். எக்கச்சக்கமான பணத்தை உருவி எடுத்துவிட, பாவம் மன்சூர் அலிகான் இப்போது பணக்கஷ்டத்தில் இருக்கிறார்.

இது போதாது என்று பெண் ஒருவர் கொடுத்த புகாரை சமாளிக்கவும் ஏகப்பட்ட செலவு செய்தாராம்.

திருட்டு வீடியோ எடுத்ததாக வீடியோ கடை ஒன்றுக்குள் புகுந்து கலாட்டா செய்தார் மன்சூர் அலிகான். வீடியோ கடை டமால் டுமாலாகியது. பொலிசார் கைதுசெய்து வழக்குத் தொடுத்தனர். அதிலும் ஏராளமான செலவாம்.

இதற்கிடையே 'வெட்டு ஒன்று துண்டு ரெண்டு' படமும் வெளியான வேகத்தில் திரையரங்கை விட்டு விரும்பிவிட்டது. படு தோல்வி. ஜூலியாவுக்கு மட்டும் நிகரலாபம்.



கரிஷ்மா கபூர்
படம் கோடீஸ்வரன்

## காதல்

அப்பாஸ், சாக்ஷி இருவரும் ஜோடியாக நடிக்கும் புதிய படத்திற்கு 'காதல்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இப்படத்திற்காக ஆறு பாடல் காட்சிகள் படமாக்கப்பட உள்ளன. மூன்று கோடி ரூபாய் பட்ஜெட்டில் தயாராகிவருகிறது.

இப்படத்தை சங்கீத சீனிவாசன் இயக்குவார். இசை: மரகதமணி. வித்தியாசமான பாத்திரத்தில் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் நடிக்கிறார்.


படிப்பகம்

www.padippakam.com

ல் சிவகுமாரை நடிக்க வைக்க
ினார் ராஜ்கண்ணு. சிவா
விட்டார்.
போது ராஜ்கண்ணுவின் தயா
தந்தையும், மகனும் நடிக்கிறார்

த்தின் கதாநாயகி புதுமுகம்.

பிரபல நடிகை சுமித்ராவின் மகள்தான் புதுக் கதாநாயகி. இன்னமும் நாயகிக்கு பெயர் சூட்டவில்லை.

கவுண்டமணி, மணிவண்ணன், ஆர். சுந்தரர்ராஜன், சின்னிஜெயந்த் ஆகிய நகைச்சுவை அணியும் உண்டு. ராதிகா, மனோரமா, விசித்ரா ஆகியோரும் நடிக்கவுள்ளனர். இயக்கம்: தமிழரசன், இசை: இளையராஜா.



# பிரபல நடிகை கைது

## பொலிசார் நடத்திய வேட்டை

தமிழ்ப் படங்கள் பலவற்றில் நடித்தவர் மாதுரி. கதாநாயகியாக சில படங்களிலும், கவர்ச்சி கலந்த பாத்திரங்களில் பல படங்களிலும் நடித்தவர்.

தற்போது பட வாய்ப்புக்கள் அதிகமில்லாமல் இருக்கிறார். இயக்குநர்கள் சிலர் வாய்ப்புத் தருவதாகக் கூறி அவரை தங்கள் ஆசைக்கு இணங்க வைத்து ஏமாற்றிவிட்டனர்.

முன்னணி நடிகர் ஒருவரும் அவரை காதலிப்பதாக ஏமாற்றி கைவிட்டார். இதன் பின்னர் பிறமொழிப் படங்கள் சிலவற்றில் நடித்த மாதுரி பகுதி நேரமாக பிரபல தொழிலதிபர்களை மகிழ்வித்து பணம் சம்பாதிக்கத் தொடங்கினார்.

சென்னையில் உள்ள பிரபல விடுதி ஒன்றில் விபசார ஒழிப்பு பொலிசார் 18.07.1998 அன்று தேடுதல் நடத்தினார்கள்.

அப்போது அறை ஒன்றில் பிரபல தொழிலதிபருடன் ஜாலியாக இருந்த நடிகை மாதுரி கைதானார். மாதுரிக்கு 20 ஆயிரம் ரூபா கொடுத்திருந்தார் தொழிலதிபர். நம்நாட்டு மதிப்பில் கிட்டத்தட்ட 40 ஆயிரம் ரூபாய்.

'நல்ல மனசுக்காரன்' படத்தில் பாண்டியராஜனின் ஜோடியாக நடித்த பிரியாவும் விபசாரத் தடுப்பு பொலிசாரால் கைதாகியுள்ளார். இவரும் தொழிலதிபருடன் உல்லாசம் காண்பவராம். இவருடன் சேர்ந்து தொழிலதிபர்களை சந்தோசப் படுத்தும் ராணி என்னும் அழகியையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

## ப்ரீதாவின் நகை மாயம்

'சாமி கொடுத்த வரம்' படத்தில் நடித்துக் கொண்டிருந்தபோது ப்ரீதா விஜயகுமாரின் வைரநெக்லஸ் காணாமல் போய்விட்டதாம்.

தாய் மஞ்சுளாவுடன் படப்பிடிப்புக்கு வந்தார் ப்ரீதா. நெப்போலியனுடன் பாடல் காட்சியில் நடிப்பதற்காக நெக்லஸை கழற்றி தாயாரிடம் கொடுத்துவிட்டுப் போனார். அதனை தோல்பையில் வைத்திருந்தார் மஞ்சுளா.

நெப்போலியனும், ப்ரீதாவும் கட்டியணைத்து டூயட் பாடுவதை மஞ்சுளா மெய்மறந்து ரசித்தபடி இருக்க, தோல்பையில் இருந்த நெக்லஸ் மாயமாய் மறைந்துவிட்டதாம்.

இது பற்றி மஞ்சுளா பொலிசில் புகார் கொடுத்தார். படப்பிடிப்பு தளத்தில் இருந்த நூறுபேர்வரை பொலிசாரால் விசாரிக்கப்பட்டு, இருவர் கைது செய்யப்பட்டனர்.

'நெக்லஸ்' காணாமல் போனதாக கதை விடுகிறார்கள். வருமானவரித் துறையை ஏமாற்ற நாடகம் ஆடுகிறார்கள், என்றும் அரசல் புரசலாக கதை அடிபடுகிறது.

**முகப்பில்**

பிரசாந்த்
படம்: 'கண் எதிரே தோன்றினாள்'

வி னி தா



கார்த்திக்-மீனா
படம்: அரிச்சந்திரா

ர்' படத்தைத்
விரைவில் ஒரு
த் தயாரிப்பு

ார், அடுத்து
று பெயரிடப்
, மொழிகளில்

ரில் எல்லாம்
பில் மு. களஞ்
யுள்ளார். இப்


இணைந்து
தொடர்ந்து
நடிக்கின்ற

**மி னி சி னி**

* இயக்குநர் கே.எஸ். அதியமான் கதாநாயகனாக நடிக்கும் 'தலைமுறை' படத்தில் இவருக்கு ஜோடியாக லட்சுமி என்ற புதுமுகம் அறிமுகமாகிறார். தமிழில் ஏற்கனவே ஒரு லட்சுமி இருப்பதால் இவரது பெயர் மாற்றப்படலாம்.

* சத்யராஜ் நடிக்கும் 'பொண்ணு வீட்டுக்காரன்' படத்தைத் தயாரித்து வரும் கங்காகௌரி புரடக்ஷன்ஸ் நிறுவனம், அடுத்து தயாரிக்கும் படத்தை சுராஜ் இயக்கவுள்ளார். இவர் சரத்குமார் நடித்த 'மூவேந்தர்' படத்தை இயக்கியவர்.

* தமிழில் பிஸியாக நடித்து வரும் சிம்ரான் இந்திப்படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். 'அனாரி நம்பர் வன்' என்ற இப்படத்தில் கதாநாயகனாக கோவிந்தா நடிக்கிறார்.



## வருகிறார் குஷ்மா

குஷ்புமேல் கொண்ட பிரியமோ என்னவோ புதுக் கதாநாயகி ஒருவருக்கு குஷ்மா என்று பெயர் வைத்துள்ளனர்.

'பொம்பளைங்க சமாச்சாரம்' என்ற படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகிறார் குஷ்மா. கதாநாயகனும் புதுமுகம். விஜயராஜ். படத்தின் இயக்கம், தயாரிப்பு போன்றவற்றையும் விஜயராஜ்தான் கவனிக்கிறார்.

நிழல்கள்ரவி, செந்தில், விசித்ரா, ஜோதிமீனா, லூஸ்மோகன், குமரிமுத்து ஆகியோரும் நடிக்கின்றனர்.

## கிடைத்தது வாய்ப்பு

'ஆஹா' படத்தில் கதாநாயகனாக நடித்தவர் ராஜீவ் கிருஷ்ணா. 'ரேவதி' தொலைக்காட்சி தொடரிலும் முக்கிய பாத்திரத்தில் நடித்தவர்.

'ஆஹா' படத்தின் பின்னர் குறிப்பிடத்தக்க பட வாய்ப்பு எதுவும் ராஜீவ் கிருஷ்ணாவுக்கு எட்டவில்லை.

இப்போது கிடைத்திருக்கறது பலாப்பழம் போன்ற வாய்ப்பு. சங்கீதாவுடன் ஜோடியாக நடிக்கப்போகிறார். படத்திற்கு 'கைவிளக்கு' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

மற்றும் ரகுவரன், திலகன், செந்தில், 'விஜயாசிங்' ஆகியோரும் நடிக்கின்றனர். இயக்கம் எம்.என். எத்ராஜ். கன்னடத்தில் இருந்து தமிழுக்கு வரும் இயக்குநர் இவர்.

## "கடவுள் என்னை கைவிட்டுவிட்டார்"

## நடிகை ஹீரா கண்ணீர் பேட்டி

நடிகை ஹீரா தன் காதலர் அஜித்துடன் பிரச்சனைப்பட்ட பின்னர் பத்திரிகையாளர்கள் முன்பாக அழுதுவிட்டார். அழுதழுது அவர் அளித்த பேட்டி.

கே: நீங்களும், அஜித்குமாரும் உயிருக்குயிராக காதலிக்கிறீர்களாமே?

திருப்பதியில் இரகசியமாக திருமணம் செய்துகொண்டதாகவும் கூறப்படுகிறதே?

ஹீரா: நாங்கள் திருப்பதி போனது உண்மைதான். சாமி கும்பிடத்தான் போனோம். திருமணம் எதுவும் நடக்கவில்லை. சாமியிடம் என் ஆசைகளையும், கனவுகளையும் சொல்லி நிறைவேற்றி வைக்கும்படி வேண்டிக் கொண்டேன். அந்தக்கடவுள்கூட கைவிட்டுவிட்டாரே (என்றுபடி அழுகை)

கே: நீங்கள் இருவரும் காதலிப்பது உண்மைதானா?

ஹீரா: உண்மைதான். ஆனால் இப்போது அது முறிந்துவிட்டது. இனி அவருடன் எனக்கு எந்தப் பந்தமும் கிடையாது. காதல் முறிந்தாலும் தொழில் முறை நட்பை நான் விட்டுவிடப் போவதில்லை. அஜித்துடனும் படங்களில் நடிப்பேன்.

கே: உங்கள் காதல் மலர்ந்தது எப்போது?

ஹீரா: 'காதல் கோட்டை' படப்பிடிப்புக்காக நாங்கள் ராஜஸ்தான் போனோம். அங்கு நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அஜித் என்னுடன் பழகிய விதம் எனக்கு மிகவும் பிடித்தது. அங்கிருந்து திரும்பும்போது மனம் ஒத்த காதலர்களாக திரும்பினோம்.

கே: உங்கள் காதலை உங்கள் வீட்டில் தடுத்தார்களா?

ஹீரா: நோ.... எங்கள் குடும்பத்தினர் நாகரிகமானவர்கள். என் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள்.

கே: அஜித்தின் வீட்டில் தடுக்கிறார்களா?

ஹீரா: ப்ளீஸ்... இதற்கு மேல் எதுவும் கேளாதீர்கள்.

## கொஞ்சு கவி சங்கவி

விஜய் குடும்பப் படமான 'நிலாவே வா' படத்தில் சங்கவிக்கும் ஓர் இடம் தந்திருக்கிறார்கள். விஜய்யோடு கொஞ்சும் குமரியாக கவர்ச்சி காட்டுகிறார். பிரதான பாத்திரம் என்று இல்லாவிட்டாலும் விஜய்யோடு கொஞ்சும் வாய்ப்பை தவறவிடுவானேன் என்று தாவிப்பிடித்துக் கொண்டார்.

'நிலாவே வா' படத்தின் பாடல் காட்சிகள் இலண்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் படமாக்கப்படவுள்ளன.

## வெளிநாட்டு ஆசை

தேவயாணி பிறந்ததில் இருந்து வெளிநாடு எதனையும் எட்டிப்பார்த்ததே கிடையாது. சரி, படப்பிடிப்புக்களுக்கு என்றாலும் வெளிநாடு செல்லலாம் என்று பார்த்தார். தமிழ்ப்படம் எதிலும் அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை.

தெலுங்கில் கே.ராகவேந்திரராவ் இயக்கத்தில் 'ஸ்ரீமதிவெள்ளோஸ்தா' என்ற படத்தில் நடிக்கிறார் தேவயாணி. அப்படத்தின் படப்பிடிப்புக்காக சுவிற்ஸர்லாந்துக்கு சொயிங் என்று பறந்து போகிறார்.

## நெப்ஸ்-விக்ஸ்

நெப்போலியனும், விக்னேசும் இணைந்து நடிக்கப்போகும் படம்: 'சாமி கொடுத்த வரம்'. தாயை தெய்வமாக மதிப்பவராக நெப்போலியனும், அண்ணனைத் தெய்வமாக மதிப்பவராக விக்னேசும் நடிக்க உள்ளனர்.

கதாநாயகி யார் தெரியுமா? நெப்போலியனின் நெருங்கிய கூட்டாளி விஜயகுமார். அவரது மகளான இளம் புயல் ப்ரீதா விஜயகுமார்தான் நெப்போலியனுக்கு ஜோடி. பல படங்களில் ப்ரீதா பிஸியாக இருந்தும், குடும்ப நண்பர் என்பதால் நெப்போலியனின் விருப்பத்தை நிறைவேற்ற ஜோடிசேர சம்மதித்தாராம்.

## மீண்டு(ம்) வருமா?

வற்றாப்பளைப்
பொங்கலுக்கு
வள்ளத்தில்:
வன்னி சென்று,
முல்லைத்தீவு
மாமிவீட்டில்
மூன்று நாள் நின்று,
பண்டிக்கருக்கல் தின்டு
வந்த நாட்கள்
வசந்த நாட்கள்!

அந்தியட்டிக்கு
அவ்திபோட
கீரிமலை சென்று
கிரியை செய்து,
கிணறு, கேணி,
கடல் என
மாறி மாறிக்
குளித்துக் கும்மாளம் போட்டு
மகிழ்ந்த நாட்கள்
வசந்த நாட்கள்!

காரைநகர்
கஷோனா பீச்சில்
காதலியுடன்-
காதல் மொழி பேசிக்
கூடிக்குலாவிய நாட்கள்
குதூகல நாட்கள்

சிவராத்திரிக்கு
சிவனைத் தரிசிக்க
திருக்கேதீஸ்வரம்
சென்று
பாலாவியில் நீராடி,
பரமனைப் பணிந்த நாட்கள்
புனித நாட்கள்!

சிறிதர்
திரையரங்கில்
நடுச்சாமம்
பல்கனியிலிருந்து
'பாசமலர்' படம்
பார்த்து சுதந்திரமாய்
அதிகாலை வீடு
வந்த நாட்கள்
சுதந்திர நாட்கள்!

முற்ற வெளியில்
முத்தான தமிழ் விழாக்கள்
பார்த்த நாட்கள்
பரவச நாட்கள்!

விடிய விடிய
காளி கோயிலில்
காத்தான் கூத்தும்:
மயான காண்டமும்
கண்டு களித்திருந்த
காலம்
கற்கண்டுக்காலம்!

இன்று அது
கற்பனைக்
காலம்!
இனி விடிந்தால்
மீண்டும் வருமோ
அந்த
வசந்தகாலம்?

துரைசீலன்-
கரவெட்டி.

## தடம் மாறும் மனிதனுக்கு....

ஆமான தொழி லில்லை
அரைக் காசுக் குழைப்பில்லை
பாமாலை ஏதுக்கடி-சுந்தரி
புனை நாமம் ஏதுக்கடி!

கால் போன போக்காகி
கடை வீதி அளப்போர்க்கு
கால்ச் சட்டை ஏதுக்கடி- சுந்தரி
கழல் தானும் ஏதுக்கடி!

மானத்தின விலை போக்கும்
மர்மங்கள் புரிவோர்க்கு
மாநாமம் ஏதுக்கடி-சுந்தரி
முகமொன்றும் ஏதுக்கடி!

சாய்ந் தாறத் தரையில்லை
சுய சிந்தை தெளிவில்லை
வாய் ஜாலம் ஏதுக்கடி- சுந்தரி
வினை நெஞ்சம் ஏதுக்கடி!

சொல் கேட்கச் சேயில்லை
சுகித் துண்ண மனையில்லை
பல் மட்டும் ஏதுக்கடி- சுந்தரி
பதம் தேடல் ஏதுக்கடி!

மெஞ்ஞானப் போர்வையில்
மிருகமாய் நடப்போர்க்கு
பஞ்சாங்கம் ஏதுக்கடி- சுந்தரி
புலனைந்தும் ஏதுக்கடி!

சாக்காடு போனாலும்
சிதை கூட்ட உறவில்லை
கெக்கட்டம் ஏதுக்கடி-சுந்தரி
குலப் பேறும் ஏதுக்கடி!

வெங் காயத் தான் போலும்
வெறும் கூட்டு வாழ்விற்கு
சிங்காரம் ஏதுக்கடி- சுந்தரி
சில நாளே வாழ்வுமடி!

மாவை- வரோதயன்.

## நினைவில் வலி...

உன்
இளமையின்
ஈரலிப்பில்
வழுக்கி விழுந்து
நொறுங்கிப் போனது
என்
மனசு!

உன்
கண் சிமிட்டலில்
தொலைந்துபோன
என்
இதயத்தை(த்)
தேடித், தேடியே
தேய்ந்து போனது
என்
வாலிபம்!

என்
இதயத்துடிப்பிலும்
உன்
நினைவுகளின்
நர்த்தனங்கள்
நிறைந்திருப்பதால்
உறக்கமின்றித் தவிக்கிறது
என்
விழிகள்!

## வேண்டுகோள்

நிலவினை
முகர்ந்து பார்க்க
துடிக்கும்
மேகத்தினைப் போல
உன்னை
சுமந்து பார்க்க
என் இதயமும்
துடிக்கிறது!

**

அகிலத்துள்ளும்
அந்தரங்கமின்றி
புகுந்து கொள்ளும்
காற்றைப்போல
எனக்குள்ளும்
நீ எப்போது
புகுந்து கொள்வாய்?

**

வண்டுக்கு மலர்
மடிகொடுப்பதைப் போல்,
பனித்துளிக்கு இலைகள்
இடம் கொடுப்பதைப்போல்,
எனக்கும் நீ
உன் இதயத்தில்
கொஞ்சம் இடம் கொடுத்தால் என்ன?

**

வானத்தைப் பிளந்து பார்க்கும்
மின்னலைப் போல்
உன்னைத் திறந்து பார்க்க
எனக்கும் ஆசைதான்!

**

எனவே,
இக்கவிதை கண்ட
முதல் தினமாவது
எனக்கொரு ஒப்புதல் அனுப்பு-
நானும்
என் காதலும் கவிதைகளும்
உயிர் வாழ!

நிப்காஸ் றிஸ்மி- பொத்துவில்.03.

## தேன் கிண்ணம்



உன்
ஞாபக ஈக்களை(த்)
துரத்தித் துரத்தியே
தூர்ந்து போனது
என்
இளமை!

ஸகி...!
உன்னால் முடியுமெனில்
ஒன்று செய்!

உன்
நினைவுகளைப் பிடித்து(க்)
காலொடித்துப் போடு...
நான்
நிம்மதியாய்த் தூங்க...!

காவத்தமுனை ஹாறூன்.

# படுகொலையும் பதிலடியும்!



இரண்டாவது உலகப்பெரும் போரைத் தொடர்ந்து வியட்நாம் நாடு- வடவியட்நாம் தென்வியட்நாம் என்று இரு கூறாகப் பிரிக்கப்பட்டது. வடவியட்நாம் கம்யூனிஸ்ட் நாடாக இருந்தபோது தென்வியட்நாம் அமெரிக்காவின் ஆதிக்கத்திலிருந்தது.

வடவியட்நாம் அதிபர் ஹொசிமின் தென்வியட்நாமை வடவியட்நாமுடன் இணைத்து ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவர அரும்பாடுபட்டார். வடவியட்நாமிய கெரில்லாக்களையும் வியட்கொங் விடுதலைப் படையினரையும் சேர்த்து மொத்தம் 36 ஆயிரம் பேரை தென் வியட்நாமுக்குள் அனுப்பிவைத்தார். தென்வியட்நாமுள் இருந்த அமெரிக்கத் துருப்புக்களை விரட்டியடிக்கவே இத்தகைய நடவடிக்கையை வடவியட்நாம் மேற்கொண்டது.



ஹொசிமின்

வடவியட்நாமியர்கள் அல்லது சிவில் உடையில் திரிந்த வியட்கொங் வீரர்கள் என்று சந்தேகப்படுவோரை அமெரிக்கத் துருப்புகள் பிடித்துச் சித்திரவதை செய்து கொன்று விடுவார்கள்.

இவ்வாறு ஆயிரக்கணக்கான தென்வியட்நாமிய அப்பாவிப் பொதுமக்களே கொல்லப்பட்டனர். ஆனாலும் வியட்நாம் மக்கள் கலங்கவில்லை.

வியட்நாமியருடைய வருடக் கணக்கில் 12 வருடங்கள் ஒரு சுற்றாகும். ஒவ்வொரு வருடத்துக்கும் ஒரு மிருகம் அல்லது பறவையின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. 1968ம் ஆண்டு அவர்களுடைய வருடம் குரங்கு வருடமாகும். குரங்கு வருடம் எப்போதும் துரதிஷ்டமான ஆண்டாகவே கருதப்படுகிறது.

புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்காக ஒரு வாரம் போர் நிறுத்தம் இருதரப்பினராலும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் தலைநகரான சைகோன் உட்பட சகல நாடு- நகர்ப்புறங்களிலும் மக்கள் எதுவித பயமுமின்றிக் கொண்டாடினார்கள்.

சைகோன் நகருக்கு வடகிழக்கே 335 மைல் தொலைவில் மை லை என்றொரு கிராமம். 1968 மார்ச்மாத மத்தியில் அக்கிராம மக்களும் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் திளைத்திருந்தனர்.

அமெரிக்கப் படையைச் சேர்ந்த 60 முதல் 70 துருப்புக்கள் மை லை கிராமத்துள் புகுந்தனர்.

அவர்களுடைய கண்ணில் பட்ட சகல மனிதர்களையும் கால்நடைகள், கோழி முதலான பறவைகள் அனைத்தையும் தங்கள் இயந்திரத் துப்பாக்கிகளுக்கு விருந்தாக்கினர். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று எதுவித வித்தியாசமுமின்றி 100 பேருக்கும் மேல் கொன்று குவிக்கப்பட்டனர்.

இறந்து வீழ்ந்தவர்களின் உடல்களின் கீழ் புகுந்துகொண்டு- இறந்தவர்கள் போல் நடித்த 25 பேர் மட்டும்தான்- 20 நிமிடங்கள் தொடர்ந்து நடந்த அந்த அக்கிரமத்தை வெளியுலகுக்குச் சொல்வதற்காகத் தப்பிப் பிழைத்தனர்.

இச்சம்பவம் நடைபெற்றுச் சில நாட்களில் உலகனைத்துமுள்ள தொலைக்காட்சிகளில் அக்கொடூர சம்பவத்தின் பெறுபேறுகள் காட்டப்பட்டன. அமெரிக்காவின் முகத்தில் மாபெரும் கறையினை அச்சம்பவம் பூசிவிட்டது.

அக்கிராமத்துள் புகுந்து மனித வேட்டையாடியவர்களுக்கு எந்த இராணுவ அதிகாரியும் அந்த அட்டூழியத்துக்கு கட்டளையிடவில்லை. சதா துப்பாக்கியும் கையுமாகத் திரிந்த அந்தத் துருப்புக்கள், மன நோயாளிகளாக மாறியமையினால் ஏற்பட்ட தாக்கமே இவ்வெறிச் செயலுக்குக் காரணம் என்று சாட்டுக் கூறப்பட்டபோதிலும் உலகமே அமெரிக்காவைக் கண்டித்தது.

வியட்நாம் கெரில்லாக்கள் அமெரிக்கத் துருப்புக்களுக்கு பதிலடி கொடுத்தனர். வியட்நாம் காடுகளுக்குள் வியட்நாம் போராளிகளிடம் இருந்து தப்பிச்செல்ல வான்படை உதவியை நம்பி கூக்குரலிடும் அமெரிக்கப் படையினரையே படத்தில் காண்கிறீர்கள்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(02.08.1998 தொடக்கம் 08.08.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- துன்பம் நீங்கும், பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. | 3 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பகல் | 11 | மணி |
| புதன்- உறவினர் உதவி, முன்னேற்றம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, புதிய முயற்சி. | காலை | 8 | மணி |
| சனி- துன்பம் நீங்கும், இனசன மகிழ்ச்சி. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்- சனி, அதிஷ்ட இலக்கம்-9

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பண வரவு. | காலை | 7 | மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, குடும்ப சுகம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, உறவினர் உதவி. | காலை | 7 | மணி |
| புதன்- காரியானு கூலம், தெய்வ வழிபாடு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- மனக் கலக்கம், அந்நியர் சகவாசம். | காலை | 9 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு அதிகம். | பி.ப. | 1 | மணி |
| சனி- தொழில் மந்தம், மனச் சோர்வு. | காலை | 8 | மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | காலை | 8 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, கௌரவம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த எண்ணம், பண வரவு. | காலை | 7 | மணி |
| புதன்- கடன் தொல்லை, அந்நியர் உதவி. | பகல் | 11 | மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், மனக் கவலை. | மு.ப. | 9 | மணி |
| வெள்ளி- வீண் குறைகேட்டல், மனக்கவலை. | பிப | 1 | மணி |
| சனி- பொருள் வரவு, தேகசுக நன்மை. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-3

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நட்பு, பண வரவு. | காலை | 7 | மணி |
| திங்கள்- அந்நியர் பகை, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, காரிய சித்தி. | பகல் | 12 | மணி |
| புதன்- வெளியிடப் பயணம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- துயரதிகம், காரியக்கேடு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தெய்வ தரிசனம், மன அமைதி. | பி.ப. | 3 | மணி |
| சனி- பொருள் வரவு காரியானுகூலம். | காலை | 8 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, உறவினர் வருகை. | பகல் | 11 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப | 2 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, மத்திம பலன். | பகல் | 12 | மணி |
| புதன்- துன்பம் நீங்கும், மன நிம்மதி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், கௌரவக் குறைவு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- செய்தொழில் விருத்தி, புதிய அனுபவம். | பி.ப. | 2 | மணி |
| சனி- புதிய முயற்சி, பணத் தட்டுப்பாடு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-8

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன், புதன். |
| சிம்மம் | - இராகு. |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - வியாழன். |
| மேடம் | - சனி. |
| மிதுனம் | - வெள்ளி, செவ்வாய். |

சந்திரன்- விருட்சிகம், தனு, மகரம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பண வரவு. | காலை | 7 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மனக் கசப்பு. | பி.ப. | 3 | மணி |
| புதன்- உறவினர் பகை, மனச் சஞ்சலம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- பொருள் வரவு, இனசன நன்மை. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |
| சனி- மனப் பயம், கௌரவக் கேடு. | மு.ப. | 9 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவு அதிகம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- கடன் தொல்லை, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| புதன்- துன்பம் நீங்கும், கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு அதிகம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், பண வரவு. | பகல் | 11 | மணி |
| சனி- காரியானுகூலம், மன அமைதி. | பி.ப | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக் கலக்கம். | காலை | 7 | மணி |
| திங்கள்- உயர்ந்த எண்ணம், தேகசுக நன்மை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- அந்நியர் பகை, மனக் கவலை. | காலை | 8 | மணி |
| புதன்- உறவினர் உதவி, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- பொருள் வரவு, காரியசித்தி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| சனி- பெரியோர் உதவி, மன அமைதி. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | காலை | 7 | மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| புதன்- பொருள் வரவு, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, அதிகாரப் பேறு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- துன்பம் நீங்கும், இனசன மகிழ்ச்சி. | காலை | 8 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் மனஸ்தாபம், தொழில் மந்தம். | காலை | 8 | மணி |
| திங்கள்- பொருள் வரவு, மன நிம்மதி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- புதிய முயற்சி, முன்னேற்றம். | காலை | 7 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், கௌரவம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தேகசுகம் பாதிப்பு, மனக்கவலை. | பி.ப. | 1 | மணி |
| சனி- வெளியிடப் பயணம், பண வரவு. | பி.ப | 3 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, தொழில் முன்னேற்றம். | காலை | 8 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பகல் | 11 | மணி |
| புதன்- புதிய முயற்சி, செலவு அதிகம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, பொருள் செலவு. | காலை | 9 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| சனி- துன்பம் நீங்கும், மன நிம்மதி. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், பொருள் வரவு. | காலை | 7 | மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | மு.ப. | 9 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, செலவு அதிகம். | காலை | 7 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், உறவினர் உதவி. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- பொருள்வரவு, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| சனி- புதிய முயற்சி, பண வரவு. | காலை | 9 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-1

www.padippakam.com

# கட்டை விரல் இரகசியம்



கட்டைவிரல் படத்தில் 'இருப்பது போல் கோழிமுட்டை முனையைப் போல் அகண்டு, தலைப்பகுதி இருந்தால் இவர் தலையில் மிளகாய் அரைக்கலாம். எள் என்பதற்கு முன் எண்ணெயாக இருப்பார். அன்பும், பாசமும் இவரிடமிருந்து தான் சப்ளை செய்வார். ஒரு சங்கடம், அந்த சப்ளையை எல்லோருக்கும் தாராளமாக வழங்கி விடுவார். விளைவு பட்ஜெட் இடிக்கும். நிறைய சம்பாதிப்பதால் சமாளித்துவிடலாம்.



கட்டைவிரல் முனை உருண்டையாக இல்லாமல் சதுரமாக இருந்தால் மிகவும் உஷாரான ஆள். மிகவும் கணக்குப் பார்க்கும் பேர்வழி. "இருட்டாகிவிட்டதே பஸ்ஸும் இல்லை!" என நீங்கள் முனகும்போதே, "ஹி.. ஹி... ஒட்டோ வேண்டாம். நானே பொடி நடையாய் உன்னைக் கொண்டு விடுகிறேன்!" என்பார். ஒரேயடியாகச் சிக்கனம் பார்க்கும் இவரை, நீங்கள் இவரது நடத்தைக்காக நம்பலாம்.



கட்டைவிரல்முனை, கூர்மையானதாக இருக்கிறதா? உஷார். உங்கள் மேக்கப்பைக் கொஞ்சம் குறையுங்கள். மடத்திலே சேர வேண்டிய ஆளைத் தவறிக் காதலித்து விட்டீர்கள். 'வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்' என ஆரம்பித்துவிடுவார். உங்களையும் கோவிலுக்கு அழைப்பார். 'மிகவும் ப்க்தியானவர். வெரிகுட், நல்லவர்' என்று முடிவெடுக்காதீர்கள். காதலில் பிரச்சனை என்று வந்தால், "என் கண்ணே இதுவே விதி என்பது" எனக்கூறி விட்டுப் போய் விடுவார். கவனம். விதியின் மேல் பழிபோடுவதில் வல்லவர். போர்க் குணம் குறைவு.

# கோடை கால யோசனைகள்

கோடைகாலத்தில் வீட்டை விட்டு வெளியே வர முடிவதில்லை. வெயிலில் நடந்தாலும் வீட்டில் இருந்தாலும் வியர்த்து வடியும். பின்பு அந்தப் பகுதியில் சொறி ஏற்படும். இது பிரிக் லீகீட், கீட்ராஷ் போன்ற பெயர்களில் அழைக்கப்படும்.



இந்நோய், கோடை காலத்தில் பலரைத் தாக்குகிறது. வியர்வை மயிர்க்கால்களில் கெட்டி நிற்பதே இந்தப் பாதிப்புக்குக் காரணம். தளதளவென்ற உடைகளை உடுத்துவதன் மூலம் ஓரளவு இதனைக் கட்டுப் படுத்தலாம். பருத்தியிலான உடைகள் மிக நல்லது. நைலோன், பொலியெஸ்டர் உடைகளை கோடை காலத்தில் தவிர்த்திடுங்கள். இறுக்கமான உடைகளையும் அணிய வேண்டாம்.

உடலை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள். வீரியம் குறைந்த 'அன்டி பக்டீரியல்' சோப்பை உபயோகிப்பது நல்லது. குளிக்கும் நீரில் 'பேக்கிங் பவுடர்' கலந்து குளிப்பது உடலுக்கு நன்மை தரும். குளித்து முடிந்ததும் உடல் முழுவதும் பவுடர் பூசுங்கள். வியர்வையின் தொல்லையைக் குறைக்க இவை சிறந்த வழிகள்.

கோடைகாலத்தில் கண்களிலும் சில பிரச்சனைகள் தோன்றக்கூடும். குளிர்ந்த நீரில் பஞ்சைத் தோய்த்து, அதை கண்களின் மேல் வைத்திருப்பது கண்களுக்குக் குளிர்ச்சி தரும்.

# கறைபடாத கை

கைகளைப் பொலிவோடு வைத்திருப்பது எப்படி?

- கைகளைச் சுத்தம் செய்யும்போது கைகளில் அணிந்திருக்கும் வளையல், மோதிரங்களைக் கழற்றிவிட்டுக் கைகளைக் கழுவிச் சுத்தம் செய்யுங்கள்.
- 'கவரிங்' நகைகளை அணிவதால் கைகளில் நிறமாற்றம் ஏற்பட்டால் அந்த இடத்தில் எலுமிச்சம் பழத்தை வெட்டித் தேய்த்து சிறிது நேரம் கழித்துக் கழுவுங்கள்.
- துணி துவைப்பதற்காக கைகளை அதிக நேரம் தண்ணீரில் வைத்திருப்பதால், கைகளில் இருக்கும் எண்ணெய்த்தன்மை குறைந்து கைகளின் இயற்கையான நிறம் பாதிக்கப்படும். அதிகமான அளவு துணிகள் துவைக்கவேண்டி இருந்தால் கைகளில் கையுறைகளை மாட்டிக்கொள்ளுங்கள்.



- தோட்டவேலை செய்யும்போதும கையுறைகள் அணிய வேண்டும். அணிந்தால் நகங்களில் அழுக்கு ஏறாது. கைகளின் மிருதுத்தன்மையும் பாதிக்கப்படாது.
- குளிர் காலத்தில் கையில் குளிரும், மரத்துப் போனது போன்ற உணர்வும் ஏற்பட்டால் கைகளை லேசான சுடுநீரில் நனையும்படி வைத்திருங்கள்.

# கண்ணீரில் கரைந்த இரவுகள் 46

புவனா

இளவரசர் ஆண்ட்ரூவை விட்டுப் பிரிந்த சாரா உல்லாசமாக வாழ்க்கை நடத்தினார்.

வாழ்க்கையை அணு அணுவாக இரசித்து அனுபவிக்க வேண்டும் என்பதே சாராவின் கொள்கை.

எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல் உல்லாசத்தில் திளைக்க ஆசைப்பட்டார்.

சாராவின் நிதி ஆலோசகராக இருந்தவர் ஜோன் பிரைன். நிதிக்கு மட்டுமல்லாமல் வேறு விஷயங்களுக்கும் ஆலோசகராக மாறினார் ஜோன் பிரைன்.

சாராவுக்கு பிரைனின் கட்டான தேகமும், புத்திக்கூர்மையும், ஆளுமையும் பிடித்திருந்தது.

பல ஆண் நண்பர்களுடன் ஆழமான நட்பு வைத்திருந்த சாராவுக்கு ஜோன் பிரைனுடனும் ஆழம் காணு ம் ஆவல் ஏற்பட்டது.

சாராவுக்கு இரு புதல்விகள் இருந்தனர். இளவரசர் ஆண்ட்ரூவுடன் சில காலமும், சாராவுடன் சில காலமுமாக அவர்கள் இருந்தனர்.

தன் புத்திரிகளை விடுமுறைக்கு பிரான்ஸ் நாட்டின் தென்பகுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்றார் சாரா.

பயணத்தின்போது தனது நிதி ஆலோசகரையும் கூடவே அழைத்துச் சென்றார்.



## படப்பிடிப்பு

புத்திரிகளை அப்பகுதிகளைச் சுற்றிப்பார்க்க அனுமதித்துவிட்டு நீச்சல் குளத்தில் பிரைனுடன ஒன்றாக நீச்சலடித்தார் சாரா. நீச்சல் குளத்திற்குள் வைத்து இருவரும் கட்டியணைத்து முத்தமிட்டுக் கொண்டனர்.

நீரின் குளிர்ச்சியை முத்தத்தின் சூடு போக்கியது. பிரைன் சாராவை தன் கைகளில் ஒரு மீனைப்போல ஏந்தி நீரில் தள்ளி விளையாட்டுக் காட்டினார்.

இளவரசி சாரா இன்னொரு ஆடவனுடன் பகிரங்கத்தில் கூத்தடிக்கிறார். இது எவ்வளவு பெரிய சமாச்சாரம். அந்த விடுதியில் இருந்த ஒருவருக்கு அந்த தகவலின் பெறுமதி புரிந்தது.

தன் கமராவை எடுத்துக் கொண்டார். தூர நோக்கி பொருத்தப்பட்ட அந்த கமராவால் தன் அறையின் ஜன்னலில் இருநதே சாராவின் லீலைகளை புகைப்படம் எடுத்துத் தள்ளினார்.



அவரது கெட்ட நேரம் அவர் புகைப்படம் எடுக்கத் தொடங்கியபோது அவர்கள் வேடிக்கை விளையாட்டுக்களில் களைத்துப்போய் இருந்தனர்.

சாரா இப்போது நீச்சல் குளமருகே மல்லாந்து படுத்துக் கொண்டார்.

உடலின் மேல்பாகத்தில் சாரா ஆடை எதுவும் அணிந்திருக்கவில்லை. தூரநோக்கி கமராவால் பார்த்துக் கொண்டிருந்தவருக்கே உடம்பெல்லாம் தகித்தது. அப்படியொரு காட்சி.

சாரா மல்லாந்து தரையில் படுத்து ஓய்வெடுக்க, பிரைன் அருகில் மண்டியிட்டு அமர்ந்து கொணடார்.

மண்டியிட்டு அமர்ந்தவர் சாராவின் உடம்பு முழுக்க நீவிவிட்டார். கைவிரல்களை சொடக்கு எடுத்தார். சாராவின் கால்களை பிடித்துவிட்டு கால் விரல்களிலும் சொடக்கு எடுத்தார்.

சொடக்கு எடுத்தபடியே சாராவின் கால பெருவிரலை தன் வாயினில் வைத்துக்கொண்டார். சாரா கண்களை மூடியபடி ஏதோ பிதற்றிக் கொண்டிருந்தார்.

இக் காட்சி மிகக் கச்சிதமாக புகைப்படம் எடுக்கப்பட்டது.

# இரண்டாம் பகுதி உரையாடல்

இரண்டு நாட்களுக்குள் அந்த புகைப்படம் பிரபல செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பெருந் தொகைக்கு விற்பனை செய்யப்பட்டது.

அதே சூட்டோடு சூடாக உலகம் எங்கும் உள்ள பிரபல பத்திரிகைகளில் புகைப்படம் பிரசுரமாகி ஒரு கலக்குக் கலக்கியது.

அரைநிர்வாணமாக சாரா தரையில் சாயந்திருக்க, அவரது கால் பெருவிரலை பிரைன் தன் வாயினில் வைத்திருககும் அப்புகைப்படம் பெரும சாச்சைகளை கிளப்பியது.

அரச குடும்பம் அவமானத்தால் குறுகிப் போனது. மகாராணியார் தன் அறையைவிட்டு வெளியே வராமல் இரண்டு மூன்று நாட்கள் அதற்குள்ளாகவே அடைந்து கிடந்தார்.

பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கண்டனம் தெரிவித்தனர்.

'சாராவின் 'சீமாட்டி' பட்டத்தைப் பறிக்க வேண்டும்' என்று கோரிக்கைகள் எழுந்தன.

சாரா மட்டும் இந்தச் சர்ச்சைகளால் சற்றும் அசரவில்லை. தன் புகைப்படம் வெளியானதையிட்டும் சஞ்சலப்படவில்லை.

"கண்டனம் எழுப்பும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் கண்ணியமானவர்களா என்ன? என்னிடமே வழிந்த ஆசாமிகள் இருக்கிறார்கள்!" என்று கேலி செய்தார் சாரா.

## இன்னொரு பகுதி

சாராவின் லீலைகள் அம்பலமான புகைப்படத்தால் குறுகிப்போயிருந்த அரச குடும்பத்தினருக்கு இன்னொரு அதிர்ச்சியும் காத்திருந்தது.

அந்த அதிர்ச்சியைக் கொடுத்தது 'சண்' பத்திரிகை.

டயானாவும் அவரது நண்பரான ஜேம்ஸ் கில்பியும் தொலைபேசியில் உரையாடியதை ஒட்டுக்கேட்டு 1992 ஆகஸ்டில் 'சண்' பத்திரிகை வெளியிட்டிருந்தது. அந்த உரையாடல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

அத்தோடு முடிந்தது என்றுதான் டயானாகூட நினைத்திருந்தார்.

ஆனால் முதல் உரையாடல் வெளியாகி ஐந்து மாதங்களின் பின்னர், அந்த உரையாடலின் 'இரண்டாவது பகுதி' என்று டயானா-கில்பி உரையாடலை வெளியிட்டது 'சண்'.

முதல் உரையாடலில் ஆபாசமான வார்த்தைகளையும் கலந்து வெளியிட அரச குடும்பத்தினா சிலரே தூண்டுகோலாக இருந்தனர்.

டயானாவுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தி அவரை அவமானத்தால் சுருண்டுபோகச் செய்யவே அவ்வாறு செய்திருந்தனர்.

ஆனால் அவர்களுக்கே தெரியாமல், இந்த இரண்டாம் பகுதியை சண் வெளியிட்டு விட்டது.

சாராவின் அதிரடிப் புகைப்படத்தால் ஆடிப்போயிருந்த நேரத்தில், டயானா-கில்பி உரையாடல் வெளியானது அடிமேல் அடியாகிவிட்டது.

டயானாவுக்கு எதிராக அரச குடும்பம் தூண்டிவிட்டது-அதே அரசகுடும்பத்துக்கும் எதிரானதாக மாறிநின்றது.

"நல்ல குடும்பம் போங்கள்!" என்று பிரபுக்கள் கூட்டம்கூட கேலி செய்யத் தொடங்கி விட்டது.

பிரிட்டிஷ் அரச குடும்பம் என்றாலே, காதல் லீலைகளுக்கு குறைவில்லை என்ற அபிப்பிராயம் மேலோங்கியது.

அதை எண்ணித்தான் மகாராணி தனிமையில் புழுங்கினார். கலங்கினார்.

## உரையாடல்

முன்னர் வெளியான உரையாடலைப் போலவே இரண்டாம் பகுதியும் இடைச் செருகல்களுடன் வெளியாகி இருந்தது.

டயானாவும், கில்பியும் காமம் மேலிட உரையாடுவது போலவே இரண்டாம் பகுதியும் காணப்பட்டது.

'டார்லிங்' என்ற வார்த்தையை மட்டும் 53 தடவைகள் டயானா உபயோகித்துள்ளார்.

ஜேம்ஸ் கில்பி டயானாவிடம் 'தூண்டிலில் பட்ட இரையாகிவிட்டாயே!' என்ற சொற்தொடரை 14 தடவைகள் உபயோகப்படுத்தியுள்ளார்.

"டார்லிங் நான் கர்ப்பம் தரித்திருக்கிறேனோ என்று பயமாக இருக்கிறது, நான் உங்களை சந்தித்து மனம் விட்டுப் பேச வேண்டும்," என்றும் டயானா கூறியிருக்கிறார்.



இந்த உரையாடல் 'ஸ்குவிட்ஜி கேற்' என்று அழைக்கப்பட்டது. எங்கும் இந்த உரையாடல் பற்றிய கதைகளும், வாதப்பிரதிவாதங்களும் எழுந்தன.

'டயானாமீது பழிபோட சதி செய்கிறார்கள். டயானாவை கெட்ட பெண்ணாகச் சித்தரிக்கப் பார்க்கிறார்கள்!' என்று டயானாவின் அனுதாபிகள் நம்பமறுத்தனர்.

இரண்டாம் பகுதி உரையாடல் வெளியாகிய சமயத்தில் டயானா இலண்டனில் இருக்கவில்லை. நேபாளத்திற்குச் சென்றிருந்தார்.

நேபாளத்தில் இருந்த டயானாவுக்கு அவரது சிநேகிதிகள் தகவல் தந்தனர்.

'இப்படியே பகுதிபகுதியாக வெளியிட்டுக் கொண்டே இருக்கப் போகிறார்களா?' என்று கேட்டாராம் டயானா.

டயானாவின் நேபாள விஜயம் தொடர்பாகவும் கிசுகிசுக்கள் வெளியாகி பரபரப்பு ஏற்படுத்தின.

(அடுத்த வாரமும் வரும்)


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை ED

பெயர்:............................

முகவரி:............................

............................

தொழில்:............................

கையொப்பம்:............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 08-08-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## காத்தான்குடி வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

ஆர். சவ்மியா,
றசீட் லேன், அமானுல்லா வீதி,
காத்தான்குடி-06.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்

இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 12

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com





எம்முயி ராசைகளும்– எங்கள்
இசைகளும் செயல்களும் துணிவுகளும்,
செம்மையுற் றிடஅருள்வாய்–நின்றன்
சேவடி அடைக்கலம் புகுந்துவிட்டோம்!
–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# புறாவும் வேடனும்



ஒரு காட்டில் வேடன் ஒருவன் விரித்திருந்த வலை ஒன்றில் புறா ஒன்று சிக்கிக்கொண்டது. 'வேடன் வருவதற்கு முன் வலையில் இருந்து விடுபட்டுச் சென்று விட வேண்டும்,' என்று எண்ணி சிறகுகளைப் படபடவென்று அடிக்க, அது வலையில் வசமாக மாட்டிக்கொண்டது.

புறாவால் இப்போது சிறகை அசைக்கக்கூட முடியாமல் போய்விட்டது. வலை விரித்திருந்த வேடன் சிறிது நேரத்தில் அவ்விடத்திற்கு வந்தான். தான் விரித்த வலையில் புறா ஒன்று சிக்கியிருப்பதைக் கண்டு மகிழ்ந்தான்.

அருகே வந்து புறாவை வலையில் இருந்து விடுவித்து, அதைக் கையில் இறுக்கிப் பிடித்திருந்தான். அப்போது புறா, வேடனைப் பார்த்து:

"தயவு செய்து என்னை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடு, என்னை நீ விட்டுவிட்டால் நீ செய்த உதவியை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்!" என்று கெஞ்சியது.

"என் மனதில் உன் இறைச்சியின் சுவைதான் நிறைந்திருக்கிறது. நான் உன்னை விட்டு விட்டால் நீ என்னை மறக்கமாட்டேன் என்று சொன்னாய், அதனால் எனக்கு என்ன இலாபம்? எனவே பேசாமல் இரு!" என்று அதட்டினான் வேடன்.

உடனே புறா, "அப்படியானால் உனக்கு ஏதாவது இலாபம் இருந்தால் என்னை விட்டுவிடுவாயா?" என்று கேட்டது.

"ஏதாவது இலாபம் கிடைக்குமானால் உன்னை விடுவிப்பது பற்றி யோசனை செய்யலாம். என்ன இலாபம் என்று முதலில் சொல்!" என்று கேட்டான் வேடன்.

"இப்போது உனக்கு நான் ஒரு புறா மட்டும் தானே கிடைததிருக்கிறேன்? நீ மட்டும் என்னை விட்டுவிட்டால், ஒரு புறாக் கூட்டத்தையே உன் வலையில் விழச்செய்வேன்!" என்று கூறியது புறா.

"எப்படி?" என்றான் வேடன்.

வேடனும் தன்னை விடுவிக்கப் போகிறான் என்ற மகிழ்ச்சியில்,

"நீ என்னை விடுவித்தால் நான் பறந்து சென்று என்னுடைய நண்பர்களிடம் நயமாகப் பேசி, இங்கு அழைத்து வந்து உன் வலையில் விழ வைப்பேன்," என்று சொன்னது புறா.

"புறாவே! நீ சொல்லும் உபாயம் எனக்கு இலாபமானதுதான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனாலும் நான் உன்னை விடவேமாட்டேன்;" என்றான் வேடன்.

"ஏன் என்னை விடுவித்தால் உனக்கு லாபம்தானே?" என்று கேட்டது புறா.

"உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, நீ உன் நண்பர்களைக் காட்டிக் கொடுக்க நினைக்கிறாய். உனக்கு உயிர் வாழ்வதற்கு அருகதை இல்லை. எனவே நான் உன்னை விடமாட்டேன்!" என்று கூறி புறாவைத் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றான் வேடன்.

# அதிசயம் – ஆனால் உண்மை!



**திமிங்கிலத்தால் தப்பியவர்கள்:**
நியூஸிலாந்து குக் கடலிடுக்கில் மூழ்கிய படகில் இருந்து உயிர் தப்பிக் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த இரு பெண்கள், அங்கு இறந்த திமிங்கிலத்தின் உடல் மிதக்கக் கண்டனர். அந்தத் திமிங்கிலத்தின் உடலில் ஈட்டியைப் பாய்ச்சி, கயிற்றைக்கட்டி அதன் உதவியால் 80 மைல் பயணம் செய்து பத்திரமாகக் கரையேறினர்.

**துறவியர் மலை:**
துருக்கி நாட்டில் கெய்சேரி என்ற இடத்தின் அருகே மலைகளைக் குடைந்து 60 தேவாலயங்கள், துறவியர் மடங்கள், பிரார்த்தனைக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவற்றை வேற்று நாட்டில் இருந்து வந்த கிறிஸ்தவத் துறவியர் 300 ஆண்டுகள் பயன்படுத்தினர்.





**லஸ்ஸே மாளிகை:**
ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அர்மன் த மதேலன் 1676ம் ஆண்டு தனது மனைவிக்கு திருமணப் பரிசாகக் கொடுக்க இந்த மாளிகையை 35 நாட்களில் கட்டுவித்தார்.



**புல்லாங்குழல்:**
நியூஸிலாந்து நாட்டு மாஓரி இனத்தவரின் இசைக் கருவியான புல்லாங்குழல், 'அல்பட்ரோஸ்' என்ற பறவையின் இறக்கை எலும்பினால் செய்யப்படுகிறது.

# வாரம் ஒரு நாடு

## மாஸிடோனியா

தலைநகர் - ஸ்கோப்ஜே
பரப்பு - 25,713 சதுர கிலோமீட்டர்
மக்கள் தொகை - 22 இலட்சம்
மொழி - மாஸிடோனியன்
சமயம் - கிறிஸ்தவம், இஸ்லாம்
எழுத்தறிவு - 90%
நாணயம் - தேனார்
தனிநபர் வருமானம் - 821 டொலர்

**அமைவிடம்:**
முன்னாள் யூகோஸ்லாவியா குடியரசுகளில் ஒன்று. பல்கேரியா, கிரீஸ், அல்பேனியா மற்றும் யூகோஸ்லாவியா இதன் எல்லை நாடுகள்.

**வரலாறு:**
1991ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8ம் திகதி சுதந்திரத்தைப் பிரகடனப் படுத்திய போதும் அமெரிக்காவும், ஐரோப்பிய



சமுதாய நாடுகளும் அதற்கு அங்கீகாரமளிக்கவில்லை. எனினும் 1993ல் ஐ.நா.சபையில் 181வது உறுப்பினரானது.

**பொருளாதாரம்:**
கோதுமை, சோளம், பருத்தி போன்றவை விவசாய விளை பொருட்கள். இரும்புத்தாது, உருக்கு, செம்பு, சீமெந்து, தொழிற்சாலைகள் உருவாகி வருகின்றன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08.08.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 256**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 254

**பரிசுக்குரியவர்:**
ஏ.எல். அகமட் றஸ்மி,
ஸ்ரீ கோணேஸ்வர இந்துக் கல்லூரி, திருகோணமலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| வெ. கலைச்செல்வி, நு/மெதடிஸ்த தமிழ் மகா வித்., கந்தப்பளை. | பீ.எம். பாத்திமா நுஸ்கியா, ம/ஃமூத் மகளிர் கல்லூரி, சாய்ந்தமருது-03. |
| எஸ். யுகராசா, சுமித்திரா ராம மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழு.-13. | த. பாபுஜி, தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |
| ஃபாத்திமா றய்ஹானா, பாடசாலை ஒழுங்கை, மக்கொன. | ஜே. அசோக், மட்/ களுதாவளை ம.வி., களுவாஞ்சிக்குடி. |
| மா. கீர்த்தனா, மத்திய மகா வித்தியாலயம், பண்டாரவளை. | அஷ்ரப் இம்ரான், பது/அல்-இர்ஷாத் மகா வித்தியாலயம், ஹாலி-எல. |
| எம். பிரவீணா, அடம்பன் மகா வித்தியாலயம், மடு. | செல்வி சிவபாலன் ஜீவிதா, இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. |

# ஒருவரிச் செய்திகள்

- விண்வெளிக்கு முதன் முதலில் சென்ற பெண் நாயின் பெயர்-லைகா.
- உலகிலேயே அதிக இரத்ததானம் செய்பவர்கள்-சீனர்கள்.
- முதன்முதலில் அதிஷ்டலாபச் சீட்டை அறிமுகப்படுத்தியவர்கள்-ரோமானியர்கள்.
- உலகிலேயே உள்ள 44 ஏழை நாடுகளில் 33 நாடுகள் ஆபிரிக்காவில் உள்ளன.
- சராசரி மனிதனுடைய இதயம் 340 கிராம் நிறை உடையது.
- உலகிலேயே மிகவும் குறைவாக வரி விதிக்கும் நாடு-ஜப்பான்.
- எஸ்கிமோக்கள் குடியிருக்கும் வீட்டின் பெயர்-லீக்லூ.
- உலகிலேயே எந்தவொரு நாட்டுடனும் போரிடாத நாடு-சுவிற்ஸர்லாந்து.
- உலகிலேயே அதிகமான வருமான வரி செலுத்துபவர்கள்-நோர்வே நாட்டு மக்கள்.

# பிரசித்தி பெற்ற துறைமுகங்கள்

உலகிலேயே பிரசித்திபெற்ற துறைமுகங்களும் அவை அமைந்துள்ள இடங்களும் வருமாறு:

| துறைமுகம் | நாடு |
|---|---|
| * ஹம்போர்க் | ஜேர்மனி |
| * மஸ்கட் | ஓமான் |
| * ஒடிஸா | மோல்டோவா |
| * பெனாங் | மலேசியா |
| * பெர்த் | அவுஸ்திரேலியா |
| * சான் ஃபிரான்ஸிஸ்கோ | அமெரிக்கா |
| * டெல் அவிவ் | இஸ்ரேல் |
| * வான்கூவர் | கனடா |
| * ரோட்டர்டாம் | நெதர்லாந்து |
| * டோர்பன் | தென்னாபிரிக்கா |

# மழை வீழ்ச்சியின் அளவு

உலகில் பலபாகங்களிலும் மழை பெய்கிறது. ஒரு வருடத்தில் ஒவ்வொரு பகுதிகளிலும் பெய்யும் மழை வீழ்ச்சியின் அளவுகள் பின்வருமாறு:

| இடம் | வருடாந்தர மழைவீழ்ச்சி(செ.மீ) |
|---|---|
| • கடல் பகுதிகள் | 1,168.4 |
| • ஆசியா | 1,143.0 |
| • ஆபிரிக்கா | 1,027.7 |
| • தென் அமெரிக்கா | 899.2 |
| • வட அமெரிக்கா | 665.7 |
| • ஐரோப்பா | 464.3 |
| • அவுஸ்திரேலியா | 454.7 |

எமது உடம்பில் எத்தனை எலும்புகள் இருக்கின்றன என்று தெரியுமா உங்களுக்கு?

எமது உடம்பில் மொத்தம் 206 எலும்புகள் உள்ளன. நாம் குழந்தைகளாக இருக்கும்போது எமது உடம்பில் மொத்தம் 330 எலும்புகள் இருந்திருக்கும். நாம் வளர வளர சில எலும்புகள் ஒன்றோடொன்று இணைந்து எலும்புகளின் எண்ணிக்கை 206 ஆகக் குறைந்துவிடும்.

எமது உடம்பின் நிறையில் இருபது சதவீதமான நிறை எலும்புகளின் நிறை ஆகும்.

கடலில் உள்ள மீன்களில் பெரிய பெரிய சுறாமீன்களுக்கு உடம்பில் ஒரு எலும்பு

# தெரியுமா உங்களுக்கு?



கூடக் கிடையாது. இவற்றின் உடம்பில் எலும்புகள் போலக் காணப்படுவது 'கார்டிலேஜ்' எனப்படும் குருத்தெலும்புகள் ஆகும். உண்மையில் இவை எலும்புகள் இல்லை.

# மயிரிழை

மயிரிழையில் உயிர் தப்பினார் என்று பத்திரிகைகளில் சில நேரங்களில் செய்தி வருவதைப் பார்த்திருப்பீர்கள். இந்த மயிரிழைத் தூரம் என்றால் எவ்வளவு என்று தெரியுமா?



ஒரு செண்டிமீட்டர் அளவை 200 பங்காகப் பிரித்தால் வரும் அளவுதான் மயிரிழை ஆகும். மயிரிழை அளவுள்ள பொருளை நாம் அடிக்கடி கண்ணால் பார்க்கிறோம். அது எது தெரியுமா? சவர்க்கார நுரையின் குமிழ்தான்.

# மோட்டார் வண்டி (கார்) செய்திகள்



* முதன் முதலில் பெட்ரோலில் இயங்கக்கூடிய மோட்டார் வண்டியைக் கண்டு பிடித்தவர் காட்லீப் டெய்ம்லெர் என்ற ஜெர்மனியர். இவர் 1887ல் இதைக் கண்டுபிடித்தார்.

* முதலில் உருவாக்கப்பட்ட மோட்டார் வண்டியில் சில புதுமைகளைப் புகுத்தி 1895ல் புதுரக மோட்டார் வண்டியைக் கண்டுபிடித்தவர் எஃப்.டபிள்யூ. லான்செஸ்டர். அதில் அவர் புகுத்திய புதுமைகள் நியூமேட்டிக் டயர் மற்றும் வயர் சக்கரம்.

* அனைத்துத் தரப்பினரும் வாங்கக்கூடிய நியாயமான விலையில் மோட்டார் வண்டியை வடிவமைத்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த ஹென்றி ஃபோர்ட் என்பவர்.

* இதன் விளைவாக ஏற்பட்டதே உலகின் மிகப் பெரிய மோட்டார் வண்டித் தொழிற்சாலையான ஃபோர்ட் பிளாண்ட் ஆகும்.

# ஊசி பற்றி தகவல்கள்

- முதன் முதலில் எலும்பு, மரம், முள் போன்றவைகள் மூலம் ஊசிகள் செய்யப்பட்டன. இதற்கும் முன் பறவைகளின் எலும்பும் மீன்களின் முள்ளும்தான் ஊசியாகப் பயன் பட்டன.
- உலோகத்தினாலான ஊசிகளை முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் சீனர்கள். இது பின்னர் மூர் என்ற குழுவினரால் ஐரோப்பாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஐரோப்பாவில் முதன்முதலாக உலோக ஊசி 14ம் நூற்றாண்டில் தயாரானது.
- முதலாம் எலிசபெத் ராணி, எல்லியட் கிரவுஸ் என்ற ஜெர்மனியரின் ஆட்சிக் காலத்தில் ஊசி தயாரிக்கும் கலையை ஆங்கிலேயர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.
- ஊசி தயாரிக்கும் தொழிலில் தற்போது பிரபலமாக இருப்பது இங்கிலாந்து. இதற்கடுத்து ஊசி தயாரிப்பில் சிறந்து விளங்குவது ஃபிரான்ஸ்.


படிப்பகம்

www.padippakam.com



அமோக வாரம் 07

# மேற்கே ஒரு குற்றம்

"பொறுக்கி எடுத்தாப்பல குட்டிகள் ஒவ்வொண்ணும் கண்ணைப் பறிக்கிறது!" என்றான் வசந்த்.

"இங்கே வந்து வம்பு ஏதாவது ஆரம்பிச்சியோ....!"

"சேச்சே!" உள்ளே ஜல் ஜல் என்றது.

"இது என்ன டான்ஸ்?"

"குச்சிப்புடி."

"பேரே ஒரு பெண்ணை எங்கோ தொடர மாதிரி இருக்கே!"

"ஷட் அப்!"

"பத்தரைக்கு கோர்ட்டில இருக்கணும் பாஸ். அதுவரைக்கும் இந்தக் கேஸ் கண்ணைக் கட்டிக் காட்டில விட்டமாதிரி இருக்குது!"

"அந்த வாசனை வசந்த்! அந்த வாசனை, அது என்ன அரக்கா? கற்பூரமா? சர்க்கரை எரியற வாசனையா?"

"எல்லாம் 'கலந்த'டிச்சாப்பல ஒரு வாசனை. அது என்ன வாசனைன்னு தெரிஞ்சு நமக்கு என்ன லாபம்?"

"ம்?" கணேஷ் யோசனையில் இருந்தான்.

வசந்த் சிரித்து; "டிக்கெட் வாங்கி வெக்கிறேன்னு தைரியமா சொல்லிட்டிங்க. எங்கே டிக்கெட்? ரெயில் டிக்கெட்டா, பிளேனா, டிராமா டிக்கெட்டா, ஃபுட் பால் மாட்சா?"

"பதினைந்து நாள்தானே இருக்குன்னு ஒரு தடவை அந்த ஆள் சொன்னான் ஞாபகமிருக்கா?"

"ஆம்."

"பதினைந்து நாளைக்கப்புறம் ஏதாவது முக்கியமான நிகழ்ச்சி இருக்கா? கலைவிழா, புதுப்படம்...ம்ஹூம் அப்படி இருக்கும்னு நான் நினைக்கல!"

"வேற?"

"வேற என்ன? சொல்லத் தெரியலே. எதுக்கும் இன்னிக்கு சாயங்காலம்வரை எதுவும் கண்டுபிடிக்க முடியலைன்னா ஆட்டம் க்ளோஸ். அந்த ரூபா நோட்டை விசிறிட்டு வந்ததைப் பத்தி பொலிஸ்கிட்ட சொல்லிட்டு அம்பேல் வாங்கிற வேண்டியதுதான்."

கணேஷ் சிகரெட் பற்றவைத்தான்.

ரேணுகா வந்தாள். சலங்கையைக் கழற்றியிருந்தாள். முகத்தைத் துடைத்துப் புடவை மாற்றியிருந்தாள்.

"இங்கே ஸ்மோக் பண்ணாதீங்க! இந்த இடமும் ஒரு கோவில் மாதிரி. கலைக் கோவில் மாதிரி நடத்தறோம்."

"ஸாரி" என்று சிகரெட்டை விரல்களால் நெரித்து அணைத்து ஜன்னலுக்கு வெளியே எறிந்தான்.

"தீபா ரொம்ப நல்ல பொண்ணு! வக்கீல்ங்கறீங்களே ஏதாவது ஃபேமிலி டிரபிளா?"

"அப்படி இல்லை. இறந்து போன தினம் காலையிலே தீபா எங்ககிட்ட வந்தா. ஏதோ சொல்ல நினைச்சா. கேட்கிறதுக்கு சந்தர்ப்பம் ஏற்படல. அதுக்குள்ள இந்த விபத்து நிகழ்ந்து போச்சு! மிஸ் ரேணுகா, தீபா எப்படிப்பட்ட பொண்ணு?"

"சிர்ஃபுல்னுதான் சொல்வேன். ரொம்பக் கெட்டிக்காரப் பொண்ணு, நல்லாப் பழகுவா, சிரிச்சுப் பேசுவா. அவ ஞாபகார்த்தமா நேத்து ப்ரோக்ராமை கான்ஸல் பண்ணிட்டம். அவளுக்காக ஒரு பெனிஃபிட் பர்ஃபாமன்ஸ் நடத்தப்போறோம். எ க்ரேட் லாஸ் ஃபார் அவர் க்ரூப். வாட் எ பிட்டி!"

"அவ சொந்த விஷயத்தில் ஏதாவது சிக்கல்கள் இருந்ததா தெரியுமா உங்களுக்கு?"

"எனக்குத் தெரிஞ்சவரைக்கும் ஒண்ணும் கிடையாது. ஆனா நான் எங்க பெண்கள் சொந்த விஷயத்தில் அவ்வளவு தலையிடறது கிடையாது. டான்ஸ் டான்ஸ் டான்ஸ். டான்ஸ் தான் எங்க மூச்சு, பேச்சு எல்லாம்!"

"அதிகமா பணத்தேவை ஏதாவது இருந்ததா அவளுக்கு?"

"இல்லை! நீங்க எதுக்கும் அவ மதரைக் கேட்டுப் பார்க்கலாம்."

"கேக்கப் போறோம்."

"இதெல்லாம் எங்கிட்டே ஏன் கேக்கறீங்கன்னு எனக்குப் புரியலை!"

கணேஷிற்கும் புரியவில்லைதான். சுற்றும் முற்றும் பார்த்தான்.

வசந்த்: "உங்க டான்ஸ்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். சமீபத்தில் பார்த்தேன்," என்றான்.

"எங்கே பாத்தீங்க?"

"அண்ணாமலை ஹால்லே."

"அங்கே டான்ஸ் ஆடி அஞ்சு வருஷம் ஆச்சு..."

"ஸாரி. கலைவாணர் அரங்கத்திலே!"

சிரித்தாள். "அங்கயும் நான் ஆடினதில்லை! நீங்க எங்களை அனாவசியமா புகழ வேண்டியதில்லே. புகழ் எல்லாம் எனக்கு நிறைய வந்தாச்சு! வேற ஏதாவது கேக்கணுமா?"

வசந்த் முகம் மாறினான்.

கணேஷ், "ஒரே ஒரு கேள்வி. தீபா எங்கேயாவது போறதா உங்ககிட்ட சமீபத்தில் எப்பவாவது சொன்னாளா?"

"புரியலை."

"இன்னும் பத்துப் பதினைஞ்சு நாளிலே அவ பார்ஃபார்மன்ஸுக்கு வர முடியாதுன்னு ஏதாவது சொன்னாளா?"

"இல்லையே! இன்ஃபாக்ட் பதினைஞ்சு நாளில் எங்க க்ரூப் வெளிநாட்டுக்குப் போகிறோம். தீபாவும் வர்றதா இருந்தாள். புவர் கர்ள்!"

கணேஷ் பிரகாசமானான். "வெளிநாட்டுக்கா?"

"ஆமாம். ஜெர்மனி, ஃபிரான்ஸ், இங்லாண்டு... ஒரு கல்ச்சுரல் எக்ஸ்சேன்ஞ் ப்ரோக்ராம். தீபாவுக்கு பாஸ்போர்ட், டிக்கெட் எல்லாம் வாங்கிட்டம்! இப்ப வேற ஒரு பெண்ணை அழைச்சிக்கிட்டுப் போகலாம்னா டயம் அதிகம் இல்லை. ட்ரை பண்ணிக்கிட்டிருக்கும்."

கணேஷ் எழுந்தான். "ரொம்ப தாங்க்ஸ்! உங்க நேரத்தை வீணாக்கிட்டேன்!" என்றான்.

"பரவாயில்லை. உங்க பேர் என்ன?"

"வசந்த்."

"மிஸ்டர் வசந்த்! நாங்க கடைசியா பார்ஃபார்மன்ஸ் கொடுத்தது கலாஷேத்திராவில்!" என்று சிரித்தாள்.

"குட்பை!"

"குட்பை!"

வெளியில் வந்ததும் "சரியானபடி வாரிட்டா!" என்றான் வசந்த்.

"எப்பவுமே உன் அணுகல் முறை வேலை செய்யும்னு நினைக்காதே. வசந்த் ஒரு முக்கியமான தகவல் கிடைச்சிருக்கு பாரு! அவங்க பதினைந்து நாளில் ஜெர்மனி போறாங்க! என்ன அர்த்தம்?"

வசந்த் யோசித்து, "அந்த ஆளுங்க நம்மை டிக்கெட் வாங்கச் சொன்னது, ஜெர்மனிக்கா?"

"ஆமாம்!"

வசந்த் விசிலடித்தான்.

"சில்லறை நிறைய ஆகுமே பாஸ்! அப்புறம் பாஸ்போர்ட், விசா!"

"இப்ப ஜெர்மனிக்கு விசா கிடையாது... என்ன உளறல்!"

"இப்ப ஜெர்மனிக்குப் போகப்போகிறோமோ? வேடிக்கையா இருக்குதே?"

"இரு யோசிக்கிறேன்!" கணேஷின் கார் விரைந்தது.

நேற்று இரவு அந்தத் தனியிடத்தில் அந்த ஷெட்டில் அந்தக் குரலுடன் பேசியது ஞாபகம் வந்தது.

'டிக்கெட் எல்லாம் ரெடி பண்ணிடுவியா?

முன் பணம் வேணுமா?

இன்னும் பதினைஞ்சு நாள்தானே இருக்கு!'

டிக்கெட் வாங்கினதும் எனக்குத் தகவல் தெரிவி. பணம் கொடுத்துறலாம்!'

"என்ன பாஸ்?"

"வசந்த் இது பெரிய கோஷ்டி! வெளிநாட்டில எல்லாம் கனெக்ஷன் இருக்குதுன்னு நினைக்கிறேன்."

"பாஸ்! துடிக்குது எனக்கு. அப்ப நாம ஜெர்மனி, ஃபிரான்ஸ் எல்லாம் போகப் போறமா?"

"இல்லை வசந்த்! விஷயம் அவ்வளவு சுலபமில்லை!"

"ஏன் இல்லை! அந்த ஆளு என்ன சொன்னான்? டிக்கெட் வாங்கிடு பணம் தந்துடறேன்னான். உடனே பாஸ்போர்டுக்கு மனுப்போட்றலாம். எனக்கு பாஸ்போர்ட்டு ஆபிசில ஒரு ஆளைத் தெரியும். நாலு நாளில் வாங்கிடலாம். எவனோ பணம் குடுக்கறான் ஒரு தர்ம சவாரி அடிச்சுட்டு வரலாம் வாங்க!"

"கேணத்தனமாப் பேசாதே வசந்த். நாம அங்கே போறதா இருந்தாலும் எதுக்குப் போறம்னு தெரிஞ்சுக்க வேண்டாமா?"

"அதான் நீங்க சொன்னீங்களே! தீபா செய்ய இருந்த வேலையை செய்யறதுக்கு!"

"அதான் என்ன?"

"பாஸ் நீங்கதான் சொல்லுவீங்களே! லேடஸ் ப்ளே இட் பைதி இயர்னு! போகப் போகப் புரியும். அங்கே போனாப் புரிஞ்சுடறது... எதுக்காக அனுப்பிச்சிருக்காங்கன்னு. படக்குனு பதுங்கிறலாம். வாவ்! பாரிஸ், லண்டன், ஃபிராங்க் ஃபர்ட், ரோம்... கோபன்ஹாகம் நிச்சயம் போகணும் பாஸ்!"


"டோன் பி ஸில்லி!"

"பாஸ் எனக்கு இனிமே ஏது சான்ஸ்? நீங்கதான் ஒருதடவை ஓசியில் லண்டன் பார்த்துட்டு வந்திட்டீங்க- அந்த ப்ரியா கேசில. கோபன்ஹாகன்ல லைவ் ஷோவ்ஸ் உண்டாம்..."

"வசந்த் பொறுப்பில்லாமல் பேசாதே! எவனோ அனாமத்தா ஒரு ஆள் பணம் கொடுக்கிறேன் காரியத்தை முடிச்சிட்டு வான்னா; உடனே டிக்கெட் வாங்கிடறதா? யோசிக்க வேண்டாம்?"

"அட்வெஞ்ச்சர் பாஸ். அட்வெஞ்சர். எல்லாத்தையும் தெரிஞ்சு வெச்சிக்கிட்டு டூரிஸ்ட் மாதிரி போறதிலே என்ன த்ரில் சொல்லுங்க? பாரிஸ் போறோம்! அங்கே இருட்டுல ஒரு முனைல திடீர்னு ஒரு செண்ட்வாசனை அடிக்குது! உன்னிப்பாப் பார்த்தா ஒரு வெள்ளைக்காரி 'மிஸ்டர் வசந்த்! என்னோட வா'ங்கன்றா. எங்கே திருப்பறீங்க?"

"பொலிஸ் கமிஷனர் ஆபீஸுக்கு!" என்றான் கணேஷ்.



எழுத்துலக வேந்தன் சுஜாதா

"அதுக்கு இந்த சந்தில எதுக்குப் போறீங்க? எக்மோர் பக்கம்னா போகணும்?"

கணேஷ் விண்ட் ஷீல்ட் கண்ணாடியைப் பார்த்தான். "அந்த நீல அம்பாஸிடர் நம்ம பின்னால ஃபாலோ பண்ணிக்கிட்டே இருக்கான். காலைலே இருந்து பார்க்கறேன். அதுக்குத்தான் சந்தில் திரும்பினேன்... பாரு அவனும் திருப்பறான் பாரு!"

"பாஸ் திஸ் இஸ் எக்ஸைட்டிங். மெட்றாஸ்லையெ இந்த வேலையெல்லாம் நடக்கிறதுன்னா வெளிநாட்டில்..."

"இப்ப என்ன செய்யப்போறோம்?"

"மவுண்ட்ரோடில ஒரு இடத்தில் பார்க் பண்ணப்போறேன்."

ஏர் இண்டியா அலுவலகத்தின் முன் நிறுத்தினான்.

காரைப் பூட்டிவிட்டு நிதானமாக உள்ளே சென்றார்கள்.

(தொடர்ந்து வரும்)

---

## வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்.

# 'அன்ன பூரணி அம்மா'

## பயணம் - 13

ஈ.கே. ராஜகோபால்

பேர்மியூடா.

அமெரிக்கச் செல்வந்தர்களின் சுக போகத்துக்கான சொர்க்கபூமி.

அமெரிக்கர்கள் விடுதலையை தங்கள் இதயம் கவர்ந்த இனியவர்களுடனும், பிள்ளைகளுடனும் கழித்துச் செல்வார்கள்.

குளிர்ச்சியான பிரதேசம்.

அமெரிக்கச் செல்வந்தர்கள் மாட மாளிகை கட்டி வைத்திருக்கிறார்கள்.

இந்த இடத்திலிருப்பவர்கள், இஸ்மாலியாவிலிருந்து, ஆண்டாண்டு காலத்துக்கு முன்னர் அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டவர்களாம்!

தமது முதாதையரின் இடம் அதுதான் என்பதை நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

இஸ்மாலியாவிலிருந்து 'அன்னபூரணி' புறப்படும்போது, கப்பல் கடலில் ஆட்டம் காணாத விதத்தில், அங்கு நிறையளவு மண்மூடைகளை கட்டிக் கப்பலில் போடப்பட்டிருந்தது.

இஸ்மாலியா மண்தான் அது என்பதை அவர்கள் தெரிந்துகொண்டபோது ஆனந்தக் கூத்தாடினார்கள்!

சாக்குகளிலிருந்து கைநிறைய மண்ணை எடுத்துச் சென்றார்கள்!

தாயகத்தின் மண்ணை எடுத்து முத்தமிட்டார்கள்!

பேர்மியூடாவில் நூற்றுக்கணக்கான அழகுத் தீவுகள்!

பேர்மியூடாவிலிருந்து பயணம் தொடர்ந்தது!

●●

'அன்னபூரணி அம்மாள்' அமெரிக்காவைச் சென்றடைய இன்னும் இருந்த இடைவெளித்தூரம்-

அறுநூறு மைல்கள்!

எத்தனை சவால்கள்-

எத்தனை இடர்கள்-

உயிரையே துச்சமென மதித்து, பயங்கரப் பயணத்தை நடாத்தி, இன்னும் அவர்கள் அடையவேண்டிய தூரம் ஆக அறுநூறு மைல்கள்தான்!

இதற்கு முன்பாக-

போட்செட் துறைமுகத்தில் 'அன்னபூரணி' தரித்து நின்றபோது-


சந்தோஷமான ஒரு சமாச்சாரம்தான்!

றொபின்சன் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார்! அவருக்கு இப்போது இரட்டிப்பு மகிழ்ச்சி!

'அன்னபூரணி' அமெரிக்கா சேரப்போகிறாள்!

அதே நேரத்தில்-

தனது இனியவள் ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்ட செய்தி அவருக்கு தேனாக இனித்தது!



வல்வெட்டித்துறை கடலோடிகளும் றொபின்சன் மகிழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்!

"றொபின்சன் தனது மனைவியுடன் 'போட்செட்'டிலிருந்து விமானத்தில் பறந்து சென்றுவிட்டார்!

அமெரிக்காவில் அன்னபூரணியை வரவேற்க ஏற்பாடுகளைச் செய்வதும் ஒரு நோக்கம்!

★★

ஒன்றரை வருடகாலத்துக்கு மேலான நீண்ட பயணம்-

றொபின்சன் என்ற அமெரிக்கர் நினைத்ததை வல்வெட்டித்துறைக் கடலோடிகள் செய்து முடித்துச் சாதனை நிலை நாட்டி விட்டார்கள்!

அமெரிக்காவில் பிரசித்திபெற்ற குளோசெஸ்ரர் துறைமுகத்தில் எக்கச்சக்கமான வரவேற்பு-

'அன்னபூரணி' நங்கூரமிட்டிருந்த இடத்திற்கு ஏராளமான அமெரிக்கர்கள் வந்து சேர்ந்தார்கள்!

அன்னபூரணிக்குள் ஏராளமான கூட்டம்!

கப்பலைச் சுற்றிப் பார்த்தார்கள்!

தம்பிப்பிள்ளைத் தண்டையலையும் மற்றைய கடலோடிகளையும் கேள்விமேல் கேள்வி கேட்டு, அன்புத் தொல்லை கொடுத்தார்கள்!

திணறிப்போய் விட்டார்கள்- அமெரிக்கர்கள் கொடுத்த அன்புத் தொல்லையில்!

வல்வெட்டித்துறைக் கடலோடிகளின் சுவையான பேட்டிகள், செய்திகள் அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளியாகின.

றொபின்சன் செல்வத்தில் புரளும் கோடிச் சீமான். அவர் மனதும் அப்படி. எனவே, பணத்தைத் தண்ணீர்போல் இறைத்தார். அதாவது, அவரும், அவர் மனைவியும் அன்னபூரணியை அமெரிக்காவரை கொண்டுவந்து சேர்த்த வல்வெட்டித்துறைக் கடலோடிகளுக்கு ராஜமரியாதை அளித்துக் கௌரவித்தார்கள்.

இத்தோடு அவர் விட்டுவிடவில்லை.

அமெரிக்காவின் முக்கிய இடங்களையெல்லாம் அவர்கள் பார்த்து இரசிக்க ஏற்பாடுகள் செய்தார்.

அமெரிக்காவின் இதயமான நியூயோர்க் நகரத்தை மூன்று தினங்கள் சுற்றிப் பார்த்து, வல்வெட்டித்துறை வீரர்கள், அமெரிக்காவில் இருவாரங்கள் கழித்துவிட்டு, மீண்டும் தாயகத்துப் பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டனர்.

வல்வெட்டித்துறைக் கடலோடிகளின் வரலாற்றுச் சுவடு நிறைந்த இந்தப் பயணம், நெஞ்சத்தை விட்டகலாத அமெரிக்க தேசத்தின் பசுமையான நினைவுகளுடன் நிறைவேறிவிட்டது.

எல்லோர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் பொங்கி வழிந்தது.

றொபின்சன் தம்பதிகளை அவர்களும்-

இவர்களை றொபின்சன் தம்பதிகளும்-

ஆரத்தழுவி முத்தம் சொரிந்து கொண்டனர்.

தம்பிப்பிள்ளைத் தண்டையல் சகிதம் ஏனைய வல்வெட்டித்துறைக் கடலோடிகளும் நீராவிக் கப்பல் ஒன்றில் சிங்கப்பூர் வழியாக அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பி விடை பெற்றபோது, றொபின்சன் தம்பதிகள் கண்களிலிருந்து கண்ணீர் மல்கி வழிந்துகொண்டேயிருந்தது.

அப்போது-

'அன்னபூரணி' குயில் கூவுவது போல், ஓசை எழுப்பி, வல்வெட்டித்துறைக் கடலோடிகளுக்குத் தனது அன்பு வணக்கத்தை நெஞ்சாழ்ந்து தெரிவித்துக் கொண்டாள்.

அந்தக் காட்சி-

'என் அன்புக்குரியவர்களே! சென்று வாருங்கள்' என்று சொல்வதுபோல் இருந்தது.

(பயணம் நிறைவுபெற்றது)

www.padippakam.com

# முள் நிலவு

## நிலவு 06

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார் எழுதியுள்ள 'விறு விறு காதல்கதை.... உங்கள் இதயத்தில் இந்தக் கதையின் நாயகி 'நிலா'வுக்கும் இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!**

கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

கி ளாஸிக் காண்டஸா காரைப் பார்த்ததும் சிவராஜனின் கண்களில் வியப்பு ஈஷிக் கொண்டது.

'அது யாருடைய கார்?'

அவர் யோசித்துக் கொண்டிருக்கும் போதே காரின் பின் சீட்டுக் கதவைத் திறந்து கொண்டு, க்ரீம் நிற சபாரி அணிந்த அந்த நாற்பது வயது நபர் ஒரு சின்னப் புன்னகையோடு இறங்கினார்.

"வணக்கம்..."

சிவராஜனும் குழப்ப முகத்தோடு 'வணக்கம்' சொல்லிவிட்டு "நீங்க..?" என்று குரலை இழுக்க, சபாரி புன்னகையைப் பெரிதாக்கினார். "வாங்க... உள்ளே போய்ப் பேசுவோம்..."

சிவராஜன் உள்ளே கூட்டிப்போய் சோபாவைக் காட்டி அவர் உட்கார்ந்ததும் தானும் உட்கார்ந்தார்.

சத்தம் கேட்டு சமையலறையிலிருந்து பாக்யமும், தன்னுடைய அறையிலிருந்து நிலாவும் வெளிப்பட்டார்கள்.

சபாரி, நிலாவைப் பார்த்துவிட்டுக் கேட்டார்.



"இதுதான் உங்க டாட்டரா...?"

"ஆமாம்..."

"பேரு நிலா தானே...?"

"ஆமா..." என்று தலையசைத்த சிவராஜன் மனசுக்குள் லேசாய் பீறிட்ட கோபத்தை அடக்கிக்கொண்டு கேட்டார்.

"நீங்க யார்ன்னு சொல்லவேயில்லையே...?"

"என்னோட பேர் தத்தாத்ரேயா... டெல்லி ஹோம் மினிஸ்டர் ஆபீஸ்ல செக்ரட்ரி போஸ்ட். வ.ர.எஸ்.கேடர் நான் இங்கே உங்களை பார்க்க வந்தது ஒரு முக்கியமான விஷயத்தை உங்ககிட்ட சொல்லி கன்சல்ட் பண்ணிட்டுப் போகத் தான்..."

சிவராஜனின் முகத்தில் இருந்த குழப்பம் இப்போது பயமாய் மாறியிருந்தது.

"சொல்லுங்க... என்ன விஷயம்...?"

தத்தாத்ரேயா தன் சபாரி பாக்கெட்டில் வைத்திருந்த ஒரு போஸ்ட் கார்ட் சைஸ் ஃபோட்டோவை எடுத்து சிவராஜனிடம் நீட்டினார்.

"இந்த ஃபோட்டோவைப் பாருங்க..."

சிவராஜன் வாங்கிப் பார்த்தார்.

ஆரோக்கியமான சிவப்பில் ஒரு அழகான இளைஞன் கருநீல ஃபுல் சூட்டில் அமர்க்களம் செய்தான்.

"யார் இது...?"

"இந்தப் பையன் பேர் ப்ருதிவ். ஹோம் மினிஸ்டர் சோமய்யாவோட ஒரே மகன். எம்.ஈ., எம்.பி.ஏ. முடிச்சுட்டு டெல்லி விஞ்ஞான கழகத்துல பெரிய உத்தியோகம் பார்க்கிறான். மூணு நாளைக்கு முன்னாடி ப்ருதிவ் உத்தியோக விஷயமா மெட்ராஸ் வந்தப்ப உங்க பொண்ணு நிலாவை பீச்ல பார்த்திருக்கான்."

தத்தாத்ரேயா சில வினாடிகள் பேச்சை நிறுத்தி, பின் மெல்லத் தொடர்ந்தார். "பையன் ப்ருதிவிக்கு உங்க பொண்ணு நிலாவை கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசை. டெல்லிக்கு ஃபோன் பண்ணி அப்பாகிட்ட விஷயத்தை சொன்னான். பையனோட விருப்பத்துக்கு மாறா சோமய்யா என்னிக்குமே நடந்ததில்லை...

பொண்ணைப் பார்த்துப் பேசி முடிக்க என்னை அனுப்பி விட்டார். இன்னிக்குக் காலையிலதான் டெல்லி ப்ளைட்டை பிடிச்சு மெட்ராஸ் வந்தேன். அதுக்குள்ள பையன் ப்ருதிவ் உங்க பொண்ணு சம்பந்தப்பட்ட எல்லா விபரங்களையும் கலெக்ட் பண்ணி வெச்சிருந்தான். பையனை ஹொட்டல் சோழாவிலேயே இருக்கச் சொல்லிட்டு, நான் மட்டும் பேசிட்டு போலாம்னு வந்தேன். உங்க அபிப்பிராயத்தை தெரிஞ்சுகிட்டு அதுக்கப்புறம் ஃபார்மாலிட்டிபடி பண்ணிக்கலாம்."

தத்தாத்ரேயா பேசி முடிக்கும்வரை காத்திருந்த சிவராஜன், அவர் வாயைச் சாத்தியதும் தன் கைகளைக் குவித்து கும்பிட்டார்.

"மன்னிக்கணும்..."

"ஏன்...?"

"என் பொண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுச்சு.."

"என்னது...?"

"பையன் பேர் கிருஷ்ணகாந்த். ஸ்டேட்ஸ்ல இருக்கார். முகூர்த்த தேதியையும் ஃபிக்ஸ் பண்ணியாச்சு. இதோ... வெட்டிங் கார்ட் ஸைப் பிரிண்ட் பண்றதுக்காக செலக்ட் பண்ணின இன்விடேஷன் மாடல்."

தத்தாத்ரேயா இப்போது லேசாய் முகம் மாறியிருந்தார். புருவங்களின் மத்தியில் லேசாய் வியர்வை.

"இதை நான் எதிர்பார்க்கலை.. பாவம்! ப்ருதிவிக்கு ரொம்பவும் ஏமாற்றமாயிருக்கும்..."

சில வினாடிகளுக்கு அங்கே ஒரு வேண்டாத அமைதி நிலைக்க தத்தாத்ரேயாவே அதைக் கலைத்தார்.

"ஒரு ஃபோன் பண்ணிக்கலாமா?"

சிவராஜன் தலையசைத்து ஃபோன் இருந்த பக்கம் கையைக் காட்ட, அவர் எழுந்து போய் ரிஸீவரை எடுத்துக்கொண்டு டயலில் எண்களைத் தட்டினார். மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டதும் பேசினார்.

"ப்ருதிவ்! நான் தத்தாத்ரேயா.."

"........"

"எஸ்... மிஸ்டர் சிவராஜன் வீட்லயிருந்து தான் பேசறேன். இவரோட டாட்டர்க்கு கல்யாணம் நிச்சயமாயிடுச்சு... இன்னிக்கு இன்விடேஷன் பிரிண்ட் பண்ண பிரிண்ட்டர்ஸுக்கு போறாங்க..."

"........"

"மாப்பிள்ளை ஸ்டேட்ஸ்..."

"........"

"நோ...நோ... அதெல்லாம் சரியில்லை..."

"........"

"சரி... பேசிப் பார்க்கிறேன்."

தத்தாத்ரேயா ரிஸீவரை வைத்துவிட்டு இடது கை விரல்களால் மோவாயை வழவியபடி சிவராஜனுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். நிலாவையும், பாக்யத்தையும் கடைக்கண்களால் பார்த்துவிட்டு மெல்லிய குரலில் சொன்னார்.

"உங்ககிட்ட ஒரு பத்து நிமிஷம் தனியா பேசணும். அப்படி வெளியே ட்ராயிங் ரூம் பக்கம் போயிடலாமா?"

"என்ன பேசணுமோ... அதை இங்கேயே பேசலாமே... நீங்க பேசப்போற விஷயம் என்னோட மனைவிக்கும், மகளுக்கும் தெரியறதுல எந்தத் தப்பும் கிடையாது...."

தத்தாத்ரேயா தயங்கிவிட்டு தொடர்ந்தார்: "அது...வந்து...வேற...ஒண்ணுமில்லை...

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்**

மிஸ்டர் சிவராஜன்! பையன் ப்ருதிவ் என்ன ஃபீல் பண்றான்னா... இந்த சம்பந்தத்தை ரீ-கன்ஸிடர் பண்ணக்கூடாதா...? வெறும் வார்த்தையளவில் தானே கல்யாணம் நிச்சயமாகியிருக்கு...? கார்ட்ஸ்கூட இன்னும் ப்ரிண்ட் ஆகலை... பொண்ணோட ஃபாதர்கிட்ட பேசிப்பாருங்கன்னு சொல்றான்..."

சிவராஜன் புன்னகைத்தார்.

"அந்தப் பையன் அப்படிச் சொல்றது சரின்னு நீங்க நினைக்கிறீங்களா?"

"மேலோட்டமா பார்த்தா சரியில்லைன்னுதான் தோணும். ஆனா கொஞ்சம் ஆழமா யோசனை பண்ணிப் பார்த்தா சரின்னுதான் மனசுக்குப் படும்..."

சிவராஜன் புன்னகை மாறாமல் கேட்டார்.

"எப்படி சரின்னு சொல்றீங்க...?"

"இப்போ வந்திருக்கிற இந்த சம்பந்தம் சாதாரண சம்பந்தம் இல்லை. ராஜசம்பந்தம். ஹோம் மினிஸ்டர் சோமய்யா நம்ம தமிழ் நாட்டுக்காரர். எல்லாத்துக்கும் மேலா உங்க காஸ்ட். இன்னிக்கு மத்திய மந்திரி சபையில சோமய்யாவுக்கு தனி அந்தஸ்து உண்டு. தமிழ் நாட்டில எந்த லோக்சபா தொகுதியில் தேர்தலுக்கு நின்னாலும் சரி ஜெயிக்கக்கூடிய அளவுக்கு செல்வாக்கு உள்ளவர். அவர்க்கு ஒரே மகன் ப்ருதிவ். கோடிக்கணக்கான சொத்துக்கு வாரிசு. அந்தப் பையனோட பார்வை உங்க பொண்ணுமேல பட்ட நேரம் அஷ்டலட்சுமிகளும் ஒண்ணா இருந்த நேரம். இப்படியொரு ராஜசம்பந்தம் வீடு தேடி வரும்போது அதை வேண்டாம்னு சொல்லலாமா...?"

"நல்ல சம்பந்தம் தான்.. ஒத்துக்கிறேன். அதுக்காக ஏற்கனவே நிச்சயம் பண்ணினதை வேண்டாம்னு சொல்ல முடியுமா...? அது சரியில்லையே?"



"என்னங்க பெரிய சரியில்லை...? தாலி கட்டப் போற நேரத்துல எத்தனைபேர் கல்யாணம் வேண்டாம்னு சொல்லிட்டுப் போறதில்லை? அது மாதிரி நீங்களும் ஏதாவது ஒரு காரணம் சொல்லி.."

தத்தாத்ரேயா பேசிமுடிக்கவில்லை.

அறை வாசலில் நின்றிருந்த நிலா ஒரு சின்னப்புயல் மாதிரி அவர்க்கு முன் பாய் வந்து நின்றாள். முகத்தில் உஷ்ணம் தகிக்கச் சொன்னாள்: "நீங்க வயசுல பெரியவங்க. ஒரு பொறுப்பான உத்தியோகத்தில் இருக்கீங்கங்கிற ஒரே காரணத்துக்காக மரியாதை கொடுத்து சொல்றேன்! ஸாரின்னு ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போயிட்டே இருங்க..."

தத்தாத்ரேயா ஏதோ பேச முயல நிலா கையமர்த்தினாள்: "ப்ளீஸ்...கெட் லாஸ்ட்..."

அவர் புன்னகைத்தார்.

"இதோ.. பாரம்மா...! உனக்கு இப்படியொரு கோபம்வர்றது நியாயம்தான். ஆனா... கொஞ்சம் யோசனை பண்ணியும் பார்க்கணும். சில நேரங்கள்ல அதிஷ்டம் லேட்டா வந்து கதவைத் தட்டினாலும் அதை வேண்டாம்னு சொல்லி திருப்பி அனுப்பக்கூடாது."

"நீங்க சொல்ற அதிஷ்டம் ஏற்கனவே வந்து கதவைத் தட்டியாச்சு... நீங்க போயிட்டு வாங்க..."

"இப்படி படபடன்னு பேசாதேம்மா...! உனக்கு ரெண்டு நாள் டயம் தர்றேன். யோசனை பண்ணு. பையனோட ஃபோட்டோவைப் பார்த்தியா...? ராஜவம்சத்து இளவரசன் மாதிரி என்ன களை! தேஜஸ்..! இப்பேர்ப்பட்ட வரன் எல்லார்க்கும் அமையாதம்மா...!"

"நீங்க நிஜமாவே ஒரு வ.ர.எஸ்.கேடர் ஆபிஸரா... இல்லை கல்யாணத்தரகரா...?"

"நீ எப்படி நினைச்சுக்கிட்டாலும் சரி. பையன் ப்ருதிவ் ஃபோட்டோ இங்கேயே இருக்கட்டும். ஃபோட்டோவைப் பார்த்துக்கிட்டே மூணு பேரும் யோசனை பண்ணுங்க-ரெண்டு நாள் கழிச்சு மறுபடியும் வர்றேன்."

தத்தாத்ரேயா ஃபோட்டோவை டீபாயின் மேல் வைத்துவிட்டு நகர-நிலா அதை எடுத்து இரண்டாய், நான்காய், எட்டாய்க் கிழித்து தத்தாத்ரேயின் முதுகின் மேல் வீசினாள்.

அவர் அதைப் பொருட்படுத்தாமல் நடந்து வெளியேற நிலா சிவராஜனிடம் திரும்பினாள். கோபம் கண்களில் கொப்பளித்தது.

"அந்த ஆளை இவ்வளவு நேரம் உட்கார வைச்சு பேசிட்டிருந்ததே தப்பு. பெரிய மனுஷனாம்.. பெரிய மனுஷன்..!"

"கோபப்படாதேம்மா...! ஒரு பொண்ணு கண்ணுக்கு லட்சணமா இருந்தா இது மாதிரியான பிரச்சனைகளெல்லாம் வரும். இது கொஞ்சம் பெரிய இடத்துப் பிரச்சனை அவ்வளவுதான்..!"



பாக்யம் பக்கத்தில் வந்து நின்றாள். நிலா அவளைத் திரும்பிப் பார்த்தபடி கேட்டாள்.

"என்னம்மா...நீ வாயை மூடிக்கிட்டு சும்மாயிருந்துட்டே? அந்த ஆளை ஒரு பிடி பிடிச்சிருக்க வேண்டாமா...?"

பாக்யம் நிலாவை அமைதியாய் ஏறிட்டாள்.

"அந்த ஆள் சொல்லிட்டுப் போனதில என்னடி தப்பு?"

நிலா திக்கித்துப் போனாள்.

(அடுத்தவாரமும் நிலவு வரும்)

---

# கவியரசுவின் சுயசரிதை

**கவியரசு கண்ணதாசன் எழுதிய–அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

08

நெ டுஞ்செழியனிடம் கூட அவனுக்கு அதிகமான பழக்கமில்லை. அதாவது அந்தரங்கங்களைப் பரிமாறிக்கொள்கிற அளவிற்குப் பழக்கமில்லை.

அவன் போனபோது அவர் வெளியே செல்வதற்காகப் புறப்பட்டுக்கொண்டிருந்தார். என்றாலும் அவனை அன்போடு வரவேற்று விஷயங்களை விசாரித்தார்.

எவ்வளவு தூரம் பிரிந்துபோனாலும் அவனால் மறக்க முடியாத முகம் நெடுஞ்செழியன் முகமாகும். குழைவான சுபாவமும் புன்னகை முகமும் கொண்ட உயர்ந்த மனிதர் நெடுஞ்செழியன். எல்லோரையும் அணைத்துக்கொண்டு போகவேண்டும் என்ற எண்ணமுடையவர் கழகத்திலேயே அவர்தான். அவர் நிறைகுடம்!

தான் கட்சியிலிருந்து விலகியது பற்றி அவருடைய அபிப்பிராயத்தை அவன் கேட்டான். "வாழ்க்கையில் ஏற்படும் சொந்த விவகாரங்களை அரசியலில் கவனிக்க வேண்டியதில்லை, என்றாலும் அண்ணாவைப் பாருங்கள்!" என்று அவர் சொன்னார். அவன் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு காஞ்சிப்புரத்திற்குப் புறப்பட்டான். காஞ்சியில் அண்ணாத்துரையின் பழைய வீட்டிற்கு எதிரே சிறிய புது வீடு ஒன்றை அவர் அப்பொழுதுதான் கட்டியிருந்தார்.

அவன் போன நேரத்தில் பல சுயேச்சை அபேட்சகர்கள் அவரை மொய்த்துக்கொண்டிருந்தார்கள். அவனைப் பார்த்து அவர் புன்னகை புரிந்தார். அது அவர் சுபாவம்! அதுதான் அவரது அன்பான வரவேற்புக்கு அடையாளம். "உட்கார்" என்றார். பிறகு வெகு நேரம் வரை வந்திருந்த அபேட்சகர்களோடு பேசிக்கொண்டிருந்தார். பெரும்பாலோர் அவரைக் கூட்டத்திற்கு அழைகக வந்திருந்தார்கள். சிலருக்கு தேதி கொடுத்தார். சிலரைத் தட்டிக்கழித்தார்.

இறுதியாக இராணிப்பேட்டைத் தொகுதி சுயேச்சை அபேட்சகர் வரதராசன் என்பவர் "யாராவது ஒருவரை அனுபபுங்கள்," என்று அவரிடம் கெஞ்சினார்.

அண்ணாத்துரை சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, அடக்கமாக அமர்ந்திருந்த அவனைப் பார்த்து "நீ போய் வா!" என்றார். அவன் எப்படிப் போக முடியும்? அவன்தான் இராஜினாமாக் கடிதம் அனுப்பியிருக்கிறானே...!

அவன் அதைச் சொல்ல வாயெடுத்தான். அவர் உடனே புரிந்துகொணடார். "எல்லாம் எனக்குத் தெரியும்! போய் வா!" என்றார்.



அந்த அன்பு அவன் கண்களைக் கண்ணீரால் நிரப்பியது. "வா! நம் வீட்டிலேயே சாப்பிட்டு விட்டுப் போகலாம்" என்றார். சாப்பிடச் சென்றான். நாலைந்து விருந்தாளிகளோடு அவனும் அமர்ந்தான். ஆள கொஞ்சம் கனமான ஆள்; ஆதலால் இரண்டு இலைக்கு ஒருவனாக அமர்ந்தான்.

அவர் ஜாடையாக அவனைப் பார்த்தார். "என்ன நீ எல்லாவற்றிலும் இரண்டு இரண்டு கேட்கிறாய்?" என்றார் புன்னகையோடு. அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

அவரது அபிப்பிராயம் அவனுக்குப் புரிந்தது. அவனது இரண்டாவது ஏற்பாட்டைப்பற்றி அவர் சாதாரணமாகத்தான் நினைக்கிறார் என்பதும், பெரிய விபத்தாகக் கருதவில்லை என்பதும் புரிந்தது. உற்சாகத்தோடு அவரிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

மாலை இராணிப்பேட்டையில் கூட்டம்.

மேடைக்கு முன்னால் காலி மைதானம் நிறைய இருந்தது.

ஏதோ பேசினார்கள்.

"எல்லோரும் வரதராசனுக்கு ஒட்டுப் போடுங்கள்!" என்று கேட்டுக் கொண்டான்.

மேடையை விட்டு இறங்கியதும், அடுத்த அழைப்பு அவனுக்குக் காத்துக் கொண்டிருந்தது.

குடியாத்தம் தொகுதியில் ஓர் அபேட்சகர். பெயர் ராஜகோபால் நாயுடு என்பது. அவரது சகோதரர் அவனுக்கு மிகவும் வேண்டியவர். அவனை ராஜகோபால் நாயுடுவுக்காகப் பேசுவதற்கு அழைத்தார்.

தாட்சண்யத்தாலேயே தொல்லைகளை அனுபவித்த அவன், மறுக்க முடியாமல் சென்றான்.

இரவு ஒன்பது மணிக்குக் குடியாத்தம் கூட்டம்.

மேடைக்கு முன்னால் சுமார் ஆயிரம்பேர் அமர்ந்திருந்தார்கள். மேடையில் ஏறிய அவன் பேசத் தொடங்கினான்.

அவ்வளவுதான் தாமதம். உடனே முன்னால் இருந்த கூட்டம் எல்லாம் எழுந்தது. சுமார் நூறு துண்டுச் சீட்டுக்கள் அவன் கையில் தரப்பட்டன. எல்லாச் சீட்டுக்களிலும் ஒரே கேள்விதான் இருந்தது. 'இன்று ராஜகோபால் நாயுடுவை நமது கழகம் ஆதரிக்கவில்லை. உமக்குத் தெரியுமா...?' இதுதான் கேள்வி! அவன் திடுக்கிட்டான்.

ஒலிபெருக்கி மூலமே பதில் சொன்னான்: "எனக்குத் தெரியாது! இன்று காலைதான் கல்கத்தாவிலிருந்து வந்தேன். எனது நண்பர் வந்து அழைத்ததால் வந்துவிட்டேன்!" என்றான்.

அதன்பிறகு கழகத் தோழர்கள் அவனை ஒருசிறிய வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள்.

கழகம் ஆதரிக்கும் அபேட்சகரான அண்ணல்தங்கோ என்பவருக்காகப் பேசுவதற்கு ஒருநாள் குறித்துத் தரும்படி கேட்டார்கள்.

அவனும் ஒரு நாளைக் குறித்துக் கொடுத்துவிட்டுப் புறப்படத் தயாரானான். அப்போது ஒரு வேடிக்கை நடந்தது. எங்கே கழகத் தோழர்கள் அவனைத் தாக்கி விடுவார்களோ என்று ராஜகோபால் நாயுடுவின் ஆட்கள் கண்காணிப்பதற்காக இரண்டு கார்களில் சுற்றிக் கொண்டே இருந்தார்கள். எங்கே அவர்கள் அவனைத் தாக்கிவிடுவார்களோ என்று கழகத் தோழர்கள் அவனைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள்.

அவனது காருக்கு முன்னும் பின்னும் சுமார் ஐம்பது சைக்கிள்களில் கழகத் தோழர்கள் பத்து மைல் தூரம்வரை அவனுக்குப் பாதுகாப்பாக வந்தார்கள்.

அந்தப் பத்துமைல் தூரமும் இராஜகோபால் நாயுடுவின் கார்களும் அவனுக்குப் பாதுகாப்பாக வந்துகொண்டிருந்தன.

இப்படி இரண்டு பகுதியினரின் அன்புக்கும் பாதுகாப்பிற்கும் நடுவே அவன் பத்து மைல்களைக் கடந்து பாக்கித் தூரத்தைத் தனியாகவே கடந்தான்.

காரில் வரும்போதெல்லாம் அண்ணாத்துரை தன்னிடம் பிரியம் வைத்திருப்பதை எண்ணிப் பெரு மகிழ்ச்சி அடைந்தான்.

இனித் தன்னை யாரும் தடுக்க முடியாது என்ற தைரியம் அவனுக்கு வந்தது.

அதன் பிறகு தனிக்கூட்டங்கள் பலவற்றிற்கு ஒப்புதல் அளிக்கத் தொடங்கினான்.

வாழ்க்கையைச் சீர்செய்துகொண்டு முழு அரசியல்வாதியாகத் திகழ அவன் உறுதி கொண்டான்.

ஆனால், அந்த நேரமும் வருமானத்திற்கு வழியில்லாமல் இருந்த நேரமாக இருந்தது.

(சரிதம் தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

ஜூலை கலவர நினைவுக் கதை

# காலம் ஆகி வந்த கதை



**இரவி. அருணாசலம்**

யூலை வருகிறபோது அவனை நினைத்துக் கொள்கிறேன். யூலை என்றால் நடுங்கித் திரிந்த ஞாபகங்கள்தான் எனக்கு அதிகம். என்னூர் வெய்யிலாலும், வெக்கையாலும் கருகி இருக்கும். வீசும் காற்றில் அனல் தெறிக்கும். அதற்கும் மேலாக அவன் ஞாபகம் வருகின்றது. அவன் சொன்ன கதை ஞாபகம் வருகின்றது. நானே அவனாகி இருந்தேன்.

♣♣

இது எனக்கு நடந்தது.

கொழும்பில் நான் வாழ்ந்தேன்.

சில விடயங்கள் மறந்திருக்கலாம். சில நிகழ்வுகள் என்னைத் தொடாமலும் போயிருக்கலாம். ஆனால் நெஞ்சைச் சுட்ட அந்தக் கொடுமைகளை ஒருபோதும் மறந்து போய்விட முடியாது. நான் துன்பப்பட்ட ஒவ்வொரு கணமும் ஒரு சித்திரம்போல மனத்திரையில் தோன்றி மறைகிறது.

**1983 யூலை.**

கொடுமை மிகுந்த அந்த மாதத்திற்கு முன்னரேயே வீதியெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. யாவும் இனவாதம்- அவற்றை வாசிக்க நான் அஞ்சினேன்.

யாழ்ப்பாணம்: அது எனக்கு என்ன நிறமென்று தெரியாது. ஒரு நிறம் என் மனதில் இருந்தது. வெள்ளை. அப்படித் தானோவும் தெரியாது. வவுனியா- மஞ்சள், மட்டக்களப்பு- பச்சை, மன்னார்- நீலம், திருக்கோணமலை-சிவப்பு- இப்படித்தான் நான் ஊகித்தேன். நான் கொழும்பில் பிறந்து வளர்ந்தேன். கொழும்பின் நிறம் என்ன வென்று எனக்குத் தெரியும். நிறமேயில்லை. பிறகு சாம்பல் நிறமாயிருந்தது. நான் ஓடுகிற போது, ஒளிக்கின்றபோது அதனைக் கண்டேன். சாம்பல் நிறமாயிருந்தது கொழும்பு.

நான் ஓடிய கதை, ஒளித்த கதை அதைத்தான் நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும்!

*1983 யூலை 23 இற்கு இரண்டு நாட்களின் பின்னர்-(அந்த நாளை மிகுந்த சிரமப்பட்டு நான் நினைவு கூருகிறேன்) நானும் ஆசீக்கும், சாகிரும் பொதுசன நூலகம் செல்கிறோம்.*

அன்றுதான் அனர்த்தம் தொடங்கியிருந்தது. அது எனக்குத் தெரியாது.

நகர மண்டபத்திற்கு அருகில் ஒரு சைவக்கடை தாக்கப்படுகிறது. எவர்சில்வர் பாத்திரங்கள் உருளுகின்றன. "இது தமிழனுடைய அலுவா சாப்பிடுங்கள்!" என்று ஒருவன் எனது கையினுள் அலுவாத் துண்டை திணிக்கிறான். என் கைகள் நடுங்குகின்றன. ஆசீக் சிங்களத்தில் முணுமுணுக்கிறான்: "வாங்கிச் சாப்பிடு."

கடை எரிக்கப்படுகிறது. சுவாலை விட்டு எரியவில்லை. அமுங்கி அமுங்கி எரிகிறது.

தீயணைப்புப் படை வாகனம் வருகிறது. அதிலுள்ளவர்கள் "ஜெயவேவா" கோஷமிட்டு மிகுதியையும் எரிக்கச் சொல்லி உற்சாகக் குரல் எழுப்பியவாறு போகிறார்கள். நாகரிகமாக உடுத்தியிருந்த ஒரு சிங்களப் பெண்மணி "தமிழர்களுக்கு இது வேணும்!" என்றாள்.

பஸ் கிடைப்பது கடினமாக இருந்தது. மிகுந்த சனத்துடன் ஒரு பஸ் வந்தபோது அதில் சிரமப்பட்டு மூவரும் ஏறினோம். கிராண்ட்பாஸில் எனது வீடு. நான் போயே ஆகவேண்டும். வீட்டுக்காரர்கள் இங்கு நடக்கிற நிலைமைகளை அறியத் தொடங்கியிருப்பார்கள். பதற்றப்படுவார்கள்.

பஸ் மருதானையில் நின்றது. சனங்கள் அங்கும் இங்கும் ஓடித்திரிந்தார்கள்.

இறங்கிப் புறக்கோட்டைப் பக்கமாக நடக்கத் தொடங்கினோம். நடந்து செல்லும் போது "தமிழனோ... தமிழனோ...?" என்று விசாரித்தார்கள். பஸ்ஸிற்குள்ளும் அப்படி விசாரித்திருந்தார்கள். நான் அடையாள அட்டையை சப்பாத்தின் மேலணிக்குள் செருகிவிட்டேன். நான் சிங்களத்தில் கதைத்தேன். அது அச்சொட்டாக சிங்களவர்களின் சிங்களமாக இருந்தது.

மருதானைக்கும் புறக்கோட்டைக்கும் இடையில் ஒருவர் கால் துண்டிக்கப்பட்ட நிலையில் துடிதுடித்துக் கொண்டு கிடந்தார். தமிழ் துடித்துக் கொண்டிருந்தது. மனிதம் துடித்துக் கொண்டிருந்தது. எனது வாழ்நாளில் ஒரு முறையும் இப்படி ஒரு காட்சியை நான் கண்டதில்லை. இரத்தம் வீதியில் ஊறிக்கிடந்தது. ஒரு புறத்தில் பாணியாகத் திரண்டு கிடந்தது. இரத்தம் இந்த நிறமா? அந்தச் சூழலில் நான் என்ன செய்வது? அவரை அப்படியே விட்டு விட்டுப் போவதா? ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு போகமுடியாதா? கடவுளே!

எனக்கு அழுகை வருமாப்போல இருந்தது. அவரை அப்படியே விட்டுவிட்டுப் போவதா?

விட்டுவிட்டுப் போனேன். வாழ்நாள் பூரா இந்தக் காட்சி மறையாது. உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிற ஒரு சீவனை நான் நடுத்தெருவில் அல்லாட விட்டுப்போகிறேன்.

வீதியெங்கும் பேய்கள் ஓடித்திரிந்தன. விமானப்படை அதிகாரி ஒருவர் வந்து "சுடுவேன்... சுடுவேன்...!" என்றார். சுடவில்லை.

நாங்கள் நடந்து கொண்டு போனோம். புறக்கோட்டைச் சந்தியில் மோட்டார் சைக்கிளில் வந்த வாலிபன் ஒருவன் இறக்கப்பட்டான். மீன் வெட்டுகின்ற பெரிய வாளால் அவன் நெற்றி பிளக்கப்பட்டது. அவன் துடிதுடித்து நிலத்தில் வீழ்ந்தான். வீழ்ந்தும் துடிதுடித்தான். அவ்விடத்தால் வந்த மினிவான் மறிக்கப்பட்டு, துடிதுடித்து வீழ்ந்து கிடப்பவன் மேலால் மினிவானை ஓட்டச் சொன்னான் ஒரு காடையன். சாரதி மறுத்த போது வானை உடைத்துவிடப்போவதாக மிரட்டினான். சாரதி மினிவானை எடுத்து வெட்டு வாங்கி வீழ்ந்து கிடப்பவனிற்கு மேலால் மினிவானைச் செலுத்தினான். சடக்கென ஏதோ முறிகிற சத்தம். அவன் துடிப்பு அடங்கியது. தமிழ் துடித்துக் கிடந்தது. மனிதமும் துடித்துக் கிடந்தது.

"ஐயோ" என்று குழறவேண்டும்போல் எனக்கு இருந்தது. எனக்கு என்ன உணர்வு வந்தது என்று எனக்கே தெரியவில்லை. கவலையான உணர்வு: ஆத்திரம், ஆவேசம், பயம், கலக்கம் எல்லாம் கலந்த உணர்வு.

புறக்கோட்டையில் பஸ் எடுத்து ஆமர் வீதிக்குச் சென்றோம். ஒரு பிக்கு. ஓட்டோ நிறைந்து- பொருட்கள் வெளியே தெரியுமாறு கொண்டு சென்றார். ரீ.வி., டெக் எல்லாம் அதற்குள் இருக்கக் கண்டேன். தமிழ் களவு போய்க்கொண்டிருந்தது. மனிதம் கொள்ளையடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

ஆமர் வீதியில் இருந்து நடந்து கிராண்-பாஸிற்குச் சென்றோம். வழியில் வீடுகள் பல உடைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. பலர் தூக்க இயலாமல் நிறையப் பொருட்களைத் தூக்கிச் சென்றார்கள்.

நான் வீடு அடைந்தேன். முஸ்லிம் நண்பர்கள் பிரிந்து விட்டனர். வீட்டில் அம்மா நின்றார். சிறிது நேரத்தில் அப்பா, அக்கா வந்தனர். அயலில் உள்ள சிங்கள மக்களும் முஸ்லிம் மக்களும் ஒருநாள் காப்பாற்றினார்கள்.

அருகில் ஒரு தமிழ் வீடு உடைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. உடைபட்டுக் கொண்டிருக்கையில் வானொலிச் சிங்களச் சேவையில், 'எங்கள் நாடு இந்த நாடு! சிங்கள மக்களின் சொந்த நாடு! மகாவலி கங்கை பாய்கிறது. மலை வளங்கள் நிறைகிறது.'

என்றொரு பாடல் கேட்டது.

பாடலை நிறுத்தி அரசாங்கம் ஊரடங்குச் சட்டம் என்றது. ஊரடங்குச் சட்டநேரத்தில் பொலிசும், இராணுவமும் காவல் நின்றது. காவல் நின்ற நேரத்தில் வீடுகள் உடைக்கப்பட்டன. கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

எம்மைப் பாதுகாத்தவர்கள் பயந்தார்கள். மற்றவர்கள் பயமுறுத்தினார்கள். ஒரு சிங்களக் குடும்பத்தின் உதவியுடன் முஸ்லிம் நண்பரின் வீடு வந்தோம். வந்த சிறிது நேரத்திலேயே பொலிஸ் வந்தது. "புலிகள் வந்திருக்கிறார்கள்!" என எம்மைப் பார்த்துச் சொன்னது. எம்மை விசாரிக்க வேண்டும். பொலிஸ் நிலையத்திற்கு வரச்சொன்னது. முஸ்லிம் நண்பரின் உதவியுடன் மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்திற்குச் சென்றோம். நாம் வானில் இருக்க அப்பா உள்ளே சென்றார். அப்பா சட்டம் தெரிந்தவர். சட்டத்தரணி.

அப்பா உள்ளேபோன சிறிது நேரத்தில் பலத்த குரலும், அடி விழுகிற சத்தமும் கேட்டன. அப்பா வாயிலிருந்து இரத்தம் ஒழுக, ஒரு பல்லில்லாமல் வந்தார். பதறிப் போனோம். அக்கா அழத்தொடங்கினார். அம்மா நெஞ்சில் கையை வைத்து ஏங்கிக் கொண்டிருநதார்.

அங்கிருந்த ஒரு வயதுபோன பெண்மணியிடம் அப்பா: "நான் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவன். உங்களுக்குத் தெரியும்தானே?" என்று கேட்டார். "நீ எதுவாக இருந்தாலும் இப்பொழுது தமிழன்!" என்றார் அப்பெண்மணி.

முஸ்லிம் நண்பரும் பயந்தார். ஆகவே அந்த வீட்டையும் விட்டு வெளிக்கிட வேண்டியதாயிற்று. எம்மிடம் ஒரு சூட்கேஸ் மட்டும் இருந்தது. கொஞ்சம் பெறுமதியான பொருட்கள் அதனுள்.

நாங்கள் ஒரு சேரிப்பக்கமாக நடந்தோம். நடப்பதற்கு அது ஒன்றே பாதையாக இருந்தது. வேறு வழி தெரியவில்லை. 'விதி விட்ட வழி எம் வாழ்வு' என்று நடந்தோம். இதற்கு மிஞ்சி இனி என்ன செய்வது? நடப்பது நடக்கட்டும்!

ஆபத்து எங்களைத் துரத்தியது. ஓடினோம். ஓடி ஒரு முஸ்லிம் வீட்டினுள் தஞ்சம் புகுந்தோம். அவர்கள் வீட்டின் பின் புறத்தைக் காட்டிவிட்டார்கள். பின்புறத்தில் ஆழமான கழிவு வாய்க்கால் இருந்தது. கழிவு வாய்க்காலினுள் நாம் குனிந்தபடி நின்றோம். அப்போது தப்பினோம்.

முஸ்லிம் நண்பர்கள் எங்களைச் சன சமூக நிலையம் ஒன்றில் சேர்த்தார்கள். சனசமூக நிலையத்திலிருந்து கொட்டாஞ்சேனை சென் பெனடிக்ட் கல்லூரி அகதி முகாமுக்குச் சென்று, அங்கிருந்து பிறகு கொட்டாஞ்சேனை மத்திய கல்லூரி அகதி முகாமுக்குச் சென்றோம்.

இருந்த அகதி முகாமுக்குள் "புலி இருக்கிறது," என்று கூறி விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டவர்கள் பிறகு வரவில்லை. இரண்டு மூன்று நாட்களுக்குள்ளேயே, "கொழும்புக்குள் புலிகள் வந்துவிட்டார்கள்!" என்று சிங்கள மக்கள் அச்சம் அடைந்து ஓடியபோது எமது முகாமிலிருந்து ஐந்து பேர் காணாமல் போய்விட்டார்கள். நான் அகதி முகாமில் இருந்து சில பொருட்கள் வாங்குவதற்காக வெளியே சென்றபோது வீதியில் நின்றிருந்த இராணுவம் என்னைக் கூப்பிட்டு, "நீ தமிழனா?" என்றது. நான் ஓம் என தலை அசைத்தேன். சடாரென முகத்தில் குத்து விழுந்தது. சட்டென கொழும்பு இருண்டு போயிற்று. கறுப்பாய்ப் போயிற்று. சாம்பல் கலந்த கறுப்பாய் ஆனது.

கொழும்புத் துறைமுகத்திற்கு ஒரு சரக்குக் கப்பல் வந்தது. நாங்கள் அதில் ஏற்றி அடைக்கப்பட்டோம். கொழும்புக்கு கை காட்ட மனமில்லாமலிருந்தது. கை அசைத்து விடை கொடுக்க சில மனிதர்களைத்தவிர வேறு எதுதான் இருந்தது? கறுத்துப் போன கடலில் கப்பல் ஊர்ந்தது.

ஒரு நாள் கழித்து திருகோணமலையைக் கடந்தது. திருகோணமலையைக் கண்டவுடன் கைகூப்பித் தொழுது உடம்பு புல்லரிக்க "எங்களின்ர நாடு" என்று கத்தினோம். அழுதோம். காற்றும் புதிதாக வீசியது. ஆழ்கடலிலும் வெள்ளைப் பறவைகள் தாழப்பறந்தன.

மறுநாள் கழித்து காங்கேசந்துறை துறைமுகத்தில் கப்பல் தரித்தது. இறங்கினோம். நிலத்தில் கால் பரந்தது.

அன்றுதான் எனக்கு முதன் முறையாக யாழ்ப்பாணம் என்ன நிறம் என்று தெரிந்தது.

♠♠

இந்தக் கதையை எனக்குச் சொன்னவன் **சி.செ.** அவனுக்கு நான் சொல்ல ஒரு வசனம் இருக்கிறது.

"அப்போது தஞ்சம் கோர யாழ்ப்பாணமாவது இருந்தது."

*-நன்றி: புலம்*

# உறவெனச் சொல்லடி



**புத்தகன்**

அவள் வருவாளென, வீட்டுக்கும் வாசலுக்குமாய் நடந்த வண்ணமிருந்தாள், பத்மா.

அவள் மீது ஆத்திரமில்லை. மாறாய், கொஞ்ச நாட்களாய் பரிவுதான் ஏற்பட்டது. கஷ்டப்படுகிறாள். ரொம்பக் கஷ்டப்படுகிறாள். வேலைக்குப்போய் வந்து சமைத்துக் கொட்டி வாழ்வது அவஸ்தைதான்.

சில வருடங்களுக்கு முன்பு முரண்டு பிடித்து அரக்கத்தனம் பண்ணியதெல்லாம் மனசில் இல்லாமல் இல்லை. அவளும், ரம்பம் அறுத்த ரணம் போல் மனசில் வைத்திருக்கலாம். அஞ்சினாள். அவளைப் பார்க்கவே வெட்கப்பட்டாள்.

"என்னம்மா, யாரோ வருவாங்க, சாக்லேட் குடுண்ணே! இன்னும் வரலையா? நான் விளையாடப் போவணும்மா."

நான்கு வயது அருணுக்குப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவள் வருவதை- எதிர்பார்த்து நிற்க அவஸ்தை.

"கொஞ்சம் பேசாம இருடா! என்னமோ விளையாடப்போறானாம். இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திருவாங்க. உங்க..." நிறுத்தினான்.

"யாரும்மா...?"

"வரும்போது சொல்றேன். பேசாம இரு."

ஒன்றும் புரியவில்லை அருணுக்கு. பாவம், அவனுக்கு என்ன தெரியும்? விளையாடப் போகும் அவசரம். கால்கள் நிலை கொள்ளாமல் தவித்தது.

மீண்டும் மீண்டும் கேள்வி கேட்டான்.

பத்மாவுக்கு எரிச்சல். அதே நேரம் அவளை எதிர்பார்ப்பதில் உள்ள சந்தோஷம்- கோபப்படவில்லை.

திடுமென மாறிப்போன மனசு பத்மாவுக்கு, 'விசாலம்' முகங்கூட பார்க்கப் பிடிக்காது. காய்ச்சலில் கிடந்த அருணுக்கு அவளால் உயிர்., பிளட் குரூப்கூட அருணை ஒட்டியதாம். அவள் மட்டுமில்லையென்றால், அருண் பிழைத்திருக்கமாட்டான்.

நடந்தவை அனைத்தும் கனவுப் பிரதேசத்தில் நடந்தவை போலவே இருந்தன.

கருணாகரன் எத்தனை சொல்லியும் கேட்கவில்லை பத்மா.

"எதேச்சையா நடந்திடுச்சு பத்மா... என்னால ஒண்ணுமே பண்ண முடியலை!"

எதையும் காதில் ஏற்றிக் கொள்ளத் தயாரில்லை பத்மா.

மனசுக்குள் கட்டி வைத்த 'புருஷக் கோட்டை' தகர்ந்து போனதாய் உணர்ந்தாள். வயிற்றில் ஏழு மாச கர்ப்பம். அருண் படுத்து, புரண்டு கொண்டு உபாதை கொடுத்தான். நெஞ்சுக்குள் நெருப்புக் கங்குகளை விழுங்கியதாய் எரிச்சல்.

'செத்துடணும். இனிமே இருக்கக் கூடாது' என நினைத்தவளுக்கு வயிற்றில் உருளும் குழந்தை 'நானொரு உயிர் இருக்கிறேன்' என்று ஞாபகப்படுத்தியது. எழுந்து உட்கார்ந்தாள். தன் கணவன் விசாலத்தைக் கைப்பிடித்த விஷயம் இவளைப் பற்றி எரியச் செய்தது.

"இனிமே என்னோட இருக்கக்கூடாது. எங்கேயாவது போயிடு, என் கண்முன்னாலேயே நிற்காதே!"

பத்மா அள்ளியெறிந்த வீச்சு- அவனை அதிரவே செய்தது. சமாதானம் ஆகும் என்றுதான் நாட்களை நகர்த்திப் பார்த்தான்.

அவள் பிடிவாதமாய் இருந்தாள், இனி அவனோடு வாழக்கூடாதென்று. அவனின் சம்பளத் தொகைகூட அருவறுப்பாய்த் தோன்றிற்று. இருப்பினும், சாப்பாட்டுக்கு என்ன செய்வது? நெஞ்சுக்கும் வயிற்றுக்கும் தூரம் அதிகமில்லை. இரண்டும் வேறு வேறு என்பதைச் சொன்னது. புழுங்கினாள். வாழ்ந்தாக வேண்டியதை உணர்ந்தாள்.

வருடம் நான்காகியும் இன்னும் கருணாகரனைப் பார்க்கத் துடிக்கவில்லை. இவளுக்குள் மரத்துப் போனாள். உணர்வுகளை எறிவது கூட சாத்தியமா? எனப் பட்டது கருணாகரனுக்கு.

'ஆமாம்' எனச் சொல்லாமல் சொன்னாள். பத்மா.

"மூஞ்சியிலேயே விழிக்கப்பிடிக்கலை. நிக்காதே என் கண் முன்னாலே" அவளின் பார்வைகூட வெறுப்பைச் சொன்னது. கோபத்தைப் பிரதிபலித்தது.

மனைவி, பத்மா வீட்டுப் பக்கம் கருணாகரன் வருவதில்லை.

விசாலத்துடன் வாழ்ந்தான். மனசார வருத்தங்களோடு.

விசாலத்திற்குப் பார்த்திருந்த மாப்பிள்ளை திருமணத்தின்போது செய்த அடாவடித்தனம் குறித்து பத்மா அறிவாளா?

கருணாகரன் நேரில் பார்த்து, அனுபவித்திருந்தான்.

"சொன்ன பவுனைக்காணோமா? யாரை ஏமாத்தறீங்க? எல்லாம் சட்டுப் புட்டுனு வைக்காம முழிச்சிட்டு நிக்கறீங்க!"

மாப்பிள்ளையின் பெற்றோர், ஆதரவு ஜாடைகள் காட்டினர். இன்னும்கூட, பேசத் தூண்டினர். திருமணக் கூட்டத்தில் சலசலப்பு.

மானம்போன அவஸ்தையில் விசாலத்தின் அம்மா அழுதாள். விசாலத்திற்கோ, சந்தை மாடாய் விலை போகிற அவஸ்தை. சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் நின்றதெல்லாம் பத்மாவுக்குத் தெரியுமா?

மாப்பிள்ளையின் பெற்றோர், வெடிக்காத குண்டாய்ப்போட்டு திருமணக் குண்டை வெடிக்க வைத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

நிர்க்கதியாய் விசாலம், 'இனிமே ஒரு நிமிஷங்கூட இருக்கமாட்டேன்' மனசுக்குள் நினைத்ததை முகத்தில் காட்டினாள்.

புரிந்துகொண்டவன்- சமாதானம் செய்து, தாலியையே இறுக்கிவிட்டான். அவன் செய்தது அவனுக்கே தெரிய நேரம்பிடித்தது. செய்த காரியம் நல்லதா? கெட்டதா? என்பதெல்லாம் விளங்காத உணர்ச்சிக்காரன்.

பத்மா காணாது போனாள் அந்த நிமிஷத்தில், குழந்தை வயிற்றிலிருப்பது காணாது போனது ஞாபகத்தில், தாம் கல்யாணம் ஆனவன் என்கிற நினைப்பே- கொஞ்சங்கூட இல்லாதுபோனது, விந்தையாய்ப் பட்டது. சிறிது நேரத்திற்கு பின்பு;

தாலிகட்டியாகிவிட்டது. எல்லாரும் பாராட்டினார்கள். விழித்தபடி- கனவா! நிஜமா! அறியாது விசாலம்.

நின்றிருந்த அம்மா அப்பாவுக்கும் கனவில் நடந்த திருமணமாகவே தெரிய ஆரம்பித்தது.

அழுதாள் விசாலம். விளங்காமல் விழித்தான் கருணாகரன்.

செய்தது தவறெனப் பட்டிருக்க வேண்டும். கட்டிய தாலியை எப்படி கழற்ற முடியும்? யோசித்தான்.

"மன்னிச்சிடு விசாலம்! அவசரப்பட்டுட்டேனோ!"

காதில் விழுந்த வார்த்தை கேட்டதும் அழுதபடியே அவன் காலில் விழுந்தாள். வார்த்தை அழுகையினூடே...

"என் தெய்வமே நீங்கதான்!...கோயில்-குளம் எதுவும் எனக்கு வேணாம்! நீங்கதான் எல்லாமும்... உங்க காலடியிலேயே காலமெல்லாம் பூசை பண்ணினாலும் நன்றி தீராது சாமி!"

அழுகை- விம்மிப் புடைத்து பிசிறலோடு வரும் அழுகை. கண்ணீர் கண்களில் கசிவு.

மனசுக்குள் மறுபடியும் ஈரம் சுரந்தது, கருணாகரனுக்கு.

செய்த காரியத்தில் தவறில்லை. இன்னொரு முனையில் அபாயம், பத்மா முகத்தில் எப்படி விழிப்பது? மனசு மாலுமியைத் தேடினான்.

நடந்த சம்பவம் காற்றில் கரைந்தது.

அவளின் காதுகளைத் தொட, விசாலம்- விசாலமாய் மனசுக்குள் உட்கார்ந்தாள். அவள்மீது கோபமில்லை. இவன் மீது இனந் தெரியாத கோபம். நல்லதா கெட்டதா இவன் செய்தது? அது பற்றியெல்லாம் இவள் கவலைப்படவும் இல்லை. யோசிக்கவும் இல்லை.

தெருமுனையில் விசாலம். மெதுவாய் நடந்து முன்னேறினாள்.

வாசலுக்கு வந்த பத்மா, அவசர அவசரமாய் அருணுக்கு விஷயம் சொன்னாள். படபடப்பு அடங்கவில்லை.

"டேய் அவுங்கதாண்டா உங்க சித்தி, இல்ல, உன் அம்மாவும் அவுங்கதான்."

அவனுக்கு விளங்கவில்லை. அலங்க மலங்க விழித்தான். என்ன சொல்கிறோம் என்பதுகூட அவனுக்குத் தெரியவில்லை. செடியின் தலைப்பில் பனங்காய் விஷயம் போன்றிருந்தது.

"டேய் அவுங்கதாம்பா உன் உசிர காப்பாத்துனவங்க. உனக்கு ஜுரம் வந்து, சாகக்கிடந்தப்ப... இரத்தம் உனக்கு 'ஓ' குரூப். என் இரத்தம் உனக்குப் பொருந்தல. உன் அப்பன் இரத்தம் 'ஓ' குரூப். குடுக்க சம்மதிக்கல நான். அவளை பரிசோதிச்சப்போ அதே 'ஓ' குரூப். அவளே முன்வந்து குடுத்தப்ப பேசாம இருந்ததாலதான் நீ பிழைச்ச" அவனுக்கு விளங்காத விஷயங்களைப் படபடத்தாள்.

"'ஓ' குரூப்னா என்னம்மா?"

சிரிப்பை அடக்கினாள். "இப்ப சொன்னாப் புரியாது. பெரிய பிள்ளையாகணும். இப்ப நான் சொல்றதை மட்டும் செய், என்ன?"

கட்டளையோடு, கைகளில் நாலைந்து சாக்லேட்களை வைத்து அழுத்திவிட்டு, "அவங்க கையிலே குடுத்திட்டு, கால்ல விழு. என்ன!"

விழித்தவனை விரட்டி விட்டாள்.

சரியாய் வீட்டிற்கு எதிரில் அவள் வரவும், இவன் மிட்டாய் கொடுக்கவும் சரியாய் இருந்தது.

அவள் விழித்தாள். பத்மாவின் குழந்தை எனத் தெரியும். 'யாருக்கோ கொடுக்கச் சொன்னதை, தனக்குக் கொடுக்கிறானோ?' எனச் சந்தேகித்தாள். பிஞ்சின்மீதான பிரியமான தவிப்பும் இல்லாமலில்லை.

"குடுடா! கால்ல விழு. சித்தி கால்ல!"

சத்தம் கதவோரம் நின்ற பத்மாவிடம் தான் என்பதை உணர்ந்தாள். மனசுக்குள் அருவி கொட்டல். மகிழ்ச்சியைப் பகிர நினைத்தாள்.

அருணின் தலையைத் தடவினாள். குனிந்து முத்தம் கொடுத்தாள். ஒரு மிட்டாயை எடுத்துக் அவனுக்கு ஊட்டிவிட்டாள். சந்தோஷப் பதற்றங்களினூடே..

"என்ன இன்னிக்கு?"- கடைக்கண் பத்மா வீட்டிலிருந்தது.

"டேய்! நாலாவது பிறந்தநாள் என்று சொல்லு!"

அருணைப் பற்றியபடி, பத்மாவின் படிக்கட்டுக்களைக் கடந்தபடி, சின்னப் புன்னகையோடு விசாலம்.

மனசுக்குள் சொல்ல முடியாத சந்தோஷ வெள்ளம் விசாலத்திற்கு! அழைப்பதற்கு வார்த்தைகளைத் தயார் செய்து கொண்டே பத்மா, கதவோரம் நின்றிருந்தாள். ●



படிப்பகம்

# நிகர் இல்லாதது

இழக்கக் கூடாதது
நல்ல நட்பு!

துறக்கக் கூடாததும்
நல்ல நட்பு!

மறக்கக் கூடாததும்
நல்ல நட்பு!

இறவாத நட்புக்கு
ஏது எல்லை?

குறையாத நட்புக்கு
ஏது அளவுகோல்?

காதலில் கூட
சுயநலம் மேலோங்கும்!

நட்பில்
பொது நலமே
என்றும் பூத்திருக்கும்!

காதலைவிட
நட்பு உயர்ந்தது!

காதலைவிட
நட்பு வலியது!

காதலில் காமம்
பசையாகிறது!

அந்தப் பசை இன்றியே
நட்பு ஒட்டிக்கொள்ளும்!

நட்பு
ஒரே பாலார் மத்தியிலும்
பூக்கலாம்!

எதிரெதிர் பாலார்
மத்தியிலும் மலரலாம்!

காதலுக்கும், நட்புக்கும்
இடையே கோடுகிழிக்க
தெரியாதவர்களுக்கு
காதலிக்கவும் தெரிவதில்லை.
நட்பாக இருக்கவும் முடிவதில்லை!

ஆணோ, பெண்ணோ
மனம் தெளிவில்லாதபோது
காதலிக்கவும் முடியாது
நட்பு வளர்க்கவும் இயலாது!

பலனை மட்டும்
நாடும்போது
நட்பு ஊனமாகிறது!

உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசும்போது
நட்பு கோணலாகிறது!

காக்கைகள் போன்ற
நண்பர்களும் இருக்கிறார்கள்!

பருக்கைகள் கிடைத்தால்
வட்டமிட்டுக் கொண்டே
இருப்பார்கள்.
புகழ்ந்து சத்தமிட்டுக்
கொண்டும் இருப்பார்கள்!



காயம் பட்டவனை
களத்தில் தள்ளிவிட்டு
ஓடும் குதிரைகளையும்
சில நண்பர்களுக்கு
உதாரணம் கூறுவதுண்டு!

பசை உள்ளவரையும்
பக்கத்தில் இருந்துவிட்டு
பசை காய்ந்ததும்
நடையைக் கட்டும்
சீவன்கள் அவர்கள்!

பூவோடு சேர்ந்த
நாரும்
மணம் பெறும்!

சில நண்பர்களோடு
சேர்ந்தால்
சேர்பவர்களுக்கு பெருமை!

"உன் நண்பர்கள்
யார் என்று சொல்,
உன்னைப் பற்றிக்
கூறுகிறேன்!"
என்பது அனுபவ மொழி!

பூக்களோடு நேசமா?
அன்றில் சாக்கடைப்
புழுக்களோடு நேசமா?
என்பதை வைத்து
எடைபோட்டு விடலாம்!

பூக்கள் ஒருபோதும்
காயப்படுத்தாது!

பூக்கள் ஒருபோதும்
கல்லாக மாறாது!

பூக்கள் ஒருபோதும்
அம்பாக மாறாது!

பூக்கள் ஒருபோதும்
மூக்கை சுளிக்கவைக்காது!

பூக்களை மணப்பவனுக்கு
வாசனை வேறுபாடுகள்
தெரியாமல் போகாது!

சாக்கடைப் புழுக்களையே
முகர்ந்து கொண்டிருந்தால்
நல்ல மணம்கூட
மூக்கில் ஏறாது!

நல்ல நண்பர்கள்
பூக்கள் போன்றவர்கள்!

மற்றவர்கள்
சாக்கடைப் புழுக்கள்!

துரியோதனின் பாதை
தவறு!
துரியோதனின் கொள்கை
தவறு!

# இலக்கிய நயம்

தெரிந்தும் கூடவே
இருந்தவன் கர்ணன்!

களத்தில் அவனை
தந்திரத்தால் வென்றனர்!

நட்புக் களத்தில்
மட்டும் அவனை
வெல்ல எந்த தந்திரமும்
பலிக்கவில்லை!

சகோதர பாசத்தையும்
அங்கு வென்றது
நட்பு!

நண்பனுக்காக
சகோதரர்களை எதிர்த்து
களம் புகுந்த
நட்பின் இலக்கணம்
கர்ணன்!

ஒரு தீய நட்பை
இழப்பதற்காக
எந்தத் தியாகத்தையும்
செய்யலாம்!

ஒரு நல்ல நட்பை
இழந்தால்
எந்தத் தியாகத்தாலும்
பெறமுடியாது!

பல நூறு பகைவரது
பகையை
தேடிக்கொள்ளலாம்,
ஆனால், ஒரு

நல்ல நட்பை மட்டும்
தொலைத்துவிடாதே!

அருமையான நட்பு
ஒன்று உனக்கு
கிடைத்துவிட்டால்
ஆயிரம் யானைப் பலம்
உனக்கு வந்துவிடுகிறது!

அமைச்சர்
எடுத்து உரைக்க,
மன்னன்
முகம் மலர்ந்தது!

"அருமையானதும்
நட்புத்தான்!
ஆளமறியாமல்
காலை விட்டால்
கடுமையானதும்
நட்புத்தான்!"
என்றான் மன்னன்!

"அருமையானதும்
நட்புத்தான்!
நாம் செய்யும் செயலுக்கு
அரிய காவலானதும்
நட்புத்தான்!
நட்புக்கு நிகராக
வேறு ஏது உண்டு?!"
என்றார் அமைச்சர்.
மன்னன் புரிந்தான்.

"செயற்கரிய யாவுள நட்பின்
—அதுபோல்
நினைக்கரிய யாவுள காப்பு"
அதிகாரம்79, குறள்: 781.

தருவது ரசிகன்

## ஸ்போர்ட்ஸ்

## அவுஸ்திரேலிய அணி பயணம்

வருகின்ற செப்டெம்பர் மாதம் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. இது பாகிஸ்தானில் டெஸ்ட், மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது.

இதற்கு முன்னதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை மேலாளர் ரிச்சர்ட் வட்சன் மற்றும் அணியின் மனேஜர் ஸ்டீவ் பேர்னாட் ஆகியோர் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து தமது வீரர்களின் பாதுகாப்பு குறித்து, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் உயர் அதிகாரியான மஜீத்கானுடன் விவாதிக்கவுள்ளனர்.

கடந்த முறை பாகிஸ்தான் சென்ற அவுஸ்திரேலிய வீரர்களை பாகிஸ்தான் இரசிகர்கள் கல் போன்றவற்றால் கடுமையாகத் தாக்கினர். அதுபோன்ற அசம்பாவிதங்கள் இம்முறையும் நடக்கக்கூடாதென்று கருதித்தான் இந்த நடவடிக்கையில் அவுஸ்திரேலியா கிரிக்கெட் சபை இறங்கியுள்ளது.

இது குறித்து ஒரு முழுமையான ஒப்பந்தம் கையொப்பமானால்தான் அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தானுக்கு விளையாட வரும் என்பது இப்போது உறுதியாகியுள்ளது.

## முத்தரப்பு போட்டிகள்

இலங்கை கிரிக்கெட் அணி இப்போது இங்கிலாந்திற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, கவுண்டி அணிகளுடன் விளையாடி வருகிறது. இதேவேளையில் இலங்கை அணிக்கு முன்னதாக தென்னாபிரிக்க அணி இங்கிலாந்து சென்று அங்கு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது.

தென்னாபிரிக்கா-இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான டெஸ்ட் போட்டிகள் முடிவடைந்ததும், தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, இலங்கை ஆகிய மூன்று நாடுகளுக்கிடையே முத்தரப்பு ஒருநாள் சர்வதேச போட்டிகள் நடைபெறவுள்ளன. முத்தரப்பு ஒருநாள் போட்டிகள் பற்றிய விபரம் இதோ:

ஒகஸ்ட் 14 இலங்கை எதிர் தென்னாபிரிக்கா.
ஒகஸ்ட் 15 பிரத்தியேக நாள்.
ஒகஸ்ட் 16 இலங்கை எதிர் இங்கிலாந்து.
ஒகஸ்ட் 17 பிரத்தியேக நாள்.
ஒகஸ்ட் 18 இங்கிலாந்து எதிர் தென்னாபிரிக்கா.
ஒகஸ்ட் 19 பிரத்தியேக நாள்.
ஒகஸ்ட் 20 இறுதிப் போட்டி.
ஒகஸ்ட் 21 மேலதிக நாள்.

## கோலாலம்பூரில் போட்டிகள்

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் மலேஷியாவின் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் கிரிக்கெட் போட்டிகளில் டெஸ்ட் விளையாடும் 9 நாடுகளுடன் சேர்த்து மேலும் 7 நாடுகள் கலந்து கொள்கின்றன.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட இச்சுற்றுப் போட்டிகள் ஏ,பி,சி,டி என 4 பிரிவுகளில் நடைபெறவுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் 4 அணிகள் பங்கேற்கின்றன.

'சி' பிரிவில் தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், வட அயர்லாந்து, பார்படோஸ் ஆகிய அணிகள் உள்ளன. இப்பிரிவில் விளையாடும் தென்னாபிரிக்க அணியின் கேப்டனாக சகலதுறை ஆட்டக்காரர் ஷோன் பொல்லொக் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இப்போது தென்னாபிரிக்க அணியின் கேப்டனாக இருக்கும் ஹன்ஸி குரோஞ்ச் மற்றும் சிரேஷ்ட வீரர்களான அலன் டொனால்ட், கேரி கேர்ஸ்டன், ஜொன்டி ரோட்ஸ், டரில் கல்லினன் ஆகியோர் இப்போட்டிகளில் கலந்துகொள்ளமாட்டார்கள்.

அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் முக்கியமான வீரர்களுக்கு காயங்களோ வேறு அசம்பாவிதங்களோ நடந்து விடக்கூடாது என்பதற்காக இவர்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் நிர்வாக இயக்குநர் அலிபாச்சர் தெரிவித்துள்ளார்.

## இந்தியா—ஸிம்பாப்வே மோதல்

இந்தியா-ஸிம்பாப்வே அணிகளுக்கிடையே ஒரு டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகள் யாவும் ஸிம்பாப்வேயில் நடைபெறுகின்றன.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மூன்றும் செப்டெம்பர் 26ம் திகதி தொடக்கம் 30ம் திகதி வரை நடக்கிறது. ஒக்டோபர் 2ம் திகதி தொடக்கம் 4ம் திகதி வரை ஸிம்பாப்வே பிரசிடென்ட் லெவன் அணியுடன் 3 நாள் போட்டியில் இந்திய அணி ஹராரேயில் விளையாடும். ஒக்டோபர் 7ம் திகதி முதல் 11ம் திகதி வரை ஒரு டெஸ்ட் போட்டி ஹராரேயில் நடக்கிறது.

மிகக் குறுகிய கால சுற்றுப்பயணமாக இருக்கும் இப்போட்டிகளில் பங்குகொள்ள இந்திய அணி செப்டெம்பர் 24ம் திகதி புறப்பட்டு ஒக்டோபர் 12ம் திகதி நாடு திரும்புகிறது.

# சிந்தியா பதில்கள்

★ இரகசியத்தை காக்க முடியாதவர்களை எப்படிக் கண்டுபிடிப்பது?

ஜெ. பரணிதரன், கந்தளாய்.

நீங்கள் சொன்ன இரகசியம் பரகசியமாவதை வைத்துக் கண்டுபிடிக்கலாம்!

நான்கு பெண்கள் ஒன்றாக அமர்ந்து அந்தரங்க விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தனர். முதல் பெண்:

"எனக்கு சூதாடுவது பிடிக்கும். அவ்வப்போது என் வீட்டு பட்ஜெட்டில் இப்படி சூதாடியே செலவழித்துவிடுவேன்!" என்றாள்.

இரண்டாவது பெண்: "எனக்கு சூதாடுவது பிடிக்காது. மது மட்டும் சாப்பிடுவேன். என் கணவருக்கு இது தெரியாது."

மூன்றாவது பெண்: "நான் எப்போதாவது 'அந்த விஷயங்களில்' கொஞ்சம் பணத்தை இழப்பேன். அவ்வளவுதான்!" என்றாள்.

அப்போது அங்கிருந்த நாலாவது பெண் பேச ஆரம்பித்தாள்: "எனக்கு எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை. ஆனால் மற்றவர்களின் இரகசியங்களை என் மனதில் வைத்திருக்கத் தெரியாது. சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்லவில்லையானால் எனக்கு தலையே வெடிச்சுப்போகும் அவ்வளவுதான்!" என்றாள்.

★ சிந்தியா! சார்க் மாநாட்டு விசேஷம் அங்கே எப்படியிருக்கிறது?

கே. இந்திராணி, தலவாக்கலை.

தலைநகர மாநாடு முடியும்வரை வெளியே தலைகாட்டவே தயக்கமாக இருக்கிறது!

★ சிந்தியா! இடம் அறியாமல் பேசுவது என்றால் என்ன?

வி. ரகுமான், புதிய காத்தான்குடி.

சிறைக்காவலர்களைத் தேர்ந்தெடுக்கும் ஒரு தேர்வு நடந்தது. தேர்வுக்கு வந்திருந்த ஒருத்தரிடம் சிறை அதிகாரி கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தார்.

"இந்தச் சிறையில் இருக்கும் குற்றவாளிகள் மிகக் கொடியவர்கள். இவர்களை எப்படிக் கட்டுப்படுத்துவாய்?" என்று கேட்டார்.

அதற்கு அவர் சொன்னது:

"என்னுடைய வார்த்தைக்கு கட்டுப்படாமல் எவனாவது நடந்தால் மறுநொடியே அவனை வெளியில் துரத்திவிடுவேன்!"

★ நல்ல புத்தி சொன்னாலும் என் நண்பனுக்கு ஏறவே மாட்டேன் என்கிறது? என்ன செய்ய?

கா. மனோகர், கொழும்பு-09.

முதலில் உங்கள் புத்தி பத்திரம். இந்தக் கதையைக் கேளுங்கள்:

ஓர் ஆசிரியர் மாணவர்களை மூன்று விதமாகப் பிரித்தார்.

பெட்ரோல் சீடன்.

மண்ணெண்ணெய் சீடன்.

விளக்கெண்ணெய் சீடன்.

நெருப்பை தூரத்தில் காட்டினாலும் பெற்றோலில் பிடித்துக் கொள்ளும். அதுபோல ஒரு குறிப்புக் காட்டினாலே புரிந்து கொள்ளக் கூடியவன் பெட்ரோல் சீடன்.

நெருப்பை மண்ணெண்ணெயில் போட்டால்தான் பற்றிக்கொள்ளும். இந்த ரக சீடன் புரியும்படி சொன்னால் புரிந்துகொள்வான்.

ஆனால் விளக்கெண்ணெயில் நெருப்பைக் காட்டினால் விளக்கெண்ணை விழுந்து நெருப்பையே அணைத்துவிடும். இந்த ரக சீடனுக்கு போதிக்க ஆரம்பித்தால் குருவின் அறிவே கெட்டுவிடும்!

★ சிந்தியா! சார்க் தலைவர்கள் வருகையின் போது இனப்பிரச்சனைபற்றி ஆராயப்படுமா?

எம். ரொபின், வவுனியா.

படாது!

★ இந்தியப் பிரதமர் வாஜ்பேயி கொழும்பில் நல்வாக்குச் சொல்வாரா?

சி. குருபரன், மட்டக்களப்பு.

அவர் என்ன ஜோசியரா? இல்லை. யோசனை உள்ளவர். அதனால் அடக்கித்தான் வாசிப்பார்!

★ தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்களே? உண்மையான காரணம் என்ன?

ஆர். ஜெகதாஸ், கொழும்பு-05.

என்ன காரணமாக இருந்தாலும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் என்ற காரணம்தான் நீண்டகாலம் உரிய ஆதாரம் காட்டாமல் தடுத்து வைக்கப்பட காரணம்!

★ என்ன சிந்தியா! விஜய் எங்கள் சம்பந்தியாகி விட்டாரே? அவரது வருங்கால மனைவியின் பெயர் யாதோ?

எஸ். பதுருன்நிஷா, பாணந்துறை.

சங்கீதா!



சிம்ரான்

★ அரசியலில் அரிச்சந்திரர்கள் இருக்க முடியுமா?

ஏ. தயானந்தன், சிலாபம்.

சுடுகாட்டைக்கூட தங்கள் சொத்தாக மாற்ற விரும்புவார்களே தவிர, சுடுகாட்டுக்குப் போக விரும்பமாட்டார்கள்!

★ புலிகளுக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

கோ. சிவபாலன், யாழ்ப்பாணம்.

அவர்கள் போரிடுகிறார்கள்! அவர்கள் போரிடுவதில் இவர்கள் குளிர்காய்கிறார்கள்! இவர்கள் இல்லாமல் அவர்கள் இருக்கலாம், அவர்கள் இல்லாமல் இவர்கள் இருக்கமுடியாது!

★ சிந்தியா! சமீபத்தில் படித்து பிரமித்தது?

எம். உஷ்மான், தெகிவளை.

அமெரிக்காவில் ஒரு தம்பதியினர் 24 மணிநேரம் இடைவிடாது முத்தம் கொடுத்து சாதனை படைத்துள்ளனர். உதடுகளோடு உதடு பதித்தபின்னர் ஒரு விநாடிகூட அவற்றை எடுக்கக்கூடாது. நின்றுகொண்டேதான் இருக்க வேண்டும். இடைவேளை கிடையாது போன்ற இனிய நிபந்தனைகளுடன் சாதனையை படைத்துவிட்டனராம். இதற்காக 16 ஆண்டுகள் பயிற்சி செய்தார்களாம். (என்ன நீங்களும் பிரமித்துப் போனீர்களா?)

★ சிந்தியா! இன்றைய நடிகைகளில் அழகானவர்கள் யார்?

செல்வி இ. சிநேகா, கம்பஹா.

மேக்கப்புக்கு முன்பா, மேக்கப்புக்கு பின்பா! (மே.மு.,மே.பி)

★ சிந்தியா! ஒரு கிசுகிசு கதை சொல்லுங்களேன்?

எம். நிலானி, கண்டி.

குழந்தையைப் பார்த்துக்கொள்ள ஒரு பெண் வீட்டு வேலைக்குச் சேர்ந்தாராம். ஆனால் ஒரே நாளில் வேலையைவிட்டு வந்துவிட்டார்.

"ஏன் வேலையை விட்டு வந்தாய்?" என்று கேட்டதற்கு,

"பையன் நல்ல சுறுசுறுப்பாகத்தான் இருக்கிறான். அவனுடைய அப்பாதான் ரொம்பச் சோம்பேறியாக இருக்கிறார். அதனால்தான் வேலையை விட்டு விட்டேன்!"

★ சிம்ரானின் காதலர் யார்?

எஸ். விஜயன், திருமலை.

தற்போதைக்கு ராஜுசுந்தரம். பிரபுதேவாவின் சகோதரர்! நடனம் கற்றுக்கொடுப்பதில் ஆரம்பித்து எதுவெல்லாமோ கற்றுக் கொடுக்க காதல் பொத்துக்கொண்டு வந்து விட்டதாம்!

★ அமைச்சர்கள் சிலர் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட மறுத்துவிட்டார்களாமே! ஏன்?

வி. ஜவாஹர், பதுளை.

"என்ன சித்திரகுப்தா! எதற்கு இந்த ஆளை நாற்காலியில் அமர்ந்தபடி அழைத்து வந்தாய்?"

"மன்னிக்க வேண்டும் பிரபு! இவர் ஓர் அமைச்சர். ஆயுள் முடியும் நேரத்தில் இவர் பதவியில் இருந்தார். நான் எவ்வளவு கஷ்டப்பட்டும் இவருடைய உயிரைப் பிரிக்க முடிந்ததே தவிர, இவரையும் நாற்காலியையும் தனியாகப் பிரிக்க முடியவில்லை!"

# திருமறை தரும் பொது நெறி 20

ஆண்டவர் தனது மக்களான இஸ்ரயேலர்களுக்குப் பெரிதும் துணை புரிந்தார். அவர்களுக்குத் துன்பங்கள் நேரிட்ட போதெல்லாம் அவற்றை உடனுக்குடன் நீக்கி அருளினார்.

மோசேயின் மாமனாரான இத்திரோவிடம் ஆண்டவர் தங்களுக்கு அருளிய அளப்பரிய உதவிகளையெல்லாம் பற்றி மோசே கூறினார். இத்திரோவும் ஒரு அர்ச்சகர் என்பதனால் ஆண்டவருக்கு எரிபலி பூசையை நடத்தினார். இஸ்ரயேல் மக்கள் தலைவர்களையும் தன்னுடனிருந்து உணவருந்துமாறு கேட்டுக்கொண்டார்.

# பத்துக் கட்டளைகள்

மாபெரும் சமுதாயமாகக் குடிகிளம்பிச் செல்லும் இஸ்ரயேல் மக்களிடம் பலதரப்பட்ட பிணக்குகள் அவ்வப்போது தோன்றவே செய்தன. இவ்வாறான பிணக்குகள், சாதாரணமான- சிறு பிணக்குகளாக இருந்தாலும்- பெரிதாகவிருந்தாலும்- எல்லாவற்றுக்கும் நியாயம் கேட்டு மோசேயிடமே மக்கள் ஓடி வந்தனர். இதனால் இரவு பகல் ஒரு போதுமே ஓய்வே இல்லாமல் மோசே பணிபுரிய நேர்ந்தது.



## கடமைகள் பகிர்ந்தளித்தல்

மோசே படும் துன்பத்தை அவதானித்த அவர் மாமனாரான இத்திரோ, பல உபாயங்களைக் கூறினார். கடமைகளைப் பகிர்ந்தளிக்குமாறு தனது மருமகனைக் கேட்டுக் கொண்டார்.

மக்கள் சமுதாயத்திலிருந்து அறிவாற்றல் மிக்க நல்லவர்கள், இறைவன்மீது பயபக்தியுடையவர்கள், செய்யும் நற்பணிகளுக்கு கைமாறு கருதாதவர்கள், நம்பிக்கையும் நாணயமுமானவர்களைத் தேர்ந்தெடுக்குமாறு மோசேயை இத்திரோ கேட்டுக்கொண்டார். அவ்வாறு தெரிவானவர்களை- ஆயிரம் பேர் கொண்ட குழுவுக்கு ஒருவரைத் தலைவராகவும், நூறு பேர், ஐம்பது பேர் மற்றும் பத்துப்பேர் கொண்ட குழுக்களுக்கு ஒவ்வொருவரைத் தலைவராகவும் நியமிக்குமாறு சொன்னார். அவ்வாறு தெரிவானவர்களுக்கு மோசேயும் இத்திரோவும், செயலாற்றும் முறைகளைப் பயிற்றுவித்தனர். இதனால் மோசேக்கு பெரும் ஆறுதலாகவிருந்தது. சிறிய குழுக்களின் தலைவர்களால் நியாயத் தீர்ப்பு வழங்க முடியாத வழக்குகள் மட்டுமே மோசேயின் முன் கொண்டுவரப்பட்டன.

எகிப்திலிருந்து இஸ்ரயேலர்கள் புறப்பட்டு மூன்றாவது மாதம் முதல் நாளன்று சீனாய்ப் பாலைநிலத்தை வந்தடைந்தனர். அங்குள்ள மலையடிவாரத்தில் கூடாரங்களை அமைத்தனர். ஆண்டவரிடம் ஆணைகளைப் பெறுவதற்காக மோசே மலையின்மீதேறிச் சென்றார். ஆண்டவர் மோசேயிடம் பல கடமைகளை- மக்களிடம் தெரிவிக்குமாறு கூறினார். ஆண்டவரின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு உடன்படிக்கைகளை ஏற்று நடந்தால் அவர்களை தனது மக்களாகவே என்றும் ஆண்டவர் ஏற்பதாகவும் அறிவித்தார்.

மலையிலிருந்து இறங்கிவந்த மோசே மக்கள் தலைவர்களை அழைத்து ஆண்டவரின் விருப்பத்தைத் தெரிவித்தார். அவர்களும், "ஆண்டவரின் ஆணையை மீறமாட்டோம்! அவர் விருப்பப்படியே நாம் அனைவரும் நடப்போம்!" என்று வாக்களித்தனர். இது நடந்த மூன்றாவது நாளில் மக்கள் அனைவரும் கேட்கக்கூடியதாக சீனாய் மலையில் கார்மேகமாக வந்து பேசப்போவதாகவும் ஆண்டவர் கூறினார்.

மக்களனைவரும் தங்களுடைய உடைகளையெல்லாம் கழுவித் தம்மையும் தூய்மையாக்கிக் கொண்டனர். மூன்று நாட்களுக்கு எவரும் உடலுறவு கொள்ளலாகாது என்றும் மோசே கேட்டிருந்தார்.

## மலைமீது இறங்கிய கர்த்தர்

ஆண்டவர் வந்திறங்கப்போகும் மலையைச் சுற்றி மக்களனைவரும் நிற்கக் கூடிய வகையில் கயிறுகள் கட்டப்பட்டன. மக்களோ கால்நடைகளோ, அங்கு அமைக்கப்பட்ட கயிற்றின் எல்லையைத் தாண்டி மலையினைத் தொடலாகாது என்றும் கட்டளையிடப்பட்டிருந்தது. அக்கட்டளையை மீறுபவர்கள் மரணிப்பர் என்றும் எச்சரிக்கப்பட்டது.

மூன்றாம் நாள் அதிகாலையில் பேரிடி ஓசை எழுந்தது. மின்னலும் வெட்டியது. மலையின் மேல் கருமேகம் வந்து கவிழ்ந்து கொண்டது. சீனாய் மலை முழுவதும் தீப்பிளம்பாகக் காட்சியளித்தது. எங்கும் புகை மூட்டம் சூழ்ந்தது. மோசே மக்களின் கூடாரத்திலிருந்து மக்களை வெளிவருமாறு அழைத்தார். அவர்களில் எவரேனும் வரம்புமீறி மலையில் ஏறிவிடாமலிருக்கப் போதுமான பாதுகாப்புக்கள் செய்யப்பட்டிருந்தன. எக்காள ஒலியும் பேரொலியாக எழுந்து எதிரொலித்தது. பூமியே அதிர்வது போன்றிருந்தது.

ஆண்டவர் மோசேயிடம், அவர் சகோதரரான ஆரோனையும் அழைத்துக்கொண்டு மலைமேல் வரச் சொன்னார். வேறு எவரும் மலைமேல் ஏறக்கூடாது என்றும் எச்சரித்தார்.

மலையின் உச்சியிலிருந்து இஸ்ரயேல் மக்கள் அனைவரும் தெளிவாகக் கேட்கக் கூடியவாறு ஆண்டவரின் குரல் கேட்டது. அக்குரலும் இடியோசை போல் கேட்டபோதும், குரல் கேட்ட அனைவரையும் கவர்ந்து வசீகரிக்கும் புனிதமான ஒலியாகவே கேட்டது. ஆண்டவரின் குரல் ஒலிக்கத் தொடங்கியதும் சுற்று வட்டாரத்தில் எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது.

## பத்துக் கட்டளைகள்

ஆண்டவரின் குரலில் எழுந்த பத்துக் கட்டளைகளும் வருமாறு:

1. எகிப்து நாட்டிலிருந்தும், அடிமை வாழ்விலிருந்தும் உன்னை விடுவித்த ஆண்டவராகிய நாமே உன் கடவுள்!
நமக்கு முன்பாக வேறு தேவர்களை நீ கொண்டிராதிருப்பாயாக!
வானத்திலும் பூமியிலும் கீழுள்ள ஒப்பான ஓர் உருவத்தையேனும்- யாதொரு விக்கிரகத்தையேனும் நீ வணங்காதிருப்பாயாக!
2. உன் கடவுளாகிய ஆண்டவரின் திருப்பெயரை வீணாய்ச் சொல்ல வேண்டாம்!
3. ஓய்வு நாளைப் பரிசுத்தமாய்க் கொண்டாடி நினைவு கூர்வாயாக!
4. உன் தந்தையையும் தாயையும் மதித்து நடப்பாயாக.
5. கொலை செய்யாதிருப் பாயாக!
6. விபசாரம் செய்யாதிருப்பா யாக!
7. களவு செய்யாதிருப்பா யாக!
8. உன் அயலானுக்கு விரோதமாய்ப் பொய்ச் சாட்சி சொல்லா திருப்பாயாக!
9. பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக!
10. உன் அயலானின் உடைமைகளை விரும்பாதிருப்பாயாக.

●●●

கிறிஸ்துவுக்கு 1250 ஆண்டுகளுக்கு முன்னர் ஆண்டவரால் அருளப்பட்ட திருச்சட்டங்கள்- இன்று- மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் உலக மக்கள் சமுதாயம் அனைத்துக்கும் பொதுவான சட்டங்களாகவே உள்ளன. இனிமேல்வரும் காலங்களிலும் இவை மனித சமுதாயம் அனைத்துக்குமான பொது விதிகளாகவே சிரஞ்சீவியாக- நிலை பெற்றிருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

காலத்துக்குக் காலம் நடைமுறைகளில் சிலபல மாற்றங்கள் அவ்வப்போது எழுந்தபோதிலும், மேற்கூறப்பட்ட பத்துக்கட்டளைகளின் அடிப்படையில் மாற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

மோசே ஆண்டவரிடமிருந்து மேற்கூறப்பட்ட திருச்சட்டங்களைப் பெறுவதற்கு முன்னரும் உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்ந்த மக்கள் பல்வேறு மார்க்கங்களைக் கடைப்பிடித்திருந்தனர். இந்தியாவிலும் ஏனைய பலநாடுகளிலும் விக்கிரக வணக்கம் நிலை பெற்றிருந்தது. இறைவனைத் துதிப்பதற்கு மனத்தை ஒரு நிலைப்படுத்துவது அவசியம். இதற்காக ஓர் உருவத்தை மனதில் பதித்தாக வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் விக்கிரகங்கள் தோன்றின.

எடுத்துக்காட்டாக, இந்து மதத்தை எடுத்துக்கொண்டால், ஒன்றுக்கு மேற்பட்ட விக்கிரகங்கள் ஆலயங்களில் வைத்துப் பூசைகள் நடத்தப்படுகின்றன. இருப்பினும், இந்து மதத்தின் அடிப்படையில், 'உருவமற்ற அருவமே இறைவன்' என்ற தத்துவம்தான் உண்மையானது. இவ்வாறு படைக்கப்பட்ட விக்கிரகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆழமான தத்துவம் உண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆகவே இறைவனால் மோசேயிடம் வழங்கப்பட்ட பத்துக் கட்டளைகள் இன்றைய நிலையில் பொருத்தமற்றது என்று எவரும் வாதிட முற்படுவது பொருத்தமாகாது.

பரிசுத்த வேதாகமத்தை தமது வேதமாகப் போற்றும் கத்தோலிக்கத் திருச்சபையும் விக்கிரக ஆராதனையை ஒதுக்கவில்லை என்பதைத் கருத்தில் கொள்வது பொருந்தும்.

இறைவனால் அருளப்பட்ட கட்டளைகளின் சுருக்கத்தைத்தான் நாம் தந்துள்ளோம். உலகியல் ரீதியாக அனைவரும் கடைப்பிடிக்கக் கூடிய விளக்கங்களும் அருளப்பட்டுள்ளன. மனிதன் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய சகல துறைகளையும் இத்திருச்சட்டங்கள் பூரணமாகக் கொண்டுள்ளன.

□□□

கர்த்தரால் அருளப்பட்ட கட்டைளைகளை மோசே இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்துக்கு எடுத்துக் கூறி விளக்கமும் தந்தார்.

மக்கள் அனைவரும் அத்திருச்சட்டங்களை ஏற்று, அவற்றிலிருந்து எக்காலத்திலும் மாறாதிருப்பதாக ஒரே குரலில் வாக்களித்தனர்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 18 விடை:** படைகள் நைல் நதியில் மூழ்கின.

**பரிசு பெறுவோர்:**

1. **எம்.ஏ. ரஸாக்,** 21, மின்சார நிலைய வீதி, காத்தான்குடி.
2. **சி. சுதாகர்,** 21, வைத்தியசாலை வீதி, மன்னம்பிட்டி.
3. **செல்வி ஜி. செல்வ மேரி,** 3ம் வட்டாரம், நிலாவெளி, திருகோணமலை.
4. **செல்வி ஜி. சுகிர்தா,** மானிப்பாய் வீதி, கைதடி மேற்கு, யாழ்ப்பாணம்.
5. **சரஸ்வதி நாகேஸ்வரன்,** வடக்கு பூண்டுலோயா, மேல் பிரிவு, பூண்டுலோயா.

**திருமறை 20 வினா:-** ஆண்டவர் வந்திறங்கிய மலை எங்கே உள்ளது?

ஆகஸ்ட் 08க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 20—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : சார்க் நாடுகள் |
| தொழில் | : மாநாடு நடத்துவது |
| உபதொழில் | : தீர்மானங்கள் இயற்றுவது. |
| பொழுதுபோக்கு | : உட்பூசல்கள். |
| சாதனை | : தீராத பூசல்கள் |
| சோதனை | : பூசல்களிடையே புன்னகைக்க வேண்டியிருப்பது. |
| கூறுவது | : நடுநிலை |
| நாடுவது | : சார்பு நிலை |
| நம்புவது | : கடனுதவிகளை |
| நம்பாதிருப்பது | : சுயமுயற்சிகளை |
| கலந்திருப்பது | : வறுமையும், கொடுமையும் |
| வளர்ந்துவருவது | : தீராத பிரச்சனைகள். |
| அபிவிருத்தி | : குழந்தை உற்பத்தியில் மட்டும். |
| எதிர்கால இலட்சியம் | : உலக வங்கியிடம் கையேந்துவது. |

# 'கரு'ணாநிதி ஆட்சி



**கா.பூ.க:** வணக்கம்! கலைஞரே! உங்கள் ஆட்சிக்கு ஆபத்து இல்லைபோல் இருக்கிறதே?

**கலைஞர்:** பாறைபோல உருண்டுவந்து, பனிப்புகார்போல விலகிப்போய் விட்ட ஆபத்தைக் கண்டு பகலவன் சிரிக்கிறான். சில பகல் வேஷக்காரர்கள் சினக்கிறார்கள்!

**கா.பூ.க:** கலைஞரே! பாரதிய ஜனதா கட்சி பதவிக்கு வந்தால் நாட்டுக்கு கேடு என்றீர்கள். அந்த ஆட்சியை கவிழ்க்க செல்வி எடுக்கும் முயற்சிகளை ஏன் கண்டிக்கிறீர்கள்?

**கலைஞர்:** நாட்டுக்கு கேடு என்று கூறியதாக சில பத்திரிகைகள் திரித்து கூறியதற்கு நான் எப்படி பொறுப்பாக முடியும்? நாட்டுக்கு கேடாகிவிடக்கூடாது என்று தான் கூறினேன்.

**கா.பூ.க:** அப்போதே ஏன் மறுக்கவில்லை?

**கலை:** எல்லாவற்றையும் மறுப்பது என்றால் எதையும் தாங்கும் இதயத்தோடு பொறுப்பது என்ற அண்ணாவின் இலட்சியம் என்னாகும்? அதுதான் பொறுத்துக் கொண்டேன்.

**கா.பூ.க:** பாரதிய ஜனதா பண்டாரங்களின் கூடாரம் என்று உங்கள் கட்சியினர் கிண்டல் செய்தார்களே?

**கலை:** பண்டாரங்களின் கூட்டம் என்றார்களே தவிர, பண்பாடு அற்றவர்களின் கூட்டம் என்று கூறவில்லை. ஆனால் செல்வி ஜெயலலிதாதான் அந்த பண்பற்ற வார்த்தையை இன்று பகன்று கொண்டிருக்கிறார் என்பதை பாரதிய ஜனதா அறியாமல் இருக்காது!

**கா.பூ.க:** பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் உங்களைப் புகழ்ந்துள்ளாரே?

**கலை:** அவர் என் நீண்ட கால நண்பர்.

**கா.பூ.க:** உங்களுக்கு குறும் கால நண்பர்களே கிடையாதா?

**கலை:** என் வயது எழுபத்தைந்து என்பதால், நீண்ட நெடிய தொலைவு நான் நடந்து வந்துவிட்ட காரணத்தால், எல்லோருமே நீண்ட கால நண்பர்களாக இருக்கிறார்கள்.

**கா.பூ.க:** அப்படியானால் செல்வி ஜெயலலிதா...?

**கலை:** என் நீண்டகால நண்பர் எம்.ஜி.ஆரின் நண்பியாக இருந்திருக்கிறார் என்று சொல்லலாம்.

**கா.பூ.க:** வை.கோ. மீண்டும் தி.மு.கவில் இணைவாரா?

**கலை:** மாட்டார் என்று நான் சொல்லமாட்டேன்? கழகம் ஒரு ஜனநாயக அமைப்பு. நான் மட்டும் முடிவு கூறுவது சரியல்ல.


**கா.பூ.க:** வை.கோ.வையும் ஜெயலலிதாவையும் மோதவைக்கத்தானே வை.கோ. மீண்டும் கழகத்தில் என்று வதந்தி பரப்புகிறீர்கள்?

**கலை:** என் உற்றாரின் மரணவீட்டுக்கு அனுதாபத் தந்தி அடிக்கக்கூட நேரம் கிடைக்கவில்லை. தந்தி அடிக்கவே முடியாத என்னை வதந்தி பரப்பும் ஆளாகக் கருதி கேள்வி தொடுக்கலாமா?

**கா.பூ.க:** கலைப்பு நடக்காது என்று உறுதியாக நம்புகிறீர்களா?

**கலை:** வயிற்றிலே உள்ள கருவும் கலைப்பு நடக்காது என்ற நம்பிக்கையில்தானே வளரத் தொடங்குகிறது. அப்படித்தான் இந்த கருணாநிதியின் ஆட்சியும்! ■

# ஆடாத தலைகள்



**கா.பூ.க:** என்னப்பா, முத்துத்தம்பியர், மாகாண சபை எலக்ஷன் கதை எப்படிப் போகுது?

**மு.த:** நடக்குமென்பார் நடக்காது. நடக்காது என்பார் நடந்துவிடும் என்ற கதையாக, எதிர்க்கட்சிக்கு கண்ணாமுச்சி காட்டுகினம்.

**க.சா:** செம்மணிப் புதைகுழிக்கு விசாரணை நடத்த உத்தரவாமல்லோ?

**மு.த:** அது என்ன விசாரணை? சட்டுப்புட்டென்று தோண்டிப் பார்க்கிறதை விட்டுப் போட்டு, ஏன் சுற்றி சுற்றி வருகினம்?

**க.சா:** அதுதானே, கட்டியிருக்கிற வீட்டை இடிச்சே ஆயுதம் தேடுகிறவை, வெறுசாக் கிடக்கிற நிலத்தை தோண்ட ஏன் இந்தச் சுற்று சுற்றுகினம்.

**மு.த:** சுத்துகினம் போலத்தான் கிடக்கு. நல்லா சுத்துகினம்!

**க.சா:** அதென்ன, சூரியகந்தையை மட்டும் அம்மையார் நேரில் போய் நின்று பார்த்து தோண்டினவர். செம்மணியை மட்டும் புலனாய்வாளரை மட்டும் நம்பி பொறுப்புக் கொடுத்திருக்கினம்?

**மு.த:** விஷயம் தெரியாமல் பேசவேண்டாம். தமிழ் சனத்தை புலிகளிடமிருந்து விடுவிப்பதுதான் நோக்கம் என்று கூறினவையே தவிர, புதைகுழியிலிருந்து விடுவிப்பது நோக்கம் என்று கூறினவையோ, இல்லை தானே.

**க.சா:** நாடாளுமன்றத்தில் தமிழ் எம்.பி.கள் முழங்கியிருக்கினம்?

**மு.த:** முழங்கினது சரி, பதிலுக்கு அரச தரப்பார், விசாரணை நடக்கும் என்று பட்டும் படாமல் கூறும்போது, ஏன் பாருங்கோ உடனே தோண்டிப் பார்க்க என்ன தடை? என்று ஏன் கேட்காமல் இருந்தவை?

**க.சா:** பிரச்சனையை கிளப்பியதும் ஐ.தே. கட்சிதானே. அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்?

**மு.த:** அப்படிக் கேளும். பச்சைக் கட்சியினர் அஸ்வரைத் தள்ளிவிட்டுப் போட்டு கப்சிப்பாக இருந்திருக்கினம். ரணிலார் முச்சுக் காட்டவில்லை! இதுவே தென்பகுதியில் நடந்திருந்தால் பச்சைக் கட்சியின் முக்கிய தலைகள் என்ன ஆட்டம் ஆடியிருக்கும்? நாங்கள் கிளறவில்லை, எங்கள் கட்சியிலுள்ள தமிழ் பேசும் பிரதிநிதிகள்தான் பிரச்சனை கிளப்பினவை என்று பேரினவாதிகளுக்கு காரணம் சொல்ல வசதியாகத்தான் நடந்து கொண்டிருக்கினம்!

**க.சா:** கை குடும் ஐ.சே. உற்றுப்பார்த்து பொட்டுக் கேடுகளை கண்டுபிடிச்சுப் போடுகிறீர்! குட்! வெரிகுட்! ■

# பேச்சாளர் பேரம்பலம்



யாழ் மாநகரசபை போன்ற மாதிரிக் கட்டடம் ஒன்றை கொழும்பில் நிறுவி, இங்கிருந்தே நிர்வாகத்தை நடத்த உத்தேசித்துள்ளமை, அங்கு இராணுவத்தினர் இருப்பதாலேயே தவிர வேறு யாருக்காகவும் அல்ல என்பதை இங்கு என் பாதுகாப்புக்காக நிற்கும் இராணுவத்தினர் முன்னிலையில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். படையினர் பாதுகாப்பு கடமையில் இருப்பர் என்று சொல்லப்பட்டதேதவிர, நிற்பர் என்று நாம் நினைக்கவில்லை. அவர்கள் கடமையில் இருப்பதை நாம் கண்டிக்கவில்லை. நிற்பதையோ கண்டிக்கிறோம்.

காதிலை பூ கந்தசாமி




அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

3 செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


# உள்வேலை



→ இன்று மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் அழகு மிகுந்த அமைப்புகளாக உருவெடுத்தமைக்கும் கட்டடக்கலையை மனிதன் தன் சிந்தனை ஆற்றலால் விருத்தி செய்தமைதான் காரணம்.

ஐரோப்பிய நாடுகளில் 1500ம் ஆண்டுகளில் கட்டடக்கலையில் மறுமலர்ச்சிகள் ஏற்பட்டன.

இத்தாலியில்-ரோமாபுரியில் 'பாரோக்கு' என்றொரு கட்டடப் பாணி உதயமாகியது.

ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினால் போற்றப்பட்ட இக் கட்டடப்பாணி பின்வந்த ஒரு நூற்றாண்டுக்குள் ஐரோப்பா முழுவதும் பரவியது.

இருப்பினும் பல்வேறு நாடுகளில் வளர்ச்சியுற்ற கட்டடக் கலைப்பாணிகளை ஒன்றிணைத்த புரட்சிகரமான மாற்றம் 1800ம் ஆண்டுகளில்தான் பரிணமித்தது எனலாம்.

பாரிஸ் நகரில் இன்றும் அழகு குன்றாமல் காட்சிதரும் இம் மாளிகை 1861ம் ஆண்டு கட்டடக்கலை நிபுணரான சாள்ஸ்காணியர் என்பவரால் வடிவமைக்கப்பட்டது.

கலை நுணுக்கம் மிகுந்த படிக்கட்டமைப்புக்களும் வளைவுகளும் 'பாரோக்கு'ப் பாணியின் அம்சங்களையே அதிகமாகக் கொண்டிருக்கிறது. முன்பு பிரசித்தி பெற்றிருந்த பாரிஸ் இசை-நாடகக் கழகம் இங்குதான் இயங்கியது.

உற்றுப்பாருங்கள் ஒரே தளத்தில் எத்தனை விதமான கட்டட அமைப்புக்கள் பாருங்கள். எத்தனை நுட்பமாக உருவாக்கியிருக்கிறார்கள் பார்த்தீர்களா!




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

5 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


# முள்மேனி

↓ இது முள்ளம்பன்றி மீன். பொதுவாக வெப்ப வலய நாடுகளில் காணப்படும். பெயருக்கேற்ற மாதிரி இதன் உடலில் கூர்மையான முட்கள் காணப்படுகின்றன.


இவை சாதாரண மீன்களைப் போல் நீரில் நீந்தித் திரியும். ஆனால் இதனை உணவாகக்கொள்ள வேறு பெரிய மீன்கள் அணுகினால், உடனடியாக ஒரு பதுங்குமிடத்தைச் சென்றடைந்து விடும்.

இந்த அவகாசத்தில் கூடிய அளவு காற்றினை உள்ளிழுத்துத் தனது உடலை உப்பவைத்துக் கொள்ளும்.

அதுவரை அதன் உடலோடு ஒட்டினாற் போலிருக்கும் முட்களும் பருத்துப் பயங்கரத் தோற்றத்தை ஏற்படுத்தும். இதனைப் பிடிக்க வந்த பெரிய மீன் இத்தோற்றத்தைக் கண்டு பயந்து ஒடி விடும்.

முள்ளம்பன்றி மீன்களில் 15 வகைகள் உண்டென்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவை 25 முதல் 30 செண்டிமீட்டர் நீளம் வரை வளரும்.





# பாரம்பரியம்

↑ உலகிலேயே மிகவும் சுறுசுறுப்பாக இயங்கும் துறைமுகம் என்று கணிக்கப்படுவது சிங்கப்பூர். தென்கிழக்காசியாவில் மலாயாத் தீபகற்பத்தின் தென்முனையில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரு சிறிய தீவுதான். இருப்பினும் அமைதிக்கும் தூய்மைக்கும் செல்வச் சிறப்புக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. சிங்கப்பூர் ஒரு நகர நாடு. இது ஒரு தனித் தேசம். ஆக 573 சதுர கிலோமீட்டர் பரப்பளவினைக் கொண்டது. மூலவளங்கள் எதுவுமற்ற போதிலும், செல்வச்சிறப்புடன் மேலோங்கி நிற்கிறது.

ஏறத்தாழ 30 இலட்சம் மக்கள் இங்கு வாழ்கிறார்கள். சீனர்கள், மலாய்க்காரர்கள் மற்றும் இந்தியர்கள் (இலங்கையைச் சேர்ந்தவர்களையும் உள்ளடக்கிய) ஆகியோர் மிக ஒற்றுமையாக இங்கு வாழ்கிறார்கள். சீனர்களின் நடனக்கலை நிகழ்ச்சியில் பங்கேற்கும் இரு கலைஞர்களின் தோற்றத்தை படம் காட்டுகிறது.

'டைகர் பாம் கார்டன்' என்றொரு காட்சிச் சாலை இங்குண்டு.

டைகர் பாம் கார்டனிலுள்ள கலை அரங்கில் நடைபெற்ற சீன நடன நிகழ்ச்சிதான் இது.

# மெத்து மெத்து

↓ உலகின் எல்லா நாடுகளிலும் முயல் காணப்படுகிறது. இருப்பினும் இவற்றில் பல்வேறு இனங்கள் காணப்படுகின்றன. காடுகளில் வாழும் இனங்களைவிட வீட்டு வளர்ப்பு முயல்ரகங்கள் தனியான குணாதிசயங்களை உடையவை.

தூய்மையும் அழகும் கொண்டவையாக வளர்ப்பு முயல்கள் காணப்படுகின்றன.

ஐரோப்பிய நாடுகளில் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்பெயினிலும் போர்த்துக்கல்லிலும் மட்டுமே முயல்கள் காணப்பட்டன.

ரோமர்கள்தான் இவற்றை ஐரோப்பாவின் ஏனைய நாடுகளில் பரப்பினர் என்று கூறப்படுகிறது. ரோமர்கள் முயல்களை உணவுக்காகவே வளர்த்து வந்தனர்.

படத்தில் காணப்படுவது சாதாரண அங்கோரா முயல் எனப்படுவது. இதன் உரோமங்கள் மிக மென்மையானவை. பருத்திப் பஞ்சுபோல் மிக மென்மையான இவற்றை நூலாகத் திரித்து ஆடைகள் நெய்யப்படுகின்றன.

இதற்காகவே அங்கோரா முயல்களை பண்ணைகளில் வளர்க்கிறார்கள்.



# வித்தை



↘ இவர் ஒரு ஜால வித்தைக்காரர். ஆனால் மாயாஜால வித்தைக்காரரல்ல. இடைவிடாத பயிற்சியினால் கற்றுக் கொண்ட ஆற்றல்மிக்க கலையை முதலாக வைத்துப் பிளைப்பு நடத்துகிறார்.

இரு கைகளில் மூன்று உருட்டுக்கட்டைகள். ஒன்று மாறி ஒன்றாக கைகளில் வந்து சேரத்தக்கதாக இடைவிடாமல் அக்கட்டைகளை மேலே வீசி வீசிப் பிடிக்கிறார். அதுமட்டுமல்லாமல் ஒரே சக்கரத்தைக் கொண்ட சைக்கிளிலும் வளைந்து வளைந்து ஓடுகிறார்.

↑ இத்தகைய இரு அசாதாரண ஜால வித்தைகளையும் ஒரு வரே-ஒரேவேளையில் புரிவதென்பது மிகமிக கடுமையானதொன்றுதான்.

கட்டைகளை வீசிப் பிடிப்பதற்கு கைகளும் கண்களும் மிக நுணுக்கமான முறையில் ஒத்துழைக்க வேண்டும். அதே நேரத்தில் கால்களும் சைக்கிள் பெடல்களை மிதிக்க வேண்டும். உடலின் பல அங்கங்களும் மனமும் ஒரே நிலைப்பாட்டுடன் ஒத்துழைத்தால்தான் இவ்வாறு வித்தை சாத்தியப்படும். இவர் உண்மையிலேயே கில்லாடிதான்.

# 2வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி சேஸனா மகாலிங்கம் NORWAY

மகாலிங்கம்- புஸ்பராணி (கலா) தம்பதியினரின் செல்வப் புதல்வி சேஸனா {SESHANA} தனது இரண்டாவது பிறந்த தினத்தை 05.08.98 அன்று NORWAY-OSLO வில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை NORWAY யில் வசிக்கும் அன்பு அப்பா, அம்மா மற்றும் ராசன்மாமா, ராசன்மாமி, மோகன்மாமா, லிங்கன் மாமா, ஜீவா அன்ரி, மோகனா அன்ரி, சுகன் சித்தப்பா, LONDON இல் வசிக்கும் பெரியப்பா குடும்பத்தினர், சித்தப்பா குடும்பத்தினர், FRANCE இல் வசிக்கும் மாமா, மாமி குடும்பத்தினர் மற்றும் இலங்கையில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, லாமினி அன்ரி, பாமினி அன்ரி, கணேஸ் மாமா, கணேஸ் மாமி, அபிராமி மச்சாள், அருந்ததி மச்சாள் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மஹாமாரி அம்மன் அருளால் பேரும் புகழும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: திரு.சின்னையா, (அம்மப்பா)

# பூரிப்பு

↘ உதைப்பந்தாட்டம், கிரிக்கெட் போட்டிகள் ஆண்களின் விளையாட்டு, ஆண் ரசிகர்களால் மட்டுமே விருப்பப்படுவது என்பதெல்லாம் மலையேறிப்போச்சு.

விளையாடுவது ஆண்களாக இருந்தாலும் விழுந்து விழுந்து பெண்களும் ரசிக்கும் விளையாட்டுக்களாகிவிட்டன. பெண் ரசிகைகளுக்கு உள்ளம் கவர்ந்த சூப்பர் ஸ்டார்கள் இருக்கிறார்கள். பெண் ரசிகைகளை கவரும் வேகத்தில் ஆண் வீரர்களுக்கு தனியான உற்சாகம் பீறிட்டுக் கிளம்புகிறது. தங்கள் பராக்கிரமத்தை காண்பிக்க ஆவல் கொள்கிறார்கள்.

ஆக, ஆண்கள் பங்குகொள்ளும் விளையாட்டுக்கள் பெண் ரசிகைகளால் வர்ணமயமாகி வருகின்றன. சமீபத்தில் ஃபிரான்ஸ் உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளை அழகிய ரசிகைகள் வர்ணமயமாக்கினார்கள். வீரர்களுக்கும் இரட்டிப்பு உற்சாகம். ஆண் பார்வையாளர்களுக்கும் கொண்டாட்டம்.

இப்போதெல்லாம் பெண்கள் கிரிக்கெட், உதைப்பந்து போட்டிகள் நடைபெற்றாலும் கூட பெண்கள் ஆண்களின் விளையாட்டைத்தான் இரசிக்கிறார்கள்.

